# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 27 ஞாயிற்றுக்கிழமை (13.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 352


# தமிழர் தாயகம் எங்கும் தேர்தலன்று துக்கதினம்

## கரிநாளாக அனுஷ்டிக்க அழைப்பு

யாழ்ப்பாணம்,நவம்பர்13

**ஸ்ரீலங்காவின் ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமையை தமிழர் தாயகம் எங்கும் கரிநாளாக - துக்கதினமாக - அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.**

**தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக அடக்கி ஒடுக்கிவரும் சிங்கள அதிகார மையத்தின் மற்றொரு தெரிவுக்காக நடத்தப்படும் இந்த வாக்களிப்பை தமிழ் மக்கள் முற்றாகப் புறக்கணிப்பதுடன் அன்றைய நாளைத் துக்கதினமாகக் கடைப்பிடித்து தனிவழிபோகும் தமிழினத்தின் ஸ்திரமான நிலைப்பாட்டைப் பறைசாற்றுமாறு தமிழர் பிரதேச பொது அமைப்புகள் பலவும் கோரிக்கை விடுத்திருக்கின்றன.**

வாக்களிப்பு தினத்தை துக்கதினமாகவும் கரிநாளாகவும் அனுஷ்டிப்பது என்று யாழ். மாவட்ட பொதுஅமைப்புகளின் ஒன்றியம் தீர்மானித்திருக்கின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அன்றைய தினம் வீடுகளில் தங்கி இருந்து வாக்களிப்பை முற்றாகப் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் ஒன்றியம் கேட்டுள்ளது.

வடக்கில் இயங்கும் பொது அமைப்புகள் பலவும் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரும் அறிக்கைகளையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டு வருகின்றன.

கிழக்கிலும் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் கோரிக்கை வலுவாக ஒலித்துவருகிறது. வாக்களிப்பு தினத்தை துக்கதினமாக - கரி நாளாக - அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு - அம்பாறை தமிழ்த்தேசிய ஒற்றுமை ஒன்றியம் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருக்கிறது.

(ஐ-3)

## பாதுகாப்புக் கருதி யாழ்ப்பாணத்திலும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள்

### தேர்தல் ஆணையாளரின் அனுமதியுடன் ... பாடு

யாழ்ப்பாணம், நவ.13

எதிர்வரும் வியாழனன்று நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்காக யாழ். மாவட்டத்தில் கொத்தணி முறையிலேயே வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கொத்தணி நிலையங்களிலேயே வாக்களிப்பு நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார். யாழ்.மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் ஏற்பாடுகள் குறித்து அரச அதிபரிடம் கேட்டபோது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

தேர்தல் வாக்களிப்பு ஏற்பாடுகள் குறித்து அவர் உதயனுக்குத் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். கிளிநொச்சி, மருதங்கேணி ஆகிய பகுதி வாக்காளர்களுக்காக முகமாலையில் 103 வாக்களிப்பு நிலையங்கள் அமையும். ஏனைய பிரதேசங்களில் 117 பாடசாலைகளில் 521 வாக்களிப்பு நிலையங்கள் கொத்தணி அடிப்படையில் அமைக்கப்படும்.

பாதுகாப்பு வழங்குவதில் பொலீஸாருக்கு சிக்கல்கள் இருப்பதாலும் பாதுகாப்பு நிலைமை சீரில்லை என்பதாலும் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்து அவரின் அனுமதியுடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி வாக்காளர்கள் வாக்களிப்பதற்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளில் திருப்தி ஏற்படுவதை உறுதி செய்யவேண்டும் என்று நீதிமன்றம் கருதியதால், தெற்கில் இருந்து தேர்தல் பணியாளர்களை அனுப்பத் தேர்தல் ஆணையாளர் முடிவு செய்தார்.

அதன்படி கொழும்பில் இருந்து 215 ஊழியர்கள் வருகின்றனர். அவர்கள் ... க்களிப்பு

(24ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தாக்குதல் சிப்பாய் காயம்

வவுனியா,நவ.13

வவுனியா, கணேசபுரம் பகுதியில் உள்ள படையினரின் காவலரண் மீது நேற்று நண்பகல் 1.20 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடந்தவேளை காவலரணில் இரு சிப்பாய்கள் பணியில் இருந்தனர். அவர்களில் குமாரதுங்க என்ற சிப்பாய் காயமடைந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். (24ஆம் பக்கம் பார்க்க)

## நேரடி விவாதம் இல்லை

கொழும்பு, நவ.13

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நாளை நடைபெறவிருந்த நேரடி விவாதம் கைவிடப்பட்டுள்ளது.

விவாதத்தை ஒழுங்கு செய்வதற்காக பிரதமர் தரப்பில் நியமிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.அழகப்பெருமவும் ரணில் விக்கிரமசிங்க தரப்பில் நியமிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் மிலிந்த

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி-பிரதமர் சந்திப்பு

கொழும்பு,நவ.13

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நாளைமறுதினம் இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பின் போது கட்சி அரசியலில் அடிப்படைவாதிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று பிரதமரிடம் ஜனாதிபதி கோருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்சந்திப்பை அடுத்து ஜனாதிபதி தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு முக்கிய உரையை நிகழ்த்தவிருக்கின்றார். (ஐ-3)

## வாகரையில் உழவு இயந்திரம் கிளைமோர் கண்ணியில் சிக்கியது! முஸ்லிம்கள் இருவர் பலி! ஐவர் காயம்!!

மட்டக்களப்பு, நவ.13

மட்டக்களப்பு வாகரையில் கிரிமிச்சை என்னும் இடத்தில் நேற்று அதிகாலை 2-மணியளவில் இடம் பெற்ற ஒரு கிளைமோர் குண்டு வெடிப்பில் முஸ்லிம்கள் இருவர் பலியாகினர்; ஐவர் காயம் அடைந்தனர்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த ஏழுபேர் உழவு இயந்திரம் ஒன்றில் சென்று களவாக மரங்களைத் தறித்து ஏற்றிக்கொண்டு திரும்பிய வழியில் அவர்கள் பயணம் செய்த உழவு இயந்திரம் கிளைமோர் கண்ணியில் சிக்கியது என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் அகமட்லெப்பை ஆதம் பாவா(வயது45), சாகுல்முகமட் தாரிக் (வயது 25) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஏனையோர் காயங்களுக்குள்ளாகினர்.

இச்சம்பவம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம் பெற்றிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர். ஆனால் இந்தச் சம்பவம் தமது பகுதிக்குள் இடம்பெறவில்லை என விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

இரண்டு தரப்புகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் இந்தக் கிளைமோர் கண்ணி மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று ஒரு தகவல் தெரிவித்தது.

வேறுதாக்குதல் நோக்கங்களுடன் இந்தக் கண்ணி அங்கு ஒளித்து வைக்கப்பட்டிருந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ஐ-3)

## திருமலையை புயல் தாக்கும் அறிகுறி; முன்னேற்பாடுகள் பற்றி ஆராய்வு

திருகோணமலை,நவ.13

திருகோணமலையில் புயல் அபாயம் உருவாகும் பட்சத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

திருகோணமலையை புயல் தாக்கும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதை அடுத்தே இந்த முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இது தொடர்பான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டம் சம்பூர் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில், அடுத்துவரும் ...ரங்களில் திருமலை மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் இருப்பதாக வானிலை அவதான நிலையம் விடுத்த எச்சரிக்கை தொடர்பாகவும், மக்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார். (ஐ-12)

## வாக்களிப்பு நிலைய முகவர்களை வேட்பாளர் எவரும் நியமிக்கவில்லை

### யாழ்.தேர்தல் மாவட்டத்தில் இந்த நிலை

யாழ்ப்பாணம், நவ 13

எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 13 வேட்பாளர்களும் யாழ்ப்பாணத்தில் அமையவுள்ள வாக்களிப்பு நிலையங்களில் தங்கள் சார்பில் பணியாற்றும் முகவர்களை இதுவரை நியமிக்கவில்லை என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்ட முகவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

எஸ்.விஷ்னுகாந்தன் என்பவரை ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார். இது குறித்து தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் மூலம் இருவரும் அறிவித்துள்ளனர். ஏனைய வேட்பாளர்கள் யாழ்.மாவட்டத்துக்கான முகவர்களை இன்னும் நியமிக்கவில்லை.

அத்துடன் ஒவ்வொரு தொகுதிகளுக்கான முகவர்களையும் வேட்பாளர்கள் இன்னும் நியமித்து கடிதம் சமர்ப்பிக்கவில்லை என்றும் -

வாக்காளிப்பு நிலையங்களில் பணிபுரியும் முகவர்களின் விவரங்களும் தரப்படவில்லை என்றும் -

தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

மக்கள்மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சிறையிலிருந்து கைதிகள் மீட்கப்பட்ட சம்பவம்: கண்காணிப்புக் குழுவினர் நேரில் விசாரணை

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.சிறைச்சாலையிலிருந்து கைதிகள் இருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை சிறைச்சாலைக்குச் சென்ற யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதிகள் அங்கு கைதிகள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கூடத்தைப் பார்வையிட்டனர். அத்துடன் கைதி கள் கடத்தப்பட்ட சம்பவத்தின் போது அங்கு கடமையில் இருந்த சிறைச்சாலை ஊழியர்களிடமும் சம்பவம் பற்றிக் கேட்டறிந்தனர்.

இதேவேளை -

கைதிகள் கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து சிறையில் உள்ள ஏனைய கைதிகளைப் பார்வையிடுவதற்காக நேற்று சிறைச்சாலைக்கு வருகைதந்த உறவினர்கள் நீண்டநேரமாகச் சிறைச்சாலைக்கு வெளியே காத்திருந்ததைக் காணமுடிந்தது. கைதிகளைப் பார்வையிடுவதற்காக வந்தவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் - தீவிர சோதனைகளின் பின்பே - உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

கைதிகள் கடத்தப்பட்டது தொடர்பாக எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக யாழ். சிறைச்சாலை ஆணையாளருடன் உதயன் செய்தியாளர் தொடர்புகொள்ள பல தடவைகள் முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை. அவர் செய்தியாளர்களுக்குத் தகவல் தெரிவிக்க முன்வரவில்லை.

(ஐ-8-7)

## பரிசில் நாள்

சாவகச்சேரி,நவ.13

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசில்நாள் நிகழ்வு இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் பாடசாலை அதிபர் வ.கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பரிசில் நாள் நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் கி.கயிலைநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி நா.சத்தியநாதனும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளையும் கலந்துகொள்வர்.

மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி பூபதிஅம்மா கயிலைநாதன் வழங்குவார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஐ-31)

## மாகாண மட்டப் பரீட்சை

பாடசாலைகளில் ஒன்பதாம் தர வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான மாகாண மட்டப் பரீட்சைகள் எதிர்வரும் 29ஆம் திகதி அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகள் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் அந்தந்த வலய அலுவலகத்தினால் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(3-117)

### யாழ்.பல்கலைக் கழகத்தில்

## முதுகலைமாணி பட்டம் பெறுவதற்கு விரைவில் புதிய கற்கைநெறிகள்

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடத்தின் கீழ் இரண்டு புதிய கற்கைநெறிகள் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

'பிரதேச திட்டமிடலும் அபிவிருத்தியும்', 'அபிவிருத்தி' ஆகிய துறைகளில் முதுகலைமாணி (எம்.ஏ) பட்டம் பெற வசதியாக இந்தப் புதிய நெறிகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

ஒருவருட காலக் கற்கைநெறியாக அமையவுள்ள இக்கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிகளுக்கான வகுப்புகள் கிழமை நாள்களில் மாலை நேரங்களிலும் சனி, ஞாயிறு விடுமுறை நாள்களிலும் நடத்தப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் எந்தப் பாடத்தில் பட்டம் பெற்றிருந்தாலும் இக்கற்கை நெறிகளில் இணைந்துகொள்ளமுடியும்.

தமிழ், இந்து நாகரிகம் - சைவ சித்தாந்தம் ஆகிய துறைகளில் முதுகலைமாணி கற்கைநெறிகளை ஆரம்பிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரியவந்தது. (3)

# பளையில் இயங்கும் காவல்துறையின் பணிமனைக்கு அதிக முறைப்பாடுகள்

### யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வந்து பதிவு

யாழ்ப்பாணம்,நவ.13

பளையில் இயங்கும் தமிழீழக் காவல்துறையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் தினமும் பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பாகப் பாதிக்கப்பட்டோர் இந்த முறைப்பாடுகளைப் பதிவுசெய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதில் ஸ்ரீலங்கா பொலீஸார் அசமந்தமாக இருப்பதால் பொதுமக்கள் தமிழீழக் காவல்துறையினரிடம் முறையிட முன்வருகிறார்கள் என்று தமிழீழ காவல்துறையின் யாழ்.மாவட்டப் பணிமனைப் பொறுப்பாளர் சண்முகநாதன் ரகு தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் வேண்டுகோளை அடுத்து யாழ். மாவட்டத்துக்கான காவல்துறைப் பணிமனை கடந்த மாதம் 26ஆம் திகதி பளையில் திறந்துவைக்கப்பட்டது. அன்று முதல் இங்கு முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குடாநாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்கள் சம்பந்தமாக தினசரி 50 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்படுகின்றன. அவற்றுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்படுகிறது.

- இவ்வாறு சண்முகநாதன் ரகு மேலும் தெரிவித்தார்.

(ஐ-13)

# சிலாபம் பகுதி மீனவரின் சடலமே தொண்டைமானாறில் ஒதுங்கியது!

### சகோதரர் நேற்று அடையாளம் காட்டினார்

யாழ்ப்பாணம்,நவ.13

தொண்டைமானாறு கடற்கரையில் கடந்த வியாழக்கிழமை கரையொதுங்கிய சடலம் சிலாபம் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சிலாபம் குருசுப்பாட்டைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராமசாமி யூட் செல்வராஜா(வயது 48) என்பவருடைய சடலமே அது என்று இனங்காணப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த சடலத்தை அவரது சகோதரர் அடையாளம் காட்டினார்.

கடந்த சனிக்கிழமை சிலாபத்தில் இருந்து சக கடற்றொழிலாளர்களுடன் கடற்றொழில் செய்வதற்காகத் தலைமன்னாருக்குச் சென்றார் என்றும் -

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தலைமன்னார் கடற்பிரதேசத்தில் படகு ஒன்றின் மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது திடீரென கடலில் வீழ்ந்து காணாமற்போயிருந்தார் என்றும் -

அவரது சகோதரன் தெரிவித்தார். சடலம் அடையாளம் காணப்பட்டதை அடுத்து அவரது சொந்த ஊரான சிலாபத்திற்கு சடலத்தை எடுத்துச் செல்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ-7)

# போர்க்கால வாழ்க்கை முறைக்கு திரும்புகின்றனர் திருமலை மக்கள்

திருகோணமலைப் பகுதியில் படையினரின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் அதிகரிக்கப்பட்டு வரும் அதே வேளை இங்கு இடம்பெற்று வரும் சோதனை நடவடிக்கைகளும் தேடுதல் நடவடிக்கைகளும் மக்களை கிலிகொள்ள வைத்துள்ளன. குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான மூதூர் கிழக்கு மற்றும் மூதூர் தெற்கு பகுதிகளுக்குச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் அதிகரிக்கப்பட்டு வரும் அதேவேளை இங்கு இடம்பெற்றுவரும் மறைமுகமான பொருளாதார கட்டுப்பாடும் இந்தப் பிரதேச வாசிகள் மத்தியில் பெரும் சஞ்சலத்தை உருவாக்கியுள்ளன.

போர்க்கால சூழலின்போது பொலித்தீன் பையில் லாம்பெண்ணையையும் ஏனைய உணவுப் பொருள்களையும் கொண்டு சென்றது போன்ற நிலை மீண்டும் உருவாகிவிடுமோ எனவும் இவர்கள் அச்சம் கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை, கடந்த காலங்களில் மூதூர் கிழக்கு பகுதிக்கு 24 மணி நேரமும் இந்தப் பகுதியினூடாக கட்டைபறிச்சான் இராணுவ காவலரணைக் கடந்து மக்கள் பயணம் செய்யக்கூடியதாக இருந்தது. தற்போது இரவு ஏழு மணிவரை மட்டுமே இந்தப் பகுதிக்கான பயணத்தினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் பாதுகாப்புத் தரப்பினரை இது பற்றிக் கேட்டாலோ நாம் எந்தவிதத் தடையினையும் விதிக்கவில்லை. ஆனால், காவல் நடவடிக்கைகளை அதிகரித்து வருகிறோம் எனத் தெரிவிக்கின்றனர் 'நீ அழுவது போல் அழு நான் அடிப்பது போல் அடிக்கிறேன்' என்ற கதையாகவே இது அமைந்துள்ளது

இதற்கிடையே திருகோணமலைக்கும் மூதூருக்கும் இடையிலான கடற் பயண சேவை தொடர்பாக இந்தப் பகுதி வாசிகள் சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்து வருகின்றனர். திருகோணமலைக்கும் மூதூருக்கும் இடையில் 'சேருவில இரண்டு' என்ற சிறிய பயணிகள் சேவைக் கப்பல் சேவைக்கு விடப்பட்டிருந்தது. ஆனால், கடந்த சில மாதங்கள இந்தக் கப்பல் பழுதடைந்த நிலையில் இந்தப் பயண சேவை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.




குறிப்பாக திருகோணமலைக்கும் மூதூருக்கும் இடையிலான கடற் பயண சேவையினைப் பொறுத்தவரை ஒருவர் 45 நிமிடத்தில் பயணித்துவிட முடியும். ஆனால் தரைவழிப் பாதையினூடாக ஒருவர் மூதூருக்கான பயணத்தினை மேற்கொள்ள வேண்டுமானால் நான்கு மணி நேரம் வரை பயணித்தே மூதூரைச் சென்றடைய முடியம். இந்த நிலையில் இந்தக் கப்பலை புனரமைத்து உடனடியாகச் சேவைக்கு விடுமாறு இந்தப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது. தற்போது மாரி காலம் ஆரம்பித்துள்ள நிலையில் தரைவழிப் பாதையும் பாதிக்கப்பட்டால் திருகோணமலை - மூதூருக்கான தரைவழிப் பயணமும் முற்றாகவே பாதிக்கப்படும் நிலை ஏற்படலாம். விஞ்ஞான வளர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்த நிலையிலும்

**திருமலைமடல்**

மாவட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு பயணிக்க முடியாத நிலையில் இந்த மாவட்ட மக்கள் அனுபவிக்கும் துன்பங்களும் துயரங்களும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவையாகும்.

இதேவேளை தேர்தல் திருவிழா தொடர்பாக சிங்கள மக்கள் ஆர்வம் செலுத்தி வரும் அதே வேளை இந்த மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களோ தேர்தல் நெருங்கி வரும் இந்த வேளையிலும் எந்த வித அக்கறையும் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். 'ரணில் வந்தாலென்ன மஹிந்த வந்தாலென்ன பிரச்சினையா தீரப்போகிறது' என்ற விரக்தியான குரல்கள்தான் இந்தத் தேர்தலின் வெளிப்பாடாக தமிழ் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளன.

இதேவேளை, இந்த மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையும் 'பனையாலை விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக' துன்பத்திற்கு மேல் துன்பத்தைக் கொடுத்துள்ளது

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக குடில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள அதேவேளை அடை மழையின் விளைவாக இந்தக் குடில்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்த நிலையில் இவர்கள் மீண்டும் பாடசாலைகளிலும் பொதுக் கட்டடங்களிலும் இடம்பெயர வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

ஆழிப்பேரலையின் தாக்கத்திற்குப் பின்னர் அடிக்கடி நடந்தேறும் சம்பவங்கள் நம்மவர்களைக் கிலி கொள்ள வைக்கும் சம்பவங்களாக அமைந்து விடுவது சர்வ சாதாரணமான சம்பவங்களாகி விட்டன. திருகோணமலை துறைமுகத்தின் கரையோர பிரதேசங்களில் கடந்த சில தினங்களாகவே பல தொன் எடையிலான மீனினங்கள் கரை ஒதுங்கி வருகின்றன.

இதன் விளைவாக சூழல் சுற்றாடல் மாசடைந்து இந்தப் பிரதேசமே பெரும் நாற்ற மெடுக்கம் நிலை உருவாகியுள்ளது. திருகோணமலை நகராட்சி மன்றமும் வெளிநாட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பலவும் இந்த மீன்களை அப்புறப்படுத்தும் வகையில் உழவு இயந்திரங்கள் மற்றும் பாரிய லொறிகளையும் பயன்படுத்தி இவற்றை அப்புறப்படுத்த முனைந்த போதும் தினமும் கடற்கரையோரம் வந்து குவியும் மீன்களை அகற்றுவது முடியாத காரியமாகவே உள்ளது. இந்த மீனினங்கள் இவ்வளவு பெருந்தொகையாக ஏன் கரை ஒதுங்குகின்றன என்பது தொடர்பான ஆய்வினை மீன்பிடித் திணைக்களம் மற்றும் சுகாதாரப் பகுதியினரும் தனித்தனியாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - இந்த மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையின் விளைவாக மகாவலிகங்கை நீர் பெருமளவில் கடலில் கலப்பதன் விளைவாக கடல் நீரின் உப்புத் தன்மை குறைவடைந்ததன் விளைவாகவே இந்த நிலை ஏற்படுவதாகவும் உள்ளூர் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எது எப்படியோ ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து ஆளைக் கடித்த கதையாக மாறாது இந்த மீன்கள் கரை ஒதுங்குவதையும் அவை நாற்றமெடுத்து சூழலையே மாசுபடுத்துவதனையும் தடுக்காது விட்டால் இதன் விளைவாக நோய் நொடிகள் பரவும் அபாய நிலை ஏற்படலாம் என்பதனை சம்பந்தப்பட்டோர் மறந்து விடக்கூடாது.

சங்கீத்

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

## மாணவர் எழுச்சி நமக்கு உணர்த்தும் உண்மை

ஈழத் தமிழர்களின் அழியாத சொத்து கல்வி. விலை மதிக்க முடியாத அந்தப் பெருஞ்செல்வத்தை இலங்கைத் தீவிலே அதிகம் நுகர்ந்து மேன்மைப்பட்டவர்கள் தமிழர்கள்.

அவர்களைஅடக்கி, ஒடுக்கி இந்த இலங்கைத் தீவிலே மூன்றாம் தரப்பிரஜைகளாக்கத் திட்டமிட்ட சிங்கள, பௌத்த பேரினவாதம் அதற்கான வழிமுறையாக பல்வேறு தளத்தைப் பயன்படுத்தியது.

முதலில் மொழி உரிமை பறிக்கப்பட்டது. வேலை வாய்ப்பு உரிமை மறுக்கப்பட்டது. தாயகமண் சிங்களக் குடியேற்றங்கள் என்ற பெயரில் கபளீகரம் செய்யப்பட்டது.

இந்த வரிசையில்1970களில் கல்வி உரிமையும் 'தரப்படுத்தல்' என்ற பெயரில் பிடுங்கப்பட்டது. இப்போது அதன்தொடர்ச்சியாக இராணுவ நடவடிக்கைகள், யுத்தச் செயற்பாடுகள் என்ற பெயரில் வாழ்வியலுக்கான உரிமையும் - இருப்புக்கான உரிமையும்கூட - பிடுங்கப்பட்டு தமிழன் வேரோடு மண்ணாய்ப் புரட்டப்படும் நிலைமை காணப்படுகின்றது.

தமிழர்களின் வாழ்வை வளமுள்ள தாக்கும் விழுமியங்களில் ஒன்றான கல்வியை அவர்களுக்கு மறுத்து, அந்த இனத்தையே பின்னடைவில் ஆழ்த்துவதற்கு பேரினவாதம் எடுத்த நடவடிக்கைகளை நேற்றுமுன்தினம் யாழ்.நகரில் நடைபெற்ற மாணவர் எழுச்சி மாநாட்டில் நமது இளம் சமூகம் வன்மையாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. மாநாட்டின் பிரகடனம் கல்விக்கு எதிரான பேரினவாதத்தின் அடக்குமுறையை அம்பலப்படுத்தி இருக்கிறது.

இலங்கைத் தீவு பிரிட்டிஷ் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஈழத்தமிழர்களின் இறையாண்மை, பெரும்பான்மை என்ற எண்ணிக்கைக் கணக்கின் அடிப்படையில் சிங்களத்திடம் தாரைவார்க்கப்பட்ட பின்னர் மறுக்கப்பட்ட தமது உரிமைகளை வேண்டி ஈழத்தமிழர்கள் சாத்வீக நெறியில் தான் - அமைதி முறையில் தான் - அஹிம்சை வழியில் தான் –போராடினார்கள்.அப்போது அவர்கள் ஆயுதம் ஏந்தவில்லை.

தமிழினத்தின் பெருமைக்கும், சிறப்புக்கும், உயர்வுக்கும் காரணமாக இருந்த கல்வியில் - கற்றலுக்கான உரிமையில் அடக்குமுறை ஆதிக்கம் எப்போது கைவைத்ததோ, ஒடுக்குமுறையை விதிக்க முற்பட்டதோ அப்போது தான் இந்த விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பியது எனலாம்.

அன்று முதல் இன்றுவரை கடந்த மூன்று தசாப்த காலமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீரழிப்பு மூலம், தமிழினத்தின் ஆன்ம வலிமையை - கல்விச் செல்வம் என்ற செருக்கை - பிடுங்கும் முயற்சிகள் பேரினவாத சக்திகளால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டே வந்திருக்கின்றன.

ஆனாலும் ஆயுதப்போர் என்ற வலி மிகுந்த விடுதலை வேள்விக்கு மத்தியிலும் கல்விச் செல்வத்தைப் பேணுவதில் தளர்வுறாமல் நின்ற நமது இளம் சமூகத்தின் பொறுப்புணர்வின் வெளிப்பாடே இந்த எழுச்சி மாநாடு.அந்த இளம் சமூகத்தின் பற்றுறுதிமிக்க சமூகப் பொறுப்பை - உணர்ச்சிப் பெருக்கை -உறுதி வெளிப்பாட்டை -அந்த எழுச்சிப் பிரகடனம் பிரதிபலித்து நிற்பதாக நாம் கருதலாம்.

'தரப்படுத்தல்' என்ற கொடூர - பாரபட்ச - அடக்குமுறையுடன் ஆரம்பித்த கல்வி , உரிமைமறுப்பு, இப்போது ஈழத்தில் தமிழரின் சரித்திரத்தையே மறுதலித்து, மாற்றியமைத்து இருட்டடிப்புச் செய்து தமிழரின் பூர்வீகத்தையே பூசிமெழுகி மறைத்து வரலாற்றுத் திரிபுகளை பாடநூல்களில் திணித்து, இலங்கையின் பூர்வீகக் குடிகள் சிங்களவர்கள் மட்டுமே என்ற நிலைப்பாட்டை தமிழ் மாணவர்களின் கல்விப்பாடம் மூலம் அவர்களுக்குப் போதிக்க வைக்கும் முயற்சியில் ஈடுபடச் செய்கின்ற அளவுக்குச் சென்றிருக்கின்றது.

இத்தகைய அநீதிக்கு நமது கல்விச் சமூகம் -இளம் மாணவர்கள் - இடங்கொடுக்கமாட்டார்கள் என்பதை மாணவர் எழுச்சி நமக்குக் காட்டுகின்றது.

தமிழரின் கல்வி உரிமையை மறுப்பதன் மூலம் அவர்களின் சமூக, பொருளாதார, வாழ்வியல் முன்னேற்றங்களையும் அபிவிருத்தியையும் தகர்ப்பதற்கு சிங்களம் எத்துணை முயற்சி எடுத்தாலும் அது பலிக்கப்போவதில்லை. விழிப்புடன் செயற்படும் ஈழத் தமிழ் மாணவர்களின் எழுச்சி நமக்கு உணர்த்தும் உண்மை இது.

# ஜனாதிபதியானால் இந்தியாவின் உதவியுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும்

### புத்தளத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தகவல்

ஜனாதிபதியாக நான் தெரிவுசெய்யப்பட்டால் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும். இதற்காக இந்தியா உள்ளிட்ட பிராந்திய நாடுக ளின் உதவியைக் கோருவோம்.

-இவ்வாறு சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

புத்தளத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றும் போது மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதன் மூலம் எதிர்காலத்தில் எந்தவொரு பயங்கரவாதச் செயலும் நடைபெறாமல் தடுக்க முடியும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யும்போது இந்தியா உள்ளிட்ட பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் உதவியைக் கோருவோம். என்னை ஓர் இனவாத முகாமின் பிரதிநிதியாக ஐக்கிய தேசியக் கட்சி யினர் குற்றஞ்சாட்டுகின்றனர். எனது பாடசாலை நாள்களிலிருந்தே எனக்குதமிழ், முஸ்லிம் நண்பர்கள் உண்டு.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். புத்தளத்தில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மை யினராக 50 வீதம் வாழ்கின்றபோது 30 வீத சிங்களவர் மற்றும் 20 வீத தமிழர்களுடன் மத நல்லிணக்கத்தோடு வாழ்ந்து வருகின்றனர்.புத்தளத்தைப் போல் இந்த நாடு முழுமையும் ஒரே குடும்பமாக வாழ வேண்டும் என்பதே எமது நோக்கம் - என்றார். (எ-204)

## தரம் 3 மாணவரின் அடைவு மட்டத்தை உயர்த்த மாவட்ட மட்டத்தில் ஏற்பாடு

தென்மராட்சி,நவ.13

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தரம் மூன்றில் கற்கும் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் கல்வி நிதியத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்தில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பயனடைய வுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் அரசசார்பற்ற நிறுவனங்களால் தனித்தனியே இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கென ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்று பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் இத்திட்டத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றத் தெரிவுசெய்யப் படவுள்ளனர்.

யாழ்.கல்வி வலயத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும்-

வடமராட்சி கல்வி வலயத்தில் ஊற்று நிறுவனமும்-

தென்மராட்சி கல்வி வலயத்தில் அறவழி போராட்டக் குழுவினரும்-

தீவகக் கல்வி வலயத்தில் கியூடெக் நிறுவனமும் வலிகாமம் கல்வி வலயத்தில் பால் நிலைக்கும் அபிவிருத்தி நிறுவனமும் இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வுள்ளதாக நிதிய மாகாண இணைப்பாளர் வீ.ஸ்ரீசக்திவேல் தெரிவித்தார்.

கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புகள் மூலம் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-117)

## தேர்தல் கடமைபுரியும் அலுவலருக்கு நியமனக் கடிதம் அனுப்பப்பட்டது

குருநகர்,நவ.13

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கடமைபுரியவுள்ள அரச ஊழியர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாவும் அவர்கள் சேவைபுரியும் திணைக்களங்களுக்கு உரிய ஊழியர்களின் பெயர்களுக்கு யாழ். தேர்தல் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இத்தேர்தலில் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களாகக் கடமைபுரியவுள்ளவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு வருகைதந்து தாம் எவ் வாக்குச் சாவடியில் கடமைபுரிய வேண்டும் என்ற கடிதங்களை உரிய அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு இவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம், இந்த வாக்குச் சாவடிகளில் வாக்கெடுப்பு எழுதுநர்களாக பணிபுரிவோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதங்களில் இவர்கள் சேவைபுரிய நியமிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் மற்றும் வாக்குச் சாவடிகள் குறிப்பிடப்பட்டு 16ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு உரிய வாக்குச் சாவடிகளுக்கு வருகைதந்து உரிய சிரேஷ்ட தலைமை தாக்கும் உத்தியோகத்தர்களிடம் தமது வரவுகளைப் பதிவுசெய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-51)

## 35 கடற்றொழிலாளருக்கு மீன்பிடி உபகரணங்கள்

### அறவழிப் போராட்டக்குழு வங்கியது

தென்மராட்சி,நவ.13

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை தம்பசிட்டியைப் சேர்ந்த 35 கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவினர் இந்த உபகரணங்களை வழங்கினர்.

அறவழி நிலையத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவன மாவட்ட முகாமையாளர் திருமதி ஞானச்செல்வி சிங்கேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கினார்.

10 தொழிலாளர்களுக்கு கட்டு மரங்களும், 25 தொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களும் வழங்கப்பட்டன. (எ-117)

## முகமாலை வாக்குச் சாவடியில் விசேட மருத்துவக் குழு சேவையில்

குருநகர்,நவ.13

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது முகமாலையில் அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக்குச்சாவடிகளுக்கு வாக்களிக்க வருகை தரவுள்ள பொது மக்களின் நலன்களைப் பராமரிப்பதற்காக விசேட் மருத்துவக் குழுவொன்றைச் சேவையிலீடுபடுத்துவதற்கான நட வடிக்கைகளை யாழ்.பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது. (எ-51)

## தமிழர் தரப்பின் அறிவிப்பை அடுத்து கொழும்பு பங்குச் சந்தையில் வீழ்ச்சி

கொழும்பு,நவ.13

ஜனாதிபதித்தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறை செலுத்தவேண்டியதில்லை என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிவிப்பை அடுத்து கொழும்பு பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நேற்றுமுன்தினம் கொழும்பு அனைத்து பங்கு வர்த்தகச் சுட்டெண் 0.42 வீதம் சரிவாகக் காணப்பட்டது. இது கடந்த புதன்கிழமை நிலவிய சுட்டெண்ணைவிட 29 புள்ளிகள் சரிந்திருந்தது என்று கூறப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவைத் தமிழர் தரப்பு ஆதரிக்கும் என்று வர்த்தக சமூகத்தினர் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால், தமிழ்க் கூட்டமைப்பினர் வெளியிட்ட அறிவிப்பால் பங்கு வர்த்தகம் பாதிக்கப்பட்டதாக வர்த்தக நோக்கர்கள் தெரிவித்தனர். (எ-204)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் விரைவில் விபத்துச் சேவைப் பிரிவு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.போதனா வைத்தியசாலையில் விபத்துச்சேவைப் பிரிவு ஒன்றை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறதென வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள இந்த விபத்துச் சேவைப்பிரிவு விபத்தில் சிக்கிப் படுகாயமடையும் நோயாளர்களுக்கு உடனடிச் சிகிச்சை வழங்குவதற்குப் பெரும் உதவியாக அமையும்.

இதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு பல நிறுவனங்களிடம் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், அரச அதிபரிடமும் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் அடுத்த ஆண்டு முற்பகுதியில் இதற்கான வேலைகள் அனைத்தும் ஆரம்பிக்கப்பட்டுவிடும் - என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-13)

### நாளை

ஐப்பசி 28
திங்கட்கிழமை
14.11.2005
திதி:திரயோதசி
முற்பகல் 08.48 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
பின்னிரவு 01.44 வரை
சுபநேரம்: 12.07 - 01.37
ராகுகாலம்: 07.37 - 09.07
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பிறருடைய குறைகளை நாம் சுட்டிக் காட்டும்போது நம்முடைய குறைகளை உலகம் ஆராய ஆரம் பிக்கிறது.

- இயேசுநாதர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

இகம்
03
-
10
-
1924



பரம்
14
-
10
-
2005

## அமரர் அன்னம்மா அப்பாக்குட்டி

உங்கள் மீது பாசமாய் இருந்த எங்களை எல்லாம்
பரிதவிக்கவிட்டு பரமனடி சென்றாலுமே
பாரினிலே எங்களை எல்லாம் தவிக்க விட்டீரே!
நீங்கள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு அகலாது
நீங்கள் தெய்வமாக இருந்து எங்களை ஆசீர்வதியுங்கள்

அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அ.சுந்தரலிங்கம்,
162/3, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 4590864

- குடும்பத்தினர்.

(42837)

# காணாமற்போனோரின் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

1995ஆம் ஆண்டுக்குப்பின்னர் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்களின் விவரங்கள் சேகரிக்கும் பணி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்ககேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இராணுவ நடவடிக்கையின் போதுகாணமற்போனவர்கள் தொடர்பான பதிவினை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முதல் நடைபெற்று வரும் இப்பணியில் இது வரை பதிவுகளை மேற்கொள்ளாத அனைவரையும்ஆவணங்களுடன் வருகைத்தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-204)

## மலசல கூடம் அமைக்க நிதியுதவி

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். பிரதேச செயலர்பிரிவில் ஜே/74 கிராம சேவை அலுவலர் பிரிவுக்குட்பட்ட 19 பயனாளிகளுக்கு யுனிசெவ் நிறுவனம் மலசல கூடம் அமைப்பதற்காக நிதியுதவி வழங்கியுள்ளது.

(ஐ-190)

### புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தான சர்வாலயதீபம், திருவெம்பாவை பற்றிய அறிவித்தல்

எதிர்வரும் 15.12.2005 (கார்த்திகை 30) அன்று சர்வாலய தீபம் வெகுசிறப்பாக நடைபெறும்.

திருவெம்பாவை 4.1.2006 (மார்கழி 20) ஆரம்பமாகி 13.1.2006 (மார்கழி29) ஆகிய 10 நாள்களும் சிறப்பாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தேவஸ்தானம்.

(சி/46211)(42)



அதிபர் சிறில் சுகந்தரன்
அவர்களின்

## பிரிவுபசார விழா

*யா/நவாலி சென். பீற்றேஸ் றோ.க.த.க பாடசாலையில் கடந்த 23 ஆண்டுகளாகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள* **சிறில் சுகந்தரன்** *அதிபர் அவர்களின் பிரிவுபசாரவிழா இன்று (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சென்பீற்றேஸ் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.*
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர், பா.அ.சங்கம் .

(42836)
(45-15-33)

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவபாதசுந்தரம்



(பீ.ஏ.-சிறப்பு பட்டயக் கணக்காளர்)

யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த கந்தையா சிவபாதசுந்தரம் அவர்கள் 8.11.2005 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''சிவஸ்தான்''*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(42835)
(45-15-33)

தகவல்:
திருமதி நிர்மலா சிவபாதசுந்தரம் (மனைவி),
க. கேசவன், (J.P.U.M) சட்டத்தரணி-மைத்துனர்).

# களத்திற் கலைந்து..........என் உள்ளத்தில் நிறைந்த உனக்கு.....



## 12 ஆம் ஆண்டு நினைவு மலர்த் தூவல்

தென்மராட்சிக் கோட்ட சிறப்புத் தளபதி

# லெப்.கேணல் குணா

(சுந்தரம் விஜயராசா - கல்வயல்)

மலராய் மடியில்
26.11.1963

விதையாய் மண்ணில்
11.11.1993

தவளைப் பாய்ச்சலில் முதல் களப்பலியானீர்
எம் தேசம் போற்றும் தலைவன் வழி வந்தீர்
திரண்ட எதிரி முன் புயலெனப் பாய்ந்தீர்
மக்கள் மனங்களில் நீங்காத இடம் பிடித்திட்ட - குணாவே
உன் பெயரோடு விரைவில் எம் தேசம் விடியும்

- தென்மராட்சி மக்கள் -


(42834) (15-45-33-25)

# தமிழர் தரப்பின் புறக்கணிப்புக்கு மத்தியில் ஸ்ரீ லங்காவின் ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தல்

## தெற்குத் தலைமைகளின் இறுதிநேர முயற்சியும் நிராகரிக்கப்பட்ட நிலையில் நெருங்குகிறது களம்



## பலம் பரீட்சையில் வெல்பவர் ரணிலா? மஹிந்தவா?



ஸ்ரீலங்காவின் ஐந்தாவது ஜனாதிபதி ரணிலா? மஹிந்தவா? என்பது இன்னும் ஐந்து தினங்களில் தெரிந்துவிடும்.

தென்னிலங்கை மக்கள் தமது ஜனாதிபதியை - தலைவரை - தெரிவுசெய்வதற்காக எதிர்வரும் வியாழக்கிழமை வாக்களிக்கப் போகிறார்கள்.

வரலாற்றில் முதல் தடவையாக தமிழீழ மக்கள் இந்தத் தேர்தலைப் புறக்கணிக்கப் போகிறார்கள்.

தேர்தல் தினத்தை துக்கதினமாகவும் - கரிநாளாகவும் அனுஷ்டிக்கத் தமிழ் மக்கள் தயாராகிவிட்டனர்.

தமிழர்களின் பங்களிப்பு இன்றி, தெற்குச் சிங்கள மக்கள் தமது தலைவரைத் தெரிவு செய்யும் நிகழ்வு அரங்கேறப்போகிறது.

நடக்கப்போகும் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்கவையும் மஹிந்த ராஜபக்ஷவையும் தமிழ் மக்கள் ஏன் நிராகரிக்கிறார்கள் என்பதற்கான காரணங்களை விளங்கிப் பொது அமைப்புகள், மாணவர் அமைப்புகள் பகிரங்கமாகவே அறிக்கைகளை விடுத்து வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எந்தக் கொள்கையையும் மக்கள் மீது திணிக்க மாட்டோம். அவர்கள் சுதந்திரமாக முடிவுசெய்யலாம் என்று விடுதலைப் புலிகள் பகிரங்கமாக அறிவித்த நிலையில் -

தேர்தலைப் புறக்கணிக்கும் செயற்பாட்டை தமிழ் மக்கள் தீவிரமாக முன்னெடுத்துளளனர்.

### தீவிரமாகியுள்ள தேர்தல் புறக்கணிப்புச் செயற்பாடு

யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான புறக்கணிப்புச் செயற்பாடு இப்போது கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் என ஒட்டுமொத்தமான தமிழர் தாயகப் பகுதி எங்கும் தீவிரமாகியுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் ஒட்டுமொத்தமாகத் தாயகப் பிரதேச மக்கள் தமிழர் தரப்புக்கு அமோக வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர். அதேபோல், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதிலும் ஒன்றுபட்டு நிற்கின்றனர் தமிழர் தாயக மக்கள்.

தமிழ் மக்கள் ஒன்றுபட்டு நிற்கும் நிலையில் - தேர்தல் தொடர்பான முடிவு விடுதலைப் புலிகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளும் சந்தித்த பின்னர்தான் வெளியாகும் என தெற்கு ஊடகங்களும், அரசியல் கட்சிகளும் எதிர்பார்த்துக் காத்திருந்தன.

இந்த எதிர்பார்ப்புக்கு ஏமாற்றம் தருவது போல் முடிவு வெளியாகியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கிளிநொச்சியில் சந்தித்து நீண்டநேரம் விரிவாக ஆராய்ந்தனர்.

இந்தச் சந்திப்பில் எடுக்கப்போகின்ற முடிவு தெற்குத் தேர்தலை எந்த அளவுக்கு பாதிக்கப்போகிறது என்பதை உணர்ந்த இரு பிரதான வேட்பாளர்கள் சார்பிலும் வன்னிக்குத் தொடர்புகள் பறந்தன.

சந்திப்பு ஆரம்பமாகும் முன்னர் இரு தரப்புக்களும் மாறிமாறி வன்னியுடன் தொடர்புகொண்டு தமக்கான ஆதரவை உறுதிப்படுத்தத் துடித்தன. ஆனால் அதற்கு தமிழர் தரப்பு மசிந்துவிடவில்லை. தமிழ் மக்களின் விருப்புக்கு ஏற்ப தமிழர் தரப்பின் உறுதியான போக்கு தெற் குத் தலைமைக்கு ஏமாற்றத்தைத்தான் கொடுத்திருக்கும்.

சந்திப்பின் முடிவில்நடந்த செய்தியாளர் சந்திப்பில் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தேர்தல் தொடர்பான தமிழர் தரப்பு நிலைப்பாட்டை வெளியிட்டார்.

### தமிழர் தரப்பின் நிலைப்பாடு

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறைகாட்டத் தேவையில்லை என்ற அறிவிப்பை விடுத்த அவர், “ இலங்கை ஜனாதிபதித் தேர்தலால் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தமிழ்மக்கள் விரும்புகின்ற ஒரு தீர்வு ஏற்படமுடியாது - ஏற்படாது” என்று அடித்துக் கூறிவிட்டார்.

தேர்தலைப் புறக்கணிப்பதென மக்கள் எடுத்த முடிவுக்குத் தமிழ் மக்களின் தரப்பான விடுதலைப் புலிகளும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அங்கீகாரம் வழங்கியதாக இதைக் கருதலாம். மக்களின் விருப்புக்கு மதிப்புக் கொடுத்து இவர்கள் எடுத்தமுடிவு மக்களுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

சிங்களத் தலைமைகள் மீது இருந்த நம்பிக்கையை நாம் இழந்துவிட்டோம். சுயநிர்ணய உரிமையுடன் வாழும் நிலைக்கு வந்துவிட்டோம். எங்களை அங்கீகரித்து எமது அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய உதவுங்கள் என்ற செய்தியை தேர்தல் புறக்கணிப்பின் ஊடாகச் சர்வதேச சமூகத்துக்கு தமிழ் மக்கள் விடுக்கின்றனர்.

### களநிலைவரத்தைச் சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறுமாறு கோரிக்கை

தற்சமயம் தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் உட்பட ஏனைய நாடுகளின் பிரதிநிதிகள் கள நிலைவரத்தை நேரில் அவதானித்து சர்வதேசத்துக்கு உண்மை நிலையைத் தெரிவிக்கவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ் மக்கள் எடுத்துள்ள முடிவு தெற்குத் தலைமைகளுக்கு நல்ல பாடம் ஒன்றைப் புகட்டும் என எதிர்பார்க்கலாம்.

தமது புறக்கணிப்புச் செயற்பாடுகளில் வெற்றி கிட்ட கண்காணிப்பாளர்கள் சரிவரப் பணியாற்ற வேண்டும் என த'மிழ் மக்கள் கேட்கி றார்கள்.

'பவ்ரல்' போன்ற கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் பணியாற்றவேண்டும்.

வாக்குமோசடி முயற்சிக்கு அவர்கள் இடமளிக்கக்கூடாது என்றும் - எதிர்பார்க்கிறார்கள் மக்கள்.

மஹிந்த ராஜபக்ஷவுக்காக அவரின் தோழமைக் கட்சியான ஈ.பி.டி.பி. முறைகேடாக வாக்குப் போடும் முயற்சியில் இறங்கலாம் என்றும் -

பொலீஸ் - இராணுவ அதிகாரிகளின் உதவியுடன் இது அரங்கேறலாம் என்றும் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், இதைத் தடுத்து நிறுத்தி, மக்களின் விருப்பு என்ன என்பதைச் சர்வதேச சமூகத்துக்குத் தெரிவிக்கவேண்டிய பொறுப்பு தேர்தல் கண்காணிப்புக்கு வந்துள்ள சர்வதேச பிரதிநிதிகளின் கைகளில் தான் இருக்கின்றது என்று மக்கள் கூறுகின்றனர்.

தேர்தலைப் புறக்கணிக்கும் செயற்பாடு தமிழர் தாயகப் பகுதியில் தீவிரமாகும் நிலையில், தெற்கில் நிலை எப்படியிருக்கின்றது என்று சற்று ஆராய்வோம்.

தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் இருந்து ரணில் வெல்வார் என்றும் அவருக்கே வெற்றி வாய்ப்பு உண்டு என்றும் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

தெற்கில் ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயவுடன் கூட்டுவைத்து சிங்களப் பேரினவாதத்தைக் கிளப்பி, சிங்களத் தேசியத்துக்கான உயிர்ப்பூட்டலைச் செய்து பிரசாரத்தை உச்சப்படுத்தியுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

கடந்த கால செயற்பாடுகள் மூலம் தமிழீழத்தைப் புலிகளிடம் தாரைவார்க்க ரணில் முனைப்புடன் செயற்படுகிறார் என்ற செய்தி தெற்குச் சிங்களப் பாமர மக்களிடம் விதைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் தெற்கில் பெரும் ஆதரவைப் பெற்று உச்ச நிலையில் இருக்கின்றார் மஹிந்த.

சிங்கள மக்களின் நாடு என்ற கோஷத்துடன் புறப்பட்ட மஹிந்த, அதில் பெரு வெற்றியையும் பெற்றுவிட்டார் என்றே கூறப்படுகின்றது. தெற்கில் பட்டி - தொட்டி எல்லாம் மஹிந்த பக்கம்தான்.

தமிழர் தரப்புத் தேர்தலைப் புறக்கணிப்பது என்று வியாழக்கிழமை உத்தியோக பூர்வமாக அறிவித்ததுடன் ரணிலின் வெற்றி வாய்ப்புச் சரிந்தது. எங்கும் மஹிந்த பற்றியே பேச்சு. தெற்கின் கணிப்பீடு இது.

தேர்தலில் மஹிந்த 55 சதவீதமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெறும் ஏதுநிலை தற்சமயம் தோன்றியுள்ளது என தெற்கு ஊடகவியலாளர் ஒருவர் ஆருடம் கூறினார். இதுதான் தெற்கில் பரவலாகப் பேசப்படும் செய்தி என்றும் அவர் கூறுகின்றார்.

### ஜனாதிபதியின் காய் நகர்த்தல்

அடுத்த நான்கு நாள்களில் தெற்குத் தேர்தல் களத்தில் நடக்கப்போகும் காய் நகர்த்தல்கள் இப்போதுள்ள நிலையை மாற்றவும் கூடும் என்றும் அவதானிகள் கூறுகின்றனர்.

மஹிந்த வெற்றிபெற்று ஜனாதிபதியானால், தமது எதிர்காலம் இருண்டதாகிவிடும் என ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது தம்பியான அநுராவும் கருதிக் களத்தில் இறங்கி ரணிலுக்கு ஆதரவாகச் செயற்படக் கூடிய புறநிலை காணப்படுவதாகத் தகவல்கள் கூறுகின்றன. அப்படி ஒரு நிலை இறுதிக் கட்டத்தில் ஏற்பட்டால், தேர்தல் முடிவுகள் இறுதி வரை முடிவுசெய்யமுடியாதவையாகத் தான் இருக்கப்போகின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் யாவும் நாளை நள்ளிரவுடன் பூர்த்தியாகின்றன. அதன் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர்கள் கருத்துக்களைச் சட்டப்படி வெளியிடமுடியாது.

## பிரியாவிடைச் செய்தியில் சந்திரிகா கூறப்போகும் செய்தி என்ன?



ஆனால், பிரியாவிடைபெற்றுச் செல்லும் ஜனாதிபதி சந்திரிகா நாளைமறுதினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றப்போகின்றார்.

அந்தப் பேச்சில், அவரது எதிர்கால இருப்பை உறுதிசெய்யும் நோக்கில் ஓர் அறிவிப்பை அவர் விடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின் றது.

ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய வகையில், ஐ.தே.கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு கிட்டும் வகையில் அந்த அறிவிப்பு அமையலாம் என தெற்கு அரசியல் வட்டாரங்கள் பரவலாக எதிர்பார்க்கும் முக்கிய விடயமாக உள்ளது என்கின்றனர் நோக்கர்கள்.

எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம். திடீர் திருப்பங்கள் ஏற்படலாம் என்ற நிலையில்-

வித்தியாசமான போக்கில் தெற்கில் இம்முறை தேர்தல் நடக்கின்றது.

சிங்கள தேசியத்தைக் கட்டிக்காக்க பேரினவாதிகள் புறப்பட்டு நிற்கின்றனர். தமிழ் மக்கள் தமது இருப்பை உறுதிப்படுத்தத் தேர்தலைப் புறக்கணிக்கும் போக்கைக் கடைப்பிடிக்கத் தயாராகி நிற்கின்றனர்.

இலங்கை வரலாற்றில் கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தலில் நடக்காத விடயங்கள் எல்லாம் இம்முறை தேர்தலில் நடக்கின்றன.

இந்த நாட்டில் இரு தேசங்கள், இரு ஆட்சிகள் என்பதை உறுதிசெய்யும் வகையில் இம்முறை தேர்தல் அமைவதை கவனத்தில் எடுக்க வேண்டியது சர்வதேசத்தின் பொறுப்பாகும். சர்வதேசம் இதைக் கருத்தில் எடுத்து தங்கள் ராஜதந்திர நகர்வுகளை எதிர்காலத்தில் மேற்கொள்வது நல்லது என தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

இந்த நிலையில், தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழத் தேசிய தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில் முக்கிய விடயம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

“........ மக்கள் இரண்டு ஆட்சித் தலைவர்களின் கீழும் துன்பப்பட்டவர்கள். சிங்களப் பேரினவாதத்துக்குத் தலைமை தாங்கும் தேர்தலாகவே இது உள்ளது. இதனால் தமிழர்களுக்கு விமோசனம் இல்லை என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இரண்டு வேட்பாளர்களும் யாழ்.குடா நாட்டுக்குச் சென்று உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நின்று கூறிய கருத்துக்கள் மக்களைப் புண்படுத்தியுள்ளன. துன்பமான வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டுள்ள மக்களுக்கு நெருக்குவாரங்களைத் தவிர்ப்பதற்கான சமிக்ஞைகளை அவர்கள் காட்டவில்லை. மாறாக, இராணுவ ரீதியாக மேலாதிக்கம் செலுத்துகின்ற போக்கைக் காட்டியுள்ளனர்.”

- இப்படிக் கருத்து வெளியிட்டுள்ளார் தமிழ்ச்செல்வன்.

## வாராந்த அரசியல் அலசல்

குகா

ஜனாதிபதியாக மஹிந்த வந்தால் என்ன? ரணில் வந்தால் என்ன? இராணுவ மேலாதிக்கப் போக்கில்தான் செயற்படப் போகின்றார்கள் என்பதை தமிழ்ச்செல்வன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

### வெல்லுபவர் யுத்தத்தைத் திணிப்பாரா?

சமாதானத்துக்கு சமாதி கட்டி யுத்தம் ஒன்றைத் தமிழ் மக்கள் மீது திணிக்கும் செயற்பாடுகளை புதிய ஜனாதிபதியாக வருபவர் முன்னெடுப்பாரேயானால் நாடு யுத்தத்துக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியிருக்காது.

அப்படியொரு நிலை ஏற்படுமாயின் இந்த நாட்டில் இரு தேசங்கள், இரு ஆட்சிகள் என்ற கோட்பாடு உறுதிப்படுத்தப்படும்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் முழக்கமிடும் சிங்களத் தேசியம், தமிழ்த் தேசியம் என்பது யதார்த்தமாகிவிடும். இன்னும் ஐந்து தினங்களில் அதற்கான பதில் கிட்டும். அது வரை பொறுத்திருப்போம். *

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

62 xxxx தொடரிலக்கமுடைய **Toyato LH-110 Customs (Original Passanger) Manual P/s, D/A/C adjestable Seat New Face Pioneerset** விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777566484. (சி-45798)

**JQ - xxxx** தொடரிலக்கமுடைய தனிப் பாவனையில் உள்ள **CD - DAWN** (சில்வர் மட் காட்) மோட்டார் சைக்கிள், **H1F1 - CD Player (Kenwood Japan Radio Setup)** விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 9263, 077 6079352. (42918)

### கார் விற்பனைக்கு

**9xxxx** தொடரிலக்கமுடைய மைனர் கார் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: தொ.பே: 021-222 9455,0112 948000. (42804)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான **Dachshund** நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-42615)

காவலுக்குரிய **Gread - Dane** நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.115, பொன்னம்பலம் றோட், அரியாலை யாழ்ப்பாணம். **T.P: 0777170069.** (42816)

### காணி விற்பனைக்கு

நெல்லண்டை, தும்பளை பிரதான வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773151459. (42648)

யாழ்ப்பாணம், பிறவுண் றோட்டில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. கனகேந்திரன் T.P.: 0112395899, காரியாலய நேரத்தில் தொடர்பு கொள்ளவும். (சி-46164)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42616)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்துபோடப்பட்ட Original Prima Broiler பேட்டுக் குஞ்சுகள் 14.11.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளையிலும் உடுவில் பாம் சென்ரர் - ஆலடி, நல்லூர் - பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42489)

### வாடகைக்குத் தேவை

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காக 1200 சதுர அடி விஸ்தீரணமுடைய கணனி நிலையம் அமைக்க யாழ்.பஸ் நிலையத்திலிருந்து ½ கிலோ மீற்றருக்கு உட்பட்ட இடம் வாடகைக்கு விசாரிக்கப்படுகின்றது. விரும்புவோர் சகல விவரங்களுடன் 0773049887 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (சி-46193)

### வீடு வாடகைக்குத் தேவை

வங்கி உயர் அதிகாரிக்கு நல்லூர்/கந்தர்மடம்/ யாழ்.பல்கலைக்கழகப் பகுதிகளில் இணைந்த குளியலறையுடன் கூடிய 3 அறைகளும் வாகனத்தரிப்பிடமும் ஏனைய வசதிகளுடனும் கூடிய வீடு உடன் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. 3 மாத வாடகை முற்பணம் வழங்கப்படும். எதிர்பார்க்கும் வாடகை மற்றும் உத்தேச நிபந்தனைகளுடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல. 2749, மே/பா உதயன். (சி-46194)

### வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில், சொலமன் றோட்டில் சகல வசதிகளுடன் கொண்ட 3 படுக்கை அறை, பெரிய ஹோல் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: **T.P.: 222 5539, 0777 030015** (42823)

### வாடகைக்கு

பெண் பிள்ளைகள் தங்கியிருக்கக்கூடிய வசதிகளைக் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு இல.14, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.(சி-46099)

### செவ்வாய் வக்கிரம் எப்படி?

யுத்தச் செவ்வாய் வக்கிரம், சனிராகு கேதுக்களின் தீய பார்வைகள் தேர்தல் வன்முறைகளையும் ஆட்சி மாற்றத்தால் அரசியல் நெருக்கடிகளையும் திருப்பங்களையும் உண்டாக்கும். வியாழமாற்றம் விற்பனையாகின்றது. சத்யா, ஆனைக்கோட்டை. 0776547175. (42821)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, அழகான 5'5'' உயரமுள்ள, 24 வயதடைந்த படித்த, பெண்ணிற்கு மணமகன் தேவை. உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி பொருத்தமானவர் தேர்ந்தெடுக்கப்படுவர். சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். **T.P.:** 0662256607, 0773222768. (42695)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1964, அத்தம், செவ்வாய்க்குற்றமற்ற யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2746, மே/பா உதயன். (42603)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனேடியன் குடியுரிமையுடைய விவாகப் பதிவு மட்டும் செய்து விவாகரத்தான (திருமணம் ஆகாதவர்) 1973 விசாகம், துலாம் ராசி, கிரகபாவம் 26¼, உயரம் 5'7'' **ICMA** கணக்காளராகப் பணிபுரியும் மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை. 1980 பூராடம் தனுசு ராசி 12 இல் செவ்வாய் கிரகபாவம் 24½ வர்த்தக முகாமைத்துவம் பயிலும் **U.K** இல் வசித்து வரும் மணமகளுக்கு **PR** உள்ள மணமகன் தேவை. தொடர்பு: சிவாலயா. **T.P.0776528641.** (42683)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனேடியன் குடியுரிமையுடைய, 1973 மிருகசீரிடம் மிதுன ராசி, 8இல் செவ்வாய், 23¼ பாவம், எலக்ரிக்கல் எஞ்சினியரிங் துறையிலுள்ள மணமகளுக்கு எஞ்சினியர், எக்கவுண்டன், பட்டதாரி மணமகன் தேவை. தொடர்பு: **Mr. S. K. Shivagaran, Shivaalaya International Marriage Bureau No. 11, Jamuna Street, Nallur, Jaffna, Sri Lanka. Mobil No. 0776528641.** (42685)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 30 வயதுடைய, முதலாம் தர பாடசாலையின் டிப்ளோமா பட்டதாரி அதிபருக்கு, செவ்வாய்க் குற்றமற்ற, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2748, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (42655)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1979, சித்திரை துலாம் ராசி, 2 இல் செவ்வாய், கிரகபாவம் 10½, 6' **B.A (Hons)** பட்டதாரி மணமகனுக்கும் 1975 கார்த்திகை இடபராசி, 7இல் செவ்வாய், கிரக பாவம் 26, உயரம் 5'9'' **B.Com** பட்டதாரி மணமகனுக்கும் லண்டன், சுவிஸ், கனடாவில் படித்த குடியுரிமையுடைய மணமகள் தேவை. சிவாலயா **T.P.** 0776 528641. (42682)

லண்டனில் வாழும் 1969 அச்சுவினி மேடராசி, 7இல் செவ்வாய், கிரகபாவம் 53, உயரம் 5'10'', **G.C.E A/L**, சிவில் எஞ்சினியரிங் டிப்ளோமா படித்த, சுப்பர் மார்க்கட்டில் முகாமையாளர் மணமகனுக்கும், 1973 மிருகசீரிடம் மிதுனராசி, **G.C.E A/L, U.K.** இல் சொந்தமாக வீடு, கடையுள்ள மணமகனுக்கும் **U.K.** இல் குடியுரிமையுடைய மணமகள் தேவை. தொடர்பு: சிவாலயா **T.P.:** 077 6528641. (42685)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972 ஆம் ஆண்டு,அனுஷம், உயரம் 5'6'' லக்கினத்தில் சந்திரன், 2இல் வியாழன் ராகு, 7இல் சனி, 8 இல் கேது, 9 இல் சுக்கிரன், 10 இல் சூரியன், புதன், செவ்வாய் வியாபாரம் செய்யும் மாத வருமானம் 50,000 இற்கு மேல் பணம் சொத்துக்கள் உள்ள படித்த,அழகான வாலிபருக்கு படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2742, மே/பா உதயன். (42372)

### அபூர்வ ஜோதிடம்

தீராத அவஸ்தை தரும் நோய் குணமாதல், உச்ச அதிர்ஷ்ட பலாபலனை பெறல் தினமும் காலை 8.00-2.00 **p.m.** விதானையார் வளவு, உயரப்புல பிள்ளையார் கோயிலடி, ஆனைக்கோட்டை. (42811)

### திருமண சேவை

கொஞ்சநஞ்சமல்ல சுயதெரிவுமுறை, முன்னோடி திருமண ஆற்றுப்படுத்துநர், குரும்பசிட்டியூர் வேல் அமுதனிடம் 140 வெளிநாட்டு மணமகள்மார் உட்பட 690 மணமகள்மாரின் கடிதக்கோப்புக்கள் இன்று கைவசம் உண்டு! தங்கள் தேடல் படித்த, அழகிய குடும்பப்பாங்கான மணமகளா? இன்னும் தாமதமேன்? திங்கள், புதன், வியாழன், வெள்ளிகிழமை நாள்களில் விசாரணைக்கென ஒதுக்கப்பட்ட மாலை மணி 4.30 முதல் 8.30 மணி வரையான நேர காலத்திற்குள் மாத்திரம் தொடர்பு கொள்க! தொலைபேசி:- 2360488, 4514396. (சி-46165)

### தவறிவிட்டது

அருமைநாயகம் அஜீதன் என்பவருடைய தேசிய அ. அட்டை (822224865V) 11.11.2005 அன்று புத்தூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (சி-46202)

### சேவை

55000 அமெரிக்க விசா லொத்தர் ( **Green card**) விண்ணப்பங்கள் தற்போது அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரியவாய்ப்பு. இலவச விண்ணப்ப விவரத்திற்குத் தாமதிக்காமல் தொடர்பு கொள்க. முடிவு திகதி 05.12.2005. உங்களது விண்ணப்பங்களை அமெரிக்காவிற்கு **Internet** மூலம் அனுப்பி அமெரிக்க றிசீட் அனுப்பி வைப்பேழம். **Penquin Bookshop, B2/F23, Bloemendhal Flats, Colombo-13. T.P.: 0773081764 .** (சி-46105)

### வேலைக்கு ஆள் தேவை

**Page Maker, Type Setting**
தெரிந்த பெண் பிள்ளைகளும் பைண்டிங் தெரிந்த பெண் பிள்ளையும் தேவை
தொடர்பு:
**திருவள்ளுவர் அச்சகம்**
யாழ். மாநகரசபை அருகில்,
593, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(42646)(21.16.13)

### மணப்பெண் அலங்கார வகுப்பு

வெள்ளவத்தை Nature way இல் மணப்பெண் அலங்கார Facials Wedding Structures, Rich Cakes, B'day Cakes தையல், Flower Decoradions என்பவற்றுக்கான Orders ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றுக்கான வகுப்புகள் சான்றிதழ்களுடன் நடைபெறுகின்றன. T.Luxmy 18/B, Station Road, Wellawatte .Tel.2505325. (42651)(21.16.13)

### தேவை

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் படித்த, 25 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (42681) (21.13.16)

### பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல்

துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த பொன்மணி தம்பிராசா ஆகிய நான் இன்றிலிருந்து (11.11.2005) எனது பெயரை **பொன்மணி ஜென்ராஜ்** என பெயர் மாற்றம் செய்து கொள்கின்றேன். ஆகவே எனது சகல ஆவணங்களிலும் இனிமேல் *பொன்மணி ஜென்ராஜ்* என்றே குறிப்பிடுவேன் என்று இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

பொன்மணி
ஜென்ராஜ்

துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (21.13.16) (42817)

### சாரதி தேவை

பாரவூர்தி வாகனம் செலுத்தக் கூடிய 10 வருடம் அனுபவம் உள்ள சாரதி உடன் தேவை.
மாதச் சம்பளம் 8,000/-
அத்துடன் மதிய உணவுக்காக 60/- வழங்கப்படும்.
தொடர்பு:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி 222 2567
(சி-46187) (21.13.16)

### ஹோட்டலுக்கு வேலையாள்கள் தேவை

1. சப்ளையர்ஸ்
2. ரீமேக்கர்
3. பார்சல் கட்டுபவர்
4. சமையல் உதவியாளர்

உடன் தொடர்பு:-
**திரீ ஸ்டார் ஹோட்டல்**
இல.162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
**T.P.: 222-7125**
(சி-46190) (21.13.16)

## பளையில் 56 வீடுகள் புதிதாக நிர்மாணம்

தென்மராட்சி,நவ.13

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் பளைப் பிரதேசத்தில் 56 வீடுகளை அமைத்து வருகின்றனர்.

புலோப்பளை மேற்கு, கச்சார்வெளி, முல்லையடி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இவ்வீடுகள் அமைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு வீடும் இரண்டு லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருவதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117)

### ஆங்கில இலவச பாடநெறி

**SAAMSTECH** இன் இம்மாதத்திற்கான 4ஆவது இலவச வகுப்புகள் *15.11.2005 ரிம்மர் மண்டபத்தில்* நடைபெறும்.
(42.13.16) **SAAMSTECH** (42322)
**T.P.: 4591571, 222 9505.**

### தேவை

வெள்ளவத்தையில் தங்கியிருந்து தையல் வேலை செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த 40 வயதுக்குட்பட்ட பெண் தேவை.
தொடர்பு கொள்ளவேண்டிய தொலை.பே.எண்
**0112-505325**
(21.13.16) (42652)

### விற்பனைக்கு

ஒரு தடவையில் 07CD கள் பதிவு செய்யக்கூடிய இயந்திரம் ஒன்று விற்பனைக்குள்ளது.
தொடர்புகளுக்கு:- (42827)(2113.16)
**ஸ்கைறோஸ் ஒலிப்பதிவுக் கூடம்**
இல.01.ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பணம்.

### தேவை

யாழ். நகரிலுள்ள ஆங்கில மருந்தகத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை. விண்ணப்பதாரர் க.பொ.த. சாதாரண தரம் அல்லது உயர்தரம் (ஆங்கிலம், விஞ்ஞானம் உட்பட) சித்தியுடன் அனுபவமுள்ளவராகவும் யாழ். நகரின் அண்மித்த பகுதிகளில் வசிப்பவராகவுமிருத்தல் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல:2744
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(13.16.21) (42579)

### தேவை

எமது நிறுவனத்தில் விற்பனையாளராகப் பணிபுரிவதற்கு வேலையாள்கள்(ஆண்கள்) தேவை. சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.
**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
**234, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(13.16.21) (C/46100)

### தேவை

எமது நிறுவனத்தில் கணக்காளராகப் பணிபுரிவதற்கு ஆள்கள் தேவை.
சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.
**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
**234, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(13.16.21) (C/46098)

### துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி பாரதி பரமேஸ்வரன்
அவர்களின் தந்தையும் எமது
கோட்டக்கல்வி அதிகாரி
*திரு.க.ச.பரமேஸ்வரன்* அவர்களின்
அன்பு மாமனாருமாகிய
**கதிர்காமு நடராசா**
*(ஓய்வுபெற்ற அதிபர்)*
அவர்கள் 29.10.2005 கரவெட்டி
கிழக்கில் இறைபதம் அடைந்த செய்தி
கேட்டு அதிர்ச்சி அடைகிறோம்
அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், சிற்றூழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

மு/பாரதி வித்தியாலயம்,
வள்ளுவபுரம், விசுவமடு. (சி /46200)(42.13.16)

# இந்திய கிரிக்கெட் அணியின் ஆட்டம் தென்னாபிரிக்காவிடம் எடுபடுமா?



இலங்கை அணியுடனான ஒரு நாள் கிரிக்கெட் தொடரைக் கைப்பற்றி தெம்புடன் விளங்குகிறது இந்திய அணி. இப்போது அதன் கவனம் தென்னாபிரிக்காவுடனான ஒரு நாள் போட்டித் தொடரின் பக்கம் திரும்பியுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடர் ஆரம்பமாகின்றது.

2004ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற போட்டியில் குரேஞ்ஞே தலைமையிலான தென்னாபிரிக்க அணி இந்திய அணியிடம் படுதோல்வி அடைந்தது. அப்போட்டியில் பங்குபற்றிய தென்னாபிரிக்க அணியினர் லஞ்சம் பெற்றுக் கொண்டு வேண்டுமென்றே தோற்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

தற்போது இந்திய மண்ணில் இடம் பெறும் ஆட்டத்தில் பங்குபற்ற இந்தியாவுக்கு வருகைதரும் தென்னாபிரிக்க அணியில் உள்ள வீரர்கள் சிலரிடம் புலன் விசாரணை மேற்கொள்வதற்கு குற்றப்புலனாய்வுப் பொலீஸார் முயற்சி செய்து வருகின்றனர். இதனால் குரேஞ்ஞே தலைமையில் இடம் பெற்றிருந்த அணியில் விளையாடிய கிப்ஸ், நிக்கி போஜே ஆகியோரை இத்தொடரில் சேர்த்துக் கொள்ளாமல் தென்னாபிரிக்க அணி இந்தியா வரவுள்ளது.

இந்திய அணியைப் பொறுத்தவரை அவ்வணி துடுப்பாட்டத்திலும் சரி, பந்து வீச்சிலும் சரி நிறையவே சாதித்துள்ளது. துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை மிகவும் பலம் வாய்ந்த அணியாக இந்தியா விளங்குகின்றது. சச்சின் ராவிட், சேவாக், யுவராஜ்சிங், கைவ் என்ற அனுபவசாலிகளுடன் விக்கெட்காப்பாளர் மகேந்திரசிங் தோனி, சுரேஸ் ரெய்னா கவுதரும் காம்பீர், வேணு கோபால் ராவ் என துடுப்பாட்ட வரிசை மிகவும் ஸ்திரமாகவுள்ளது.




குறிப்பாக இலங்கையுடனான போட்டித் தொடரில் அறிமுகப்படுத்தப்பட்ட கவுதம் காம்பீர் ரெய்னா, வேணு கோபால் ராவ் போன்ற வீரர்கள் தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளனர்.

பந்து வீச்சைப் பொறுத்தவரையிலும் அனுபவசாலிகளான இர்பான் பதான், அகார்கர் சுழற் பந்து வீச்சாளர்களான ஷர்பஜன்சிங், முரளி கார்த்திக் போன்றோர்களுடன் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்ரீசாந்த், ஆர்.பி.சிங் ஆகியோர் இணைந்த கூட்டணி இலங்கை அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது போல் தென்னாபிரிக்க அணிக்கும் கொடுப்பார்கள். களத் தடுப்பைப் பொறுத்தவரை தான் இந்திய அணி மோசமாக காணப்படுகின்றது.

ஆனால் இளம் வீரர்களின் களத்தடுப்பு சொல்லும்படியாக உள்ளது. ஏனைய வீரர்களும் அவ்வாறு களத் தடுப்பில் கவனமெடுத்துச் செயற்படும் போது தென்னாபிரிக்காவுக்குச் சவாலாகவே இருக்கும்.

தென்னாபிரிக்க அணியினர் துடுப்பாட்டம், பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு ஆகியவற்றில் ஜம்பவான்களாகத் திகழ்கின்றனர். அண்மையில் சிம்பாவேயில் இடம் பெற்ற முத்தரப்புப் போட்டித் தொடரில் இந்திய அணியை மண்கௌவச் செய்து வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது நியூசிலாந்து அணி. அவ்வணியை கடந்த வாரம் நடைபெற்ற போட்டித் தொடரில் 4-0 என்ற அடிப்படையில் தோற்கடித்து வெற்றிக் களிப்புடன் இந்திய மண்ணிற்கு வருகிறது தென்னாபிரிக்கா அணி அது மட்டுமல்ல ஒருநாள் போட்டித் தொடரின் தரப்படுத்தல் வரிசையில் தென்னாபிரிக்கா 4 ஆவது இடத்தில் இருந்து 2 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

தென்னாபிரிக்காவைப் பொறுத்தவரை துடுப்பாட்டத்திலும் சரி, பந்துவீச்சிலும் சரி களத்தடுப்பிலும் உலக சம்பியனான ஆஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாகவுள்ளது. துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கிரேம் ஸ்மித், டி.வில்லின்ஸ் மார்க் புட்சர் ஆகியோருடன், சகல துறை ஆட்டக்காரர்களான ஷேன் பொலக், ஜக் கலிஸ் ஜஸ்டின் கெம்ப் என ஒரு பலமான நிலையுடன் காணப்படுகின்றது.

அதேபோல்வே பந்து வீச்சாளர்களான மார்க் என்ரனி, நெல், லாங்வெல்த் போன்றவர்கள் அணிக்குழு மேலும் வலுச்சேர்க்கக்கூடிய வகையில் இந்திய அணியின் விக்கெட்டுக்களைச் சாய்க்கக் கூடியவர்கள். அது [illegible] லாது களத்துடுப்பைப் பொறுத்தவரை அ[illegible]ளுக்கு நிகர் அவர்களே. அவர்களின் களத்தடுப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் கென்டி ரொட்ஸ் களத்தடுப்புத் தொடர்பான பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் அவ்வணி வீரர்களுக்கு வழங்கிவருவது மேலும் அவர்களுக்குப் புது உற்சாகத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எது எப்படி இருந்தாலும் தென்னாபிரிக்க அணியின் மும்முனைத் தாக்குதல் இந்திய மண்ணில் எடுபடுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

இவ்விரு அணிகளும் மோதும் முதல் மூன்று போட்டிகளுக்கான மைதானங்களை இந்திய கிரிக்கெட் சபை அறிந்துள்ளது. அந்த அடிப்படையில் முதலாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி ஹைதராபாத்தில் பகல் ஆட்டமாகவும் அடுத்த இரு போட்டிகளும் முறையே 19, 22 ஆம்திகதிகளில் பகலிரவு ஆட்டங்களாக பங்களூரிலும், சென்னையிலும் நடைபெறவுள்ளன.

# 'டெஸ்ட்' பந்து வீச்சாளர் வரிசையில் முதலிடத்தைப் பிடித்தார் வார்ன்



உலக கிரிக்கெட் தரப்படுத்தல் வரிசையில் ஆஸ்திரேலிய அணியின் சுழற் பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் முதற்தடவையாக டெஸ்ட் பந்து வீச்சாளர் வரிசையில் முதனிலை பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தனது டெஸ்ட் தரப்படுத்தல் வரிசையை கடந்த திங்கட்கிழமை வெளியிட்டுள்ளது. அதில் அண்மையில் இடம் பெற்ற ஆஸஸ் டெஸ்ட் தொடரில் 40 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய ஆஸி அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் 894 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார். இரண்டாமிடத்தை அவ்வணியைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் க்ளென் மெக்ராத் பெற்றுள்ளார்.

இதேவேளை, இலங்கை அணியின் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், வாஸ் ஆகியோர் 3 ஆம், 7 ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர். இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இர்பன்பதான் முதல் முறையாக 10 பேருக்குள் இடம் பெற்ற 10 ஆவது இடத்தைத் தக்கவைத்துள்ளார்.

அதே நேரம் டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறந்த துடுப்பாட்ட வீரராக தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஜக்கலிஸ் விளங்குகின்றார். அவர் மொத்தம் 897 புள்ளிகளைப் பெற்று முதல் நிலையில் உள்ளார்.

துடுப்பாட்டத்தில் முதல் பத்து இடங்களையும் பெறும் வீரர்களின் விவரம் வருமாறு:

| இல. | பெயர் | அணி | புள்ளி |
|---|---|---|---|
| 01. | ஜக்கலிஸ் | தென்ஆபிரிக்கா | 897 |
| 02. | றிக்கிபொன்டிங் | ஆஸ்திரேலியா | 891 |
| 03. | ராகுல்ராவிட் | இந்தியா | 851 |
| 04. | வீரேந்தர் ஷேவாக் | இந்தியா | 835 |
| 05. | பிறைன்லாரா | மேற்கிந்தியத் தீவுகள் | 831 |
| 06. | ஹய்டன் | ஆஸ்திரேலியா | 811 |
| 07. | திரெஸ்கோதிக் | இங்கிலாந்து | 778 |
| 08. | இன்சமாம் உல் ஹக் | பாகிஸ்தான் | 773 |
| 09. | ஸ்ரரூஸ் | இங்கிலாந்து | 768 |
| 10. | சந்தர்போல் | மே.இ.தீவுகள் | 757 |

பந்து வீச்சில் முதல் பத்து இடங்களையும் பெறும் வீரர்களின் விவரம் வருமாறு:

| இல. | பெயர் | அணி | புள்ளி |
|---|---|---|---|
| 01. | ஷேன்வோர்ன் | ஆஸ்திரேலியா | 880 |
| 02. | க்ளென் மெக்ராத் | ஆஸ்திரேலியா | 878 |
| 03. | முத்தையாமுரளிதரன் | இலங்கை | 871 |
| 04. | பிளின்ரொப் | இங்கிலாந்து | 793 |
| 05. | ஷேன்பொலக் | தென்னாபிரிக்கா | 787 |
| 06. | மார்க்ந்தினி | தென்னாபிரிக்கா | 784 |
| 07. | சமிந்தவாஸ் | இலங்கை | 770 |
| 08. | சொகைப் அக்தார் | பாகிஸ்தான் | 770 |
| 09. | [illegible]ாகாட் | இங்கிலாந்து | 762 |
| 10. | இ[illegible]பன் பதான் | இந்தியா | 756 |

# தமிழரைச் சதிவலைக்குள் இழுக்கிறார் ரணில்; தாயகக் கோரிக்கையை மறுக்கிறார் மஹிந்த!

## தேர்தலால் பலனில்லை என்கிறது கூட்டுறவு ஊழியர் சங்கம்

ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்கவும் மஹிந்த ராஜபக்ஷவும் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்களில் இருவரினதும் பேரினவாத அடிப்படையிலான அரசியல் கபடம் தெளிவாகப் புலப்படுகிறது.

ரணில் தமிழர்களைச் சதி வலைக்குள் இழுத்து விடப்பார்க்கிறார். மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் தாயகக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவே இல்லை. இந்த நிலையில் தமிழ்மக்கள் இவர்களுக்கு வாக்களிப்பதால் - எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறது கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் எனக்கோரி அந்தத் தொழிற்சங்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா சிங்கள பௌத்த பேரினவாதமே ஸ்ரீலங்காவின் அரசியல் கலாசாரமாக விளங்குகின்றது. கடந்த பல தசாப்தங்களாக பேரினவாதமே கோலோச்சுகிறது. ஸ்ரீலங்காவின் இந்தப் பேரினவாதக் கோட்பாடு தமிழினத்தை முற்றாகவே அழித்தொழிப்பதில், அரசியல் கட்சிகளுக்கிடையில் நடைமுறை சம்பந்தமான முரண்பாடுகளிலிருந்தாலும் அரசியலை ஒருங்கிணைக்கும் தந்திரோபாயத்தில் மட்டுமே வேறுபாடு காணப்படுகிறது.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி வேட்பாளர்களில் முதன்மை வேட்பாளர்கள் வெவ்வேறு கட்சிகள் சார்பில் போட்டியிட்டாலும் பேரினவாதம் அவர்களைப் பிணைத்து நிற்கின்றது.

ரணில், மஹிந்த ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்களில் பேரினவாத அடிப்படையிலான அவர்களது அரசியல் கபடம் தெளிவாகப் புலப்படுகின்றது.

ரணில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இன முரண்பாட்டிற்கான தீர்வு காண்பதற்கு வழிமுறையாகத் தானே கைச்சாத்திட்ட ஒஸ்லோ ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள சமஷ்டி குறித்து எதுவுமே பேசவில்லை.

நவீன இராணுவத்தை அமைப்பது கிழக்குக்கெனத் தனியான நவீன போரியல் பிரிவு, எல்லைப்புறக் குடியேற்றங்களில் உள்ளவர்களுக்கென ஆயுதம் வழங்கப்பட்டு ஆயுதப் பிரிவுகளை அமைத்தல், தீர்வுத் தீர்மானங்கள் ஏற்படின் அதனைப் பெரும்பான்மை முடிவுக்காக பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்குவிடல் என்ற பெரும் சதிவலைப் பின்னல் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அவரது வெளியிடப்படாத கசிந்து வெளிவரும் விடயங்கள் அவரது கட்சியினாலேயே கக்கப்படும் தமிழின அழிப்புத் திட்டங்கள் பல பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

மஹிந்த, தமிழர் வரலாற்று ரீதியாக வாழ்ந்த தாயகத்தை மறுக்கிறார். சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளவிலலை. ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம், புனர்வாழ்வு கட்டமைப்பு புறந்தள்ளப்படுகின்றது. ஒற்றையாட்சியின் கீழேயே அதிகாரப்பரவலாக்கல் ஒரு தேய்ந்துபோன கழுதையென இவரது பேரினவாத முழக்கம் நீளுகிறது.

இவருக்கு சாமரம் வீசும் ஒட்டுப் பேர்வழிகள் மத்தியில் கூட்டாட்சி,வடகிழக்கில் சுயாட்சி என்றுவிட்டு மஹிந்தவின் ஒற்றையாட்சிக்கு துதிபாடுவோர் பல்டி அடித்துவிட்டனர் என்ற உண்மை புலப்படுகின்றது. சிங்கள தேசத்தின் ஜனாதிபதித் தேர்தல், தமிழீழ தேசத்தவரை அழிக்க நடத்தப்படும் ஒரு அரங்கம். அதில் கதாநாயகர்கள், வில்லன்கள், துதிபாடுபவர்கள் எனப் பலபல வேடதாரிகள் வருவர். இதில் தமிழ் பேசும் மக்களது அரசியல், வாழ்வுரிமைகள் ஒதுக்கப்பட்டுவிட்டன.

எனவே, ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதே எமது இருப்பை, பாதுகாப்பை, சுதந்திரத்தை பேணுவதற்கான எமதுவிருப்பை வெளியிடுவதற்கான ஒரே வழிமுறையாகும்.

தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களியாது புறக்கணித்து எமது தேசிய அபிலாஷையை வெளிப்படுத்துவோம். (த)

## உணவு கையாளும் நிலையத்துக்கு 'சீல்'

தென்மராட்சி,நவ.13

கொடிகாமம் நகர்ப்பகுதியில் உணவு கையாளும் நிலையமொன்று சுகாதாரப் பகுதியினரால் சீல்வைத்து மூடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றின் பணிப்பின் பேரில் கடந்த வியாழனன்று உணவு கையாளும் நிலையத்தில் திடீர்ப் பரிசோதனை மேற்கொண்ட சுகாதாரப் பகுதியினர், அங்கு சுகாதார மற்ற முறையில் இயங்கியதை அவதானித்து உடனடியாக சீல் வைத்து மூடினர். (எ-117)

# ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்



வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள
**வி.நாகராஜ சுவாமிகள்** அவர்கள்

இவர் ஜாதகம், கைரேகை மூலமாக துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறார். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்காலப் பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

★ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளைச் சந்திக்கலாம்.

(42677) **பிள்ளையார் இன்**

அறை எண் 3, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9582596.


## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 - 04 - 1933 | 25 - 10 - 2004 |

### கணபதிப்பிள்ளை கந்தசாமி (டைகர்)

ஆண்டு ஒன்றாகியும்
ஆறாது எங்கள் துயரம் - அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (42697)(26-17-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 - 07 - 1956 | 14 - 10 - 2005 |

### அமரர் சுந்தரம் பரஞ்சோதி (சுந்தர்ராசன்)

*14-10-2005 அன்று காலமாகிய எமது மூத்த சகோதரர் அமரர் பரஞ்சோதி அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், தொலை பேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தோருக்கும்- எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இன்று (13-11-2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும் பின்பு நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு மிகவும் அன்பு டன் அழைக்கின்றோம்.*

தகவல்:
சகோதரன்-கண்ணன், மைத்துனி - கௌசலா
பிள்ளைகள் - பகவான்,வேந்தன், சிம்மன்-திவாகரன்
பேறாமக்கள் - தீபா-கீதா-தீபன்-தினோ-தினு.

முகவரி:
அம்மாகடை வீதி,
வரணி. (42812)(26-17-14)

## கல்வியங்காட்டில் வாள்வெட்டு; வீதியால் சென்றவர் படுகாயம்

குடத்தனை நவ.13

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், வீதியால் பயணித்தவரை பலமாகத் தாக்கியதுடன், வாளாலும் வெட்டினர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் கல்வியங்காட்டு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில், சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியைச் சேர்ந்த த.கமலநேசன் (வயது-30) என்பவரே தாக்கப்பட்டதுடன், வாள்வெட்டுக் கும் இலக்காகி யாழ். போதனா வைத்திசாலை யில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் இருபாலையில் உளள தமது உறவினர் வீட்டில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கு பற்றிவிட்டுத் திரும்பிய வேளையிலே வாள் வெட்டுக்கு இலக்காகினார் என்று கூறப் பட்டது. (எ-78)

## ஞானக்கோன் தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு, நவ.13

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர் பான சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட் டுள்ள பிரபல தொழிலதிபர் சார்ள்ஸ் ஞானக் கோனை அடுத்த மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் குசலா சரோஜினி வீரவர்த் தன உத்தரவிட்டார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொலீ ஸார் சார்ள்ஸ் ஞானக்கோனை நேற்றுமுன் தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அமைச் சர் கதிர்காமரின் கொலை தொடர்பில் மேலதிக விசாரணைகளை நடத்தவேண்டியிருப்பதால் அவரைத் தடுத்துவைப்பதற்கான அனுமதியை பொலீஸார் மன்றில் கோரினர். இதனையடுத்தே எதிர்வரும் 10 ஆம் திகதிவரை ஞானக் கோனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அன்றைய தினம் விசாரணைகளின் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் பணிப்புரை விடுத்தார். (எ-க)

## சர்வதேச பிரதிநிதிகள் இலங்கை வருகை

கொழும்பு, நவ.13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 'பவ்ரல்' அமைப்பின் சார்பில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக சர்வதேசப் பிரதிநிதிகள் 110 பேர் இலங்கை வந்துள்ளனர்.

ஐரோப்பிய மற்றும் தெற்காசியாவின் 35 நாடுகளைச் சேர்ந்த இவர்களுக்கு தேர்தல் கண்காணிப்புத் தொடர்பாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் இன்று முதல் அந்தந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்பட வுள்ளனர் என 'பவ்ரல்' அமைப்பின் தலை வர் கிங்ஸ்லி ரொட்றிகோ தெரிவித்தார்.

இவர்களில் 40 பேர் வடக்கு - கிழக்கி லுள்ள 14 கொத்தணி வாக்களிப்பு நிலையங் களைக் கண்காணிப்பதற்காக அந்தப் பகுதி களுக்கு அனுப்பப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (க)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மானிப்பாய் சோதிவேம்படி
வித்தியாசாலை மாணவி
செல்வி
**கவிஜா சிவபாலன்**
அவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2005 இல் சித்தியடைந்தும் தமிழ் திறன்போட்டியில் வலய மட்டத்தில் வாசிப்பில் 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டமைக்காக செல்வி சி.கவிஜாவைப் பாராட்டி வாழ்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

சோதிவேம்படி வீதி,
மானிப்பாய். (42619)(26-17-14)

பெரியம்மா,
அன்ரி, மாமா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை மாணவி

செல்வி **சிவலோகநாதன் கோகுலவதனி**

2005 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 187 புள்ளிகள் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். UCMAS அகில இலங்கை மட்டத்திலான போட்டிப் பரீட்சையில் வெற்றிக் கேடயம் பெற்றுள்ளார். இவர் மேன்மேலும் வளம்பெற சங்குவேலி வைரவர் துணை வேண்டிப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

(42813)(26-17-14)

-குடும்பத்தினர்.

## தேவை

பதவி :- **ஓட்டோ ஓட்டுநர்**

தகைமை :- 1) அடிப்படைக் கல்வியுடன் ஓட்டோ ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
2) தேவை ஏற்படின் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றும் ஆற்றல் உடையவராகவும்-
3) வலுவிழந்தோருடன் சேர்ந்து பழகி, சேவை செய்யும் மனப்பான்மை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

வேதனம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பம் : சுயவிவரத்துடன் 25-11-2005 இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். எதிர்பார்க்கப்படும் வேதனத்தையும் குறிப்பிடுக.

குறிப்பு :- தெரிவுசெய்யப்படுபவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்,
100, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (42503)(26-17-14)


# SAAMSTECH இன் ஆங்கிலம்

எழுத, வாசிக்க, கதைக்க, புரிந்துகொள்ள மூன்றே மாதத்தில் முழுமையான ஆங்கிலம்

- அடிப்படைக்கட்டமைப்புக்கள் மூலம் வசன உருவாக்க வேகம்
- விருத்தியாக்க படிமுறைமூலம் பெரிய வசனங்கள்
- ஒலிப்பயிற்சி மூலமான கிரகித்தல்
- பழக்கப்படுத்தல் மூலம் சொல்வள விருத்தியாக்கம்
- பிரயோகங்கள் மூலம் தொடர்ச்சியான கதைத்தல்
- உரையாடல் மூலமான தேர்ச்சி

அனேகரின் விருப்பத்திற்கிணங்க............

இன்றும் நாளையும் ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள், CD என்பன இலவசம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

# மாபெரும் சலுகை

அலுவலர்களுக்கான பிரிவு
இளைஞர் மற்றும் யுவதிகளுக்கானது
வீட்டுப்பெண்களுக்கான பிரிவுகள்
பாடசாலை மாணவர்களுக்கானது
பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்களுக்கானது

கட்டணம் ரூ3000. காலம் 3 மாதங்கள். ஒவ்வொரு பிரிவுக்கும் காலை, மாலை வார மற்றும் சனி,ஞாயிறு வகுப்புக்கள் உண்டு. விரும்பிய வகுப்பில் பதிவுசெய்யலாம். ஒவ்வொரு வகுப்பிலும் 30 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna. Ph : 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505

# பரீட்சைக்காகப் பட்டபாடுகளை பகிர்கின்றனர் சாதனையாளர்கள்

கடந்த மாதம் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தர பெறுபேறுகளில் வடபகுதியில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்ற மாணவர்கள் எத்தகைய வழிகளைக் கையாண்டு இத்தகைய பெறுபேற்றினைப் பெற்றார்கள் என்பதை இனிவரும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டும் முகமாக சாதனை படைத்த மாணவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துகளைத் தருகின்றோம்.

இந்த மாணவர்கள் எத்தகைய இலக்கினை நோக்கிச் செல்கிறார்களோ அத்தகைய இலக்கினை வெற்றிகரமாக அடைந்து எமது தாயக மண்ணில் சேவையாற்ற வேண்டுமென்று ஊக்கமளிக்கும் வகையில் உதயனின் இந்தத் தொடர் அமைகிறது.

9

### பகலில் உழைப்பு இரவில் படிப்பு



இராசத்தினம் விஜயகுமார்
சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
கலைப்பிரிவு
மாவட்டநிலை 7

பண்டத்தரிப்பு பிரான்பற்றினைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தில் கற்று 9 ஆம் தரத்தில் சண்டிப்பாய் இந்துக்கல்லூரியில் இணைந்து கொண்டார்.

இவருடைய சாதனை பற்றி கேட்டபோது...

எனக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் 4ஏ, 3 பி, 2 சி, எஸ் என்ற பெறுபேறு கிடைத்தது.

நான் சாதாரணதரம் வரைக்கும் ரியூசனுக்குப் போனதில்லை. உயர்தரம் படிக்கின்ற போதுதான் ரியூசனுக்குப் போனேன்.

நான் கலைப்பிரிவினைத் தேர்ந்தெடுத்தற்கான காரணம் அம்மாவின் விருப்பத்தின் பேரில் எங்கட வீட்டில் மூத்தவர்கள் யாரும் பெரிதாகப் படித்ததில்லை. அதனால் என்னை யாவது படிப்பிக்க வேண்டுமென்ற பேரவா. அதனால் சரியாக கஷ்ரப்பட்டுத்தான் அம்மா படிப்பிச்சவா நான் சாதரணதரம் படிக்கின்ற போது அப்பா இறந்துவிட்டார்.

அதனால் படிப்பதற்கு பெரும் சிரமங்கள். நான் படித்த நாள்களை விட வேலைக்குச் சென்ற நாள்களே அதிகம். அதுவும் மேசன் வேலைக்குப் போய்த்தான் இரவு நேரங்களில் படிப்பேன்.

அதிக நேரமெடுத்துப் படித்தேன். தமிழ், இந்து நாகரீகம், பொருளியல் ஆகிய பாடங்களில், இந்துநாகரீகம், பொருளியல் ஆகியவற்றில் முக்கிய குறிப்புகளை எடுத்துத்தான் படித்தேன். என்னுடைய இத்தகைய வளர்ச்சிக்கு எனது கல்லூரித்தாயின் ஆசான்கள் அளப்பெரும் உதவிபுரிந்தார்கள். கிராமப் புறத்தில் போதிய வளங்களின்றி இருந்தாலும் இருக்கின்ற வளங்களைக் கொண்டு உயரிய பணியாற்றி மாணவர்களின் வளர்ச்சிக்குத் துடிப்புடன் செயற்படும் சண்டிலிப்பாய் இந்துவின் ஆசான்கள் என் தெய்வங்கள். குறிப்பாக கல்லூரியின் உப அதிபர் ஆனந்த நடராசா என் கல்வியின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரியில் விளையாட்டுத்துறை, கலைத்துறை போன்ற சகல துறைகளிலும் பங்குபற்றியுள்ளேன். எந்தவொரு மாணவனும் கல்வியில் வெற்றிபெற வேண்டுமானால் தனக்குள்ளே ஒரு நம்பிக்கையும் விடாமுயற்சியும் ஆசிரியப் பெருந்தகைகள் மீது அளவு கடந்த மரியாதையும் வைத்திருத்தல் வேண்டும்.

***

### அம்மாவின் விருப்பம்!



சொரூபினி முருகையா
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
வர்த்தகப்பிரிவு

ஊரெழுவைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் தரம் 7 வரை ஊரெழு கணேசவித்தியாலயத்தில் கற்றுப் பின்னர்தான் யூனியன் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

இவர் தன்னுடைய வெற்றி பற்றி இப்படிச் சொல்கிறார். எனக்கு ஜி.சீ.ஈ. சாதரண தரத்தில் 4ஏ, 2பி, சி, எஸ் என்ற பெறுபேறு கிடைத்தது. எனக்கு உயர்தரத்தில் கலைத்துறையில் படிக்கத்தான் ஆசை. ஆனால், அம்மாவின் விருப்பத்தின் பேரில் வர்த்தகத்துறையினைத் தேர்ந்தெடுத்தேன். அம்மாவின் விருப்பத்திற்கிணங்க அந்தத் துறையில் சிறந்த அடைவினை பெறவேண்டுமென்ற உயரிய எண்ணத்துடன் படித்தேன். அப்படிப் படித்துக் கொண்டிருக்கும் போது அம்மா இறந்துவிட்டார்.

அதனால் எனக்குப் படிப்பே வேண்டாமென்ற அளவுக்கு மனம் வெறுத்துப்போனது. இந்த முறை பரீட்சை எழுதுகிற எண்ணத்தையும் கைவிட்டிருந்தேன். எங்கட கல்லூரியில் படிப்பிக்கிற ஆசிரியர் ஒருவர் வீட்டுக்கு வந்து என்னை இந்த முறை எப்படியாவது பரீட்சை எழுத வேண்டும் என்று வற்புறுத்தினார். அதன் பின்னர்தான் என்னைத் திடப்படுத்தி படிக்கத் தொடங்கினேன். இரவு நேரங்களில் தான் அதிகம் படிப்பதுண்டு சில நண்பிகளுடன் சேர்ந்துபடிப்பேன் முக்கியமான பாடங்களை குறிப்புகள் எடுத்துத்தான் படித்தேன்.

எங்கட பள்ளிக்கூடத்தில கற்பிக்கிற ஆசிரியர்கள் மிகுந்த அக்கறையுடன் எங்களைக் கவனிப்பார்கள் பாடசாலை நேரம் தவிர்ந்த வேளைகளெல்லாம் தங்கட வீடுகளுக்கு கூட்டிப் போய் மேலதிகமான வகுப்புகளை எடுத்தார்கள்.

மூன்று 'ஏ' வருமென்று எதிர்பார்த்திருந்தேன் ஆனால், அந்த சந்தோசமான செய்தியைக் கேட்க என்னுடைய அம்மா இல்லையென்று நினைக்கும் போதுதான் கவலையாக இருக்கிறது.

***

### அதிகாலையில் படிப்பதே மனதில் அதிகம் பதியும்



செல்வத்திரவியம் திருக்குமரன்
யூனியன் கல்லூரி
கலைப்பிரிவு

சுன்னாகத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக்கல்வியை சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தில் கற்று பின்னர் யூனியன்கல்லூரியில் இணைந்து கொண்டார்.

இவர் தன்னுடைய சாதனை பற்றி இப்படிக் கூறுகிறார்.

எனக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் 2ஏ, 2 பி, 4சி என்ற பெறுபேறுகள் கிடைத்தது.

நான் இந்து நாகரீகம், புவியியல், நாடகமும் அரங்கியலும் என்ற பாடங்களைத் தெரிவு செய்து படித்தேன். இதில் புவியியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்கள் கடினமானதாக இருந்தது அந்தப்பாடங்களை மிகவும் அக்கறையுடன் விசேட வகுப்புகளுக்குப் போய்ப் படித்தேன். இரவு நேரங்களில் தான் அதிகம் படிப்பேன் அதுவும் நேரஅட்டவணை ஒன்றினை நானே தயாரித்து அதன்படி படித்தேன்.

இரவு படிக்கின்ற போது சில பாடங்களில் முக்கியமான குறிப்புகளை எடுத்துவைப்பேன். அவற்றினை அதிகாலை 4 மணிக்கெல்லாம் எழும்பிப்படித்தேன் அதனால், அந்தப்பாடக் குறிப்புகளை மனனம் செய்யக்கூடியதாக இருந்தது.

விளையாட்டுத்துறைகளில் அதிகம் ஈடுபட்டேன் மாலை வேளைகளில் மைதானத்தில்தான் எனது பொழுது போகும். இரவுதான் படிப்பேன்.

எந்தவொரு மாணவனும் தன்னைத்தானே கட்டுப்படுத்தி ஒரு இலக்கினை அடைய வேண்டும் என்ற உறுதியுடன் படித்தால் வெற்றி பெறலாம் என்பது எனது கருத்தாகும். *

செவ்வி: அபிமானன்

# நாளை உலகம் நம் கையில்.....!

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சமீபத்தில் வெளியாகின. அந்தப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். மாவட்டத்தில் முதல் 10 இடங்களைப் பெற்றுக் கொண்ட சிறார்களிடம் பேச்சுக்கொடுத்துப் பார்த்தோம். அவர்கள் கூறியவற்றை இங்கு தொடராகத் தருகின்றோம்.

மாவட்ட நிலையில் எட்டாம், பத்தாம் இடங்களைப்பெற்ற மாணவர்கள் கூறியவற்றை இந்தமுறை தருகின்றோம்.

4



மோகனதாஸ் மோகனலக்ஷன்
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
மொத்தப்புள்ளிகள் 164
யாழ்.மாவட்ட நிலை 8

***கேள்வி:*** உங்களுடைய கல்வியில் அப்பா, அம்மா எப்படி ஊக்கம் தந்தார்கள்...?

***பதில்:*** அப்பா கணித ஆசிரியராகக் கடமை ஆற்றுகிறார் அம்மா வீட்டில் உள்ளார். எனக்கு ஒரு தங்கை மட்டும் உள்ளார். எனது பெற்றோர் நிறையப்பயிற்சிப் புத்தகங்களை வாங்கித்தந்தார்கள் அதனை செய்த பின்பு சரிபார்த்து பிழைவிடும் கேள்விகளை விளங்கப்படுத்தி, வேறொரு தினத்தில் செய்து காட்டும்படி கூறுவார்கள்.

***கேள்வி:*** புலமைப்பரிசில் பரீட்சைக்கு எவ்வாறு தயாரானீர்கள்?

***பதில்:*** அதிக நேரத்தைப் படிப்பதற்கு ஒதுக்கிவிட்டு, ஏனைய ஓய்வு நேரங்களில் கதைப்புத்தகங்கள், வினாவிடை, விடுகதை, விஞ்ஞானம் சார்ந்த புத்தகங்கள், பொதுஅறிவு சார்ந்த புத்தகங்கள் என்பனவற்றை வாசிப்பேன். அத்துடன் நிறையப் பரீட்சை மாதிரி வினாத்தாள்களைச் செய்து பயிற்சி பெற்றேன். அவ்வாறே நான் பரீட்சைக்கு என்னைத் தயார்படுத்திக் கொண்டேன்.

***கேள்வி:*** பரீட்சையில் நீங்கள் வெற்றி பெற்றதற்குக் காரணமாய் இருந்தவர்கள் யார்...?

***பதில்:*** அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் என எல்லோரையும் குறிப்பிடலாம். அனைவருமே எனது வெற்றிக்கு ஒத்துழைப்புத் தந்தார்கள்.

***கேள்வி:*** பரீட்சை வினாத்தாளை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?

***பதில்:*** இலகுவான வினாக்களை முதலில் தேர்தெடுத்துச் செய்துவிட்டு, கடினமான வினாக்களை இறுதியாகச் செய்தேன் அத்துடன் நேரத்தையும் கவனத்தில் எடுத்துச்செய்தேன்.

***கேள்வி:*** உங்களுடைய எதிர்கால இலட்சியம் என்ன?

***பதில்:*** ஒரு வைத்தியராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியமாகவுள்ளது.

***கேள்வி:*** உங்களுடைய பொழுதுபோக்குகள் என்ன?

***பதில்:*** முத்திரைசேகரிக்கும் பழக்கத்தை நான் தரம் 3 முதல் கொண்டுள்ளேன். கிரிக்கெட் விளையாடுவேன். தொலைக்காட்சியில் சிறுவர்தொடர்களை விரும்பிப்பார்ப்பேன். ஓவியம் வரைவதிலும் எனக்கு ஆர்வம் உண்டு.

***கேள்வி:*** கலைத்துறையில் ஆர்வம் உண்டா?

***பதில்:*** நான் வயலின் பழகிவருகிறேன். ஓரளவிற்கு வாசிக்கப் பழகிவிட்டேன். நாடகங்களும் நடித்துள்ளேன். நடித்து சான்றிதழ் பெற்றதுடன், பாராட்டும் பெற்றுள்ளேன்.

***கேள்வி:*** தம்பி, தங்கைகளுக்கு என்ன கூறப்போகிறீர்கள்...?

***பதில்:*** அதிக ஆர்வத்துடன் கற்று பாடசாலைப் புத்தகங்களை மட்டுமல்லாது பொது அறிவு, வினாவிடை போன்ற புத்தகங்களையும் தேடிக்கற்பதன் மூலம் அறிவை மேலும் விருத்தி செய்து, ஆசிரியர்களின், பெற்றோர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடந்து, புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறவேண்டும் என தம்பி தங்கைகளுக்கு கூறுகிறேன்.

***



கிறிஸ்தோபர் விவேக் வினுஷாந்
புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
மொத்தப்புள்ளிகள் 164
யாழ். மாவட்ட நிலை 8

***கேள்வி:*** ஆரம்பக்கல்வியை எங்கு கற்றீர்கள்...?

***பதில்:*** 1995 இடம்பெயர்வு காரணமாக மடுபெரிய பண்டிவிரிச்சான் வித்தியாலயத்தில் தரம் 1 முதல் தரம் 2 முதலாம் தவணைவரை கல்வி கற்றேன். சமாதானம் வந்தபின்னர் யாழ்ப்பாணம் வந்து புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் சேர்ந்து எனது கல்வியைத் தொடர்ந்தேன்.

***கேள்வி:*** உங்களுக்குப் பிடித்த பாடம் எது?

***பதில்:*** கணிதம். நுண்ணறிவுக் கேள்விகளை விரும்பிச் செய்வேன். பொறியியலாளராக வரவேண்டும் என்பதே எனது விருப்பம். அதனால் அப்பா கூறினார் நீ பொறியியலாளராக வரவேண்டும் என்றால் கணிதப் பாடத்தில் கூடுதலாகக் கவனம் செலுத்தவேண்டும். அதனால் கணிதப்பாடத்தை நான் விரும்பிச் செய்கிறேன்.

***கேள்வி:*** மேலதிக கல்வியைக் கற்பதற்கு உங்களை ஊக்குவித்தவர்கள் பற்றி..?

***பதில்:*** பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் நன்றாக என்னை ஊக்குவித்தனர் அதைவிடுத்து வீட்டில் ஆசிரியர்களான எனது பெற்றோர் தரம் 9 இல் கல்விகற்கும் எனது அக்காவும் எனக்கு மேலதிகமான கற்றலில் உதவிபுரிந்தனர்.

***கேள்வி:*** பாடசாலையில் எவ்வாறு நடந்து கொள்வீர்கள்?

***பதில்:*** பாடசாலையில் நான் மாணவ முதல்வராக இருக்கிறேன். அதைவிட வகுப்பில் ஆசிரியருக்குக் கட்டுப்பட்டு, வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்துகாட்டுவேன்.

***



விஜயரட்ணம் வாகீசன்
புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
மொத்தப்புள்ளி 165
யாழ்.மாவட்ட நிலை 10

***கேள்வி:*** உங்கள் குடும்பம் பற்றி...?

***பதில்:*** எனது அப்பா கந்தையா விஜயரட்ணம் கிராம சேவகராகக் கடமையாற்றுகிறார். அம்மா வீட்டில் உள்ளார். எனக்கு ஒரு அக்காவும், அண்ணாவும் உள்ளனர். அக்கா தரம் 11 இலும் அண்ணா தரம் 8 இலும் கல்வி கற்கிறார்கள்.

***கேள்வி:*** பரீட்சைக்கு எவ்வாறு ஆயத்தமானீர்கள்?

***பதில்:*** 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் எனது அக்கா 166 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் 10 ஆம் இடத்தில் வந்தார். அதேபோல் நானும் வரவேண்டும் என நினைத்தே படித்தேன். பரீட்சைக்கு ஆயத்தமானேன். அதேமாதிரி யாழ்.மாவட்டத்தில் 10 ஆம் இடத்திற்கு வந்துவிட்டேன்.

***கேள்வி:*** வீட்டில் உங்கள் கல்வி நிலை எப்படி...?

***பதில்:*** எந்த நேரமும் படிப்பதில்லை. இரவும் அதிகாலையிலும் படிப்பேன். அப்பா, அம்மா, அக்கா, அண்ணா எல்லோருமே எனது கல்வியில் கவனம் செலுத்தினார்கள்.

*செவ்வி:* **கங்கைவேந்தன்**

***கேள்வி:*** உங்களுடைய பொழுது போக்குகள் என்ன?

***பதில்:*** கதைப்புத்தகங்கள், பத்திரிகைகள் என்பவற்றை அதிகமாக விரும்பிப் படிப்பேன்.

***கேள்வி:*** எதிர்கால இலட்சியம் என்ன...?

***பதில்:*** ஒரு வைத்தியராக வரவேண்டும் என்பதே எனது ஆசை. அதை ஒரு குறிக்கோளாகக் கொண்டே கல்வியைத் தொடர்கிறேன்.

***கேள்வி:*** சகமாணவர்களுடன் எப்படி நடந்து கொள்வீர்கள்?

***பதில்:*** ஒற்றுமையாக விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்வேன்.

***கேள்வி:*** புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

***பதில்:*** படிப்பித்த ஆசிரியர்களுக்கு, வழி காட்டிய அதிபருக்கு என்னை ஊக்குவித்த பெற்றோருக்கு அனைவருக்குமே நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

(முற்றும்)



# மிரட்டும் இயற்கை

## அனர்த்தங்கள்தான் எத்தனை

2004 டிசெம்பரில் பூமி ஒரு தடவை குலுங்கி அடங்கிய பின்னர் ஏற்பட்ட கடலின் சீற்றத்தால் தெற்கு மற்றும் தென்கிழக்காசியக் கரையோரம் சிதிலமாகிச் சின்னாபின்னப்பட்டுப் போய்விட்டது. தொடர்ந்து வந்த ஆண்டு முழுவதுமே இயற்கை மனிதனைப் பந்தாடியது. ஆழிப்பேரலை, கத்ரீனா, றீட்டா, பாகிஸ்தான் பூகம்பம் என்று சீறிய இயற்கைக்கு பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் இரையாகின.

மனிதன் தன் சமநிலையைக் குழப்பிவிட்டத்தை நினைத்துச் சில கணங்கள் மட்டுமே சீறிச் சினக்கும் இயற்கையின் முன் மண்டியிட்ட பின் தான் மனிதனுக்கு ஞானம் வருகிறது. ஒரு கணம் மட்டும் தன் உடலை அசைக்கும் பூமியின் வெடிப்புகளுக்குள் அமெரிக்கா முதல் இலங்கை வரை சர்வமும் அடங்கிவிட திகைத்து நிற்கும் மனிதன், இப்போது இயற்கையை முன்னரை விடக் கூர்ந்து அவதானிக்கிறான். நாம் மட்டும் என்ன விதிவிலக்கானவர்களா...? இயற்கையையும் அதன் திருவிளையாடல்களையும் பற்றி இந்தக் கட்டுரைத் தொடரில் விளக்கமாக விவரிக்கிறார் விஞ்ஞானத்துறைப் பேராசான்

புவியின் இயல்பான முறைகளினது (Processes) சக்திகளைச் செறிவுறச் செய்து அதன் மூலம் மனித வர்க்கத்திற்கும் அதன் அமைப்புகளுக்கும பேரழிவுகளை ஏற்படுத்தும் பொறியமைப்புகள் அல்லது பொறிநுட்பங்கள் (Mechanisms) இயற்கை அனர்த்தங்கள் என அழைக்கப்படும்.

இயற்கை அனர்த்தங்கள் தற்போது அடிக்கடி ஏற்படுவதால் நாம் அவற்றின் உருவாக்கத்தைப் பற்றி அறிய ஆவல் படுகிறோம். அவை பற்றிக் கவலையடைகிறோம்.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் நாள் இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவின் கடலோரத்திலேற்பட்ட நீரினடியிலான நிலநடுக்கம் புவிமேற்பரப்பைக் கடகடக்க வைத்தது. றிச்சர் அளவீட்டில் 9.0 என அளவிடப்பட்ட இந்நில அதிர்வு 1964ஆம் ஆண்டின் பின் ஏற்பட்ட மிகப் பெரிய நிலநடுக்கமாகும். இது நடந்த அடுத்த சில நாள்களில் றிச்சர் அளவில் 5.0 அல்லது அதிலும் அதிக பருமனுடைய பல டசின நில அதிர்வுகள் ஏற்பட்டன (நில நடுக்கத்தின்பின் இவை ஏற்படுவது வழமை). ஆனால் கடற்படுக்கையில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் விளைவாக மனித வர்க்கத்திற்கும் அமைபபுகளுக்கும் ஏற்பட்ட பேரழிவுகள், நிலநடுக்கம் உருவாக்கிய 'சுனாமி' எனப்படும் அதிசக்தி வாய்ந்த கடற்பேரலைகளாலாகும். இவ்வனர்த்தத்தில் இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். கடலோர வாழ் மக்களின் பல ஆயிரமாயிரம் கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகள் நாசமாகின. இலங்கையின் அறிந்த வரலாற்றில் இத்தகைய பேரழிவு ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. இங்கு முப்பதாயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர், பெரும் பொருள் சேதம் ஏற்பட்டது.



**பேராசிரியர் இ.குமாரவடிவேல்**
*பீடாதிபதி, விஞ்ஞானத்துறை*
*(யாழ்.பல்கலைக்கழகம்)*

கடந்த ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி பாகிஸ்தானிலேற்பட்ட நிலநடுக்கம் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டோரின் உயிரைக் காவுகொண்டதுடன் எழுபத்தையாயிரத்திற்கு மேற்பட்டோரை அங்கவீனர்களாக்கியது.

2005 ஓகஸ்ட் 29ஆம் திகதி (சாப்-சிம்சன் சூறாவளி செறிவு பற்றிய ஐந்து ஆபத்து நிலை அளவீட்டின் அதிகூடிய தான ஆபத்து நிலை ஐந்தையுடைய) 'கத்ரீனா' எனப் பெயரிடப்பட்ட சூறாவளியொன்று அமெரிக்காவின் லூசியானா, மிஸிஸிப்பி, அலபாமா போன்ற கரையோர மாநிலங்களை வெள்ளக் காடாக்கியதுடன் பல ஆயிரம் கட்டடங்களைத் துகளாக்கியது. 200 ஆயிரம் டொலர்களுக்கு மேல் பொருட்சேதத்தை ஏற்படுத்தியது.

'வில்மா' எனப் பெயரிடப்பட்ட சண்டமாருதம் சுழன்றடித்து ஆர்ப்பாட்டம் செய்தது. கரிபியன் உல்லாச கடலோரங்களையெல்லாம் வெள்ளத்தாலும் பேய்க் காற்றினாலும் அலைந்த அது தனது பாதையில் அமைந்தவற்றையெல்லாம் துவம்சம் செய்துகொண்டு அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை ஒக்டோபர் 26ஆம் திகதி தாக்கியது. 'வில்மா' சாப்-சிம்சன் சூறாவளி செறிவு அளவீட்டில் ஆபத்து நிலை 3இல் அமைந்திருந்தது. அதன பின் ஏற்பட்ட 'அல்பா' எனப் பெயரிடப்பட்ட வெப்பமண்டலப் புயற்காற்று கரிபியன் கடலில் ஒக்டோபர் 22இல் உருவாகி ஹெட்டி, டொமினிக்கன் குடியரசு ஆகியவற்றைத் தாக்கியது. இது இவ்வாண்டில் உருவான இருபத்தியிரண்டாவது புயற்காற்று.

சூறாவளி பற்றிய பதிவுகள் தொடங்கி 150 ஆண்டுகளாகின்றன. இந்த 150 ஆண்டுகளில் மிகவும் உயிர்ப்புள்ள புயற்காற்றுக்கள் - சூறாவளிக் காற்றுக்கள் மிகுந்த ஆண்டென 2005ஆம் ஆண்டு பெயரெடுத்துவிட்டது.

அத்லாந்திக் சமுத்திரத்தில் ஆண்டுதோறும் உருவாகும் சூறாவளிகளுக்கு ஆங்கில எழுத்து வரிசையான ஏ (A) முதல் இஸட் (Z) வரையிலான எழுத்துக்களில் தொடங்கும் பெயர்களை வைப்பது வழமை. ஆங்கில எழுத்துக்கள் 26இல் Q, U, X, Y, Z ஆகிய எழுத்துக்களில் தொடங்கும் பெயர்கள் வைப்பதில்லை. மிகுதி இருபத்தியொரு எழுத்துக்களில் தொடங்கும் பெயர்களே வைக்கப்படும். இவ்வாண்டு உருவான இருபத்தோராவது சுறாவளிக்கு Wஇல் தொடங்கும் 'வில்மா' (Wilma) என்ற பெயர் வைக்கப்பட்டது.

ஆங்கில எழுத்து வரிசை முடிந்து விட்ட நிலையில் கிரேக்க எழுத்துக்களான 'அல்பா', 'பீற்றா', 'காமா' போன்ற எழுத்துக்களை சூறாவளியின் பெயர்களாக வைக்க ஆரம்பித்துள்ளனர். 'வில்மா'வின் பின் அத்லாந்திக் சமுத்திரத்தில் உருவான புயல் 'அல்பா' எனப் பெயர் பெற்றுள்ளது.

இவ்வாறாக உலகெங்கும் இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடி நடைபெறுவதால் மக்கள் இயற்கை அனர்த்தங்கள் ஏன்? எவ்வாறு? ஏற்படுகின்றன என்பன பற்றி அறிய ஆவலுள்ளவர்களாகவும், அவற்றினால் ஏற்படக்கூடிய அழிவுகள் பற்றிக் கவலையடைந்தவர்களாகவும், அவற்றை எவ்வளவு தூரம் எதிர்வுகூற முடியும்? அவை ஏற்படாமல் தடுக்க முடியுமா? அவற்றின் உத்வேகத்தைக் கணிப்பிடமுடியுமா? அவற்றினாலேற்படும் அழிவுகளைக் குறைக்க என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கலாம்? போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி அறிய ஆவல கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஆகவே இயற்கை அனர்த்தங்கள் பற்றிய அறிவியல் ரீதியான தகவல்கள் பொதுமக்களைச் சென்றடையக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்த வேண்டியது ஊடகங்களினதும் பொதுஸ்தாபனங்களினதும் அரச நிறுவனங்களினதும் கடமையாகும். பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் இயற்கை அனர்த்தங்கள் பற்றிய கல்வி அறிமுகப் படுத்தப்படவேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

இக்கட்டுரையில் இயற்கையின் செயல் முறை எவ்வாறு அமைந்துள்ளது என்பது பற்றியும், அவ்வாறான செயற்பாட்டின் போது எவ்வாறு மனித வர்க்கத்தைக் காவு கொண்டும் முடமாக்கியும் அவர்களின் ஆக்கங்களை அழித்தும் விடுகின்றதென்பது பற்றியும், அவை பற்றிய எதிர்வு கூறல், கணித்தல், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வோம்.

### பல்வகை இயற்கை அனர்த்தங்கள்


இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்குத் தேவையான சக்தி எவ்வாறு திரட்டப்படுகின்றது என்பதை அடிப்படையாகக் கொண்டு இயற்கை அனர்த்தங்களை நான்கு பெரும் பிரிவுகளாக பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

* **புவியின் உட்சக்தியால் உருவாக்கப்படும் அனர்த்தங்கள்**
நிலநடுக்கங்கள், எரிமலைக் குமுறல்கள் இவ்வகைக்கு உதாரணங்கள்.
* **புவியின் ஈர்ப்பினால் வலுப்பெறும் அனர்த்தங்கள்**
இவற்றை திணிவு நகர்வுகளால் (Mass Movements) ஏற்படும் அனர்த்தங்கள் எனவும் அழைக்கலாம். இவை திணிவு வீழ்ச்சிகள் (falls), திணிவு பாய்ச்சல்கள் (flows), திணிவு வழுக்கல்கள் (slides), திணிவு அமிழ்ந்து மறைதல் (subsides) எனப் பல வகைபடும். உருகு பனி நகர்வுகள், உருகு பனிப் பாய்ச்சல்கள், நிலச்சரிவுகள் போன்றவை இவற்றுக்கு உதாரணங்கள்.
* **சூரியனின் வெளிச்சக்தியினால் உருவாகும் அனர்த்தங்கள்:**
இவற்றைக் காலநிலை மாற்றங்களால் ஏற்படும் அனர்த்தங்கள் எனவும் அழைக்கலாம். நீர், காற்று, கடலலைகள், என்பன இவ்வனர்த்தங்கள் ஏற்படக் காரணமாகின்றன. இவையும் பல வகைப்படும்:
(1) காலநிலை மாற்றத்தால் நீடித்த கால அளவில் ஏற்படும் அனர்த்தங்கள் (இலட்சம், ஆயிரம், நூறு, பல ஆண்டுகளில் ஏற்படும் மாற்றங்கள்)
(2) கடுமையான காலநிலைத தோற்றப்பாடுகள்
(a) இடிமின்னற் புயல்கள் (Thunder Storms)
இடிமின்னல் (Lightning)
பலமான சுழற்காற்று (Tornadoes)
பெரும் புயல் (Hurricanes / Typhoons)
சூறாவளி (Cyclone)
வறட்சி (Droughts)
வெப்ப அலைகள் (Heat Waves)
(b) வெள்ளம் (Floods)
(c) ஆழிப்பேரலை (Tsunamis)
(d) காட்டுத் தீ (Forest Fires)
* **அண்டவெளிப் பொருட்களின் தாக்கங்கள் (Impact of Space objects)**
விண்ணிலிருந்து புவியை நோக்கி வந்து தாக்கும் அந்நியப் பொருட்களின் தாக்கத்தால் ஏற்படும் அனர்த்தங்கள்.


இவ்வகையான இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான காரணங்களையும் அவற்றின் அறிவியல் விளக்கத்தையும் விளங்கிக் கொள்வதற்கு புவியின் அமைப்பைப் புரிந்துகொள்வது அவசியம்.

### புவியின் அடுக்குக் கட்டமைப்பு

கோடிக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்றுவரும் அடர்த்தி ரீதியான வேறாக்கல் காரணமாக புவி பல அடுக்குகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. அடர்த்தி கூடிய பதார்த்தங்களிற் பெரும்பாலானவை அதன் மத்திய பகுதிக்குள்




படம் 01



# ...ளை வகை



இழுத்துக்கொள்ளப்பட அடர்த்தி குறைந்த பதார்த்தங்கள் மேற்பரப்புக்கு வெளியேறி விட்டன. இன்றைய புவி, உள்ளகம் (Inner Core), வெளியகம் (Outer Core), நடுவுறை (Mantle), புறணி (Crust) என்ற நான்கு பெரும் அடுக்குகளைக் கொண்டது. இவை முதலாம் இரண்டாம் படங்களில் காட்டப்பட்டுள்ளது.

அடர்த்தி கூடிய புவியின் மத்திய பகுதியே **உள்ளகம் (Inner Core)** எனப்படும். இப்பகுதி 13 $g.cm^{-3}$ அடர்த்தியும் (அதாவது ஒரு கன சதம மீற்றர் கனவளவு பதார்த்தத்தின் நிறை 13 கிறாம்) 1300 கிலோ மீற்றர் தடிப்பும் (ஆரையும்) உடைய திண்மம். புவி மேற்பரப்பிலிருந்து ஏறத்தாழ 6370 கிலோ மீற்றர் ஆழத்தில் உள்ள இவ்வுள்ளகத்தின் வெப்ப நிலை 4300° செல்சியஸ் அழுத்தமோ ஏறத்தாழ 40 லட்சம் வளிமண்டல அமுக்கம்.

உள்ளகத்தைச் சுற்றி உருகிய நிலைத் திண்மப் பாறையாகக் காணப்படுவது **வெளியகம்** (Outer Core). இதன் தடிப்பு 2080 கிலோ மீற்றர். வெளியகத்தைச் சூழ நடுவுறை (Mantle) எனும் 2900 கிலோ மீற்றர் தடிப்புடைய பகுதி காணப்படுகிறது. இது மக்னீசியம், இரும்பு போன்ற உலோகங்கள் செறிந்த சிலிக்கேட் கனிமங்களாலான செஞ்சூடான கோளவோடு. புவி அகத்திலிருந்து வரும் வெப்பக் கதிர்வீச்சு நடுவுறையைச் சூடாக்கி அரையுருகல் நிலையில் வைத்துள்ளது. நடுவுறையின் சுமார் 250 கிலோ மீற்றர் தடிப்புள்ள மேற்பகுதி இளகிய பாகுக்கோளம் (Asthenosphere) எனப்படும். இக்கோளத்தில் பாறைகள் ஓரளவு உருகி திரவப்படையானது பதார்த்தத் துகள்களிடையே பரந்திருக்கும். செஞ்சூடான நடுவுறையின் உட்பகுதியும், அரையுருகல நிலையிலுள்ள இளகிய பாகுக்கோளமும் (Asthenosphere) நடுவுறையை இளகுகின்ற பிளாஸ்ரிக் தன்மை உடையதாக்குகின்றது.

நடுவுறையின் மேலே புவியின் புறணி (Crust) எனப்படும் புறமேற் பகுதி அமைந்துள்ளது. புறணி பாறை மண்டலம (Lith-osphere) எனவும் அழைக்கப்படும். இது கண்டங்கள், சமுத்திரங்கள், கடற்படுக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

புறணியின் தடிப்பு ஏறத்தாழ 12 கிலோ மீற்றர் முதல் (ஆழ் சமுத்திரம்) 60 கிலோ மீற்றர் வரை (மலைகள்) வேறுபடும். புறணியானது குறைந்த வெப்பநிலையில் அமைந்திருப்பதால் விறைப்புடையதாயமைந்து இளகிய பாகுக்கோளத்திலிருந்து வேறுபடுகிறது.

## பாறை மண்டலத் தட்டுகள்


பாறை மண்டலம் அல்லது புறணியானது உடைவற்ற கருங்கற் பாறைக் கோளவோடாக அமைந்திருக்கவில்லை அமைந்திருக்கவும் முடியாது. மாறாக, அது பன்னிரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பல துண்டுகளின் -(தட்டுகளின்) சேர்க்கையாக அமைந்துள்ளது. இத்தட்டுகள் பூமியின் புறணியை மட்டுமின்றி நடுவுறையின் ஓரளவு மேற்பகுதியையும் உள்ளடக்கியிருக்கும். அதாவது பாகுக்கோளத்தின் (Asthenosphere) ஒரு பகுதியையும் உள்ளடக்கியிருக்கும். இத்தட்டுக்கள் 50-100 கிலோமீற்றர் தடிப்பானவை. இத்தட்டுக்கள கண்டங்களையும் சமுத்திரங்களையும் சமுத்திரப் படுக்கைகளையும் சுமந்து கொண்டு பாகுக்கோளத்தில் மிதக்கின்றன.

பாய்பொருட்கள் (திரவங்கள், வாயுக்கள்) சூடாக்கப்படும்போது மேற்காவுகை (Convection) என்ற தோற்றப்பாடு நிகழும். பாத்திரமொன்றில் நீரைச் சூடாக்கும்போது முதலில் சூடாகும் அடிப்பகுதியிலுள்ள நீர் மூலக்கூறுகள் மேற்செல்ல மேலேயுள்ள சூடு குறைந்த நீர் கீழிறங்கும். இவ்வாறு சூடான பாய்பொருள் மேலெழுந்து சூடு குறைந்த பாய்பொருள் கீழிறங்குவதால் ஏற்படும் ஓட்டமே மேற்காவுகை ஓட்டம் எனப்படும். மிகையான சூட்டிலுள்ள சூப்பில் பாரங்குறைந்த சிறு இலை போன்ற துணடங்கள் மேலும் கீழும் நகர்வதை அவதானிக்கலாம். இது ஒரு மேற்காவுகைத் தோற்றப்பாடு.

அரையுருகல் நிலையிலுள்ள புவியின் பாகுக்கோளம் உள்ளகத்தால் சூடாக்கப்பட்டுக்கொண்டேயிருப்பதால் அங்கு மேற்காவுகை ஓட்டம் இடம்பெறுகிறது. இம்மேற்காவுகையோட்டத்தின் விளைவாக பாறை மண்டலத் தட்டுகள் பாகுக்கோளத்தில் மிதப்பதோடு மட்டுமன்றி நகரவும் செய்கின்றன. அதாவது பாறை மண்டலத் தட்டுக்கள் கண்டங்களையும் சமுத்திரங்களையும் சமுத்திரப் படுக்கைகளையும் சுமந்து கொண்டு பாகுக்கோளத்தில் தெப்பம் போல் மெதுவாகவும் தொடர்ச்சியாகவும் நகர்ந்த வண்ணம் உள்ளன. இவை பாகுக்கோளத்தில் ஒரு வருடத்தில் 1 - 12 சென்ரிமீற்றர் என்ற வீச்சத்தில அமைந்த வேகத்தில் நகர்கின்றன. இத்தட்டுகள் சில இடங்களில் ஒன்றையொன்று நோக்கியும், வேறு சில இடங்களில் விலகியும் நகர்கின்றன. மேலும் ஏனைய மிதக்கும் பொருட்கள் போலவே இத்தட்டுக்களின் பாரம் கூடிய பகுதிகள் அமிழ்ந்தும், பாரம் குறைந்த பகுதிகள் மேலெழுந்தும செல்லும்.

அவ்வாறான பன்னிரண்டு தட்டுகளும

இரு தட்டுகள் தொடுகையுறும்போது பாரம் குறைந்த தட்டிற்கு மேலாக பாரம் கூடிய தட்டு வழுக்கிச் செல்லமுடியும். இவை நான்காம் படத்தில் காட்டப்பட்டுள்ளன.



படம் 06

சில இடங்களில் இத்தட்டுக்கள் ஒன்றையொன்று மோதும்போது ஒரு தட்டு மற்றையதை மேல்நோக்கித் தள்ளும். இவ்வாறான மோதுகையின் விசையால் பாறைகள் மேற்தள்ளப்பட்டு மலைகள் உருப்பெறுகின்றன. (ஐந்தாம் படத்தில் இது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது).

உதாரணமாக இந்திய உபகண்டத் தட்டும் ஆசியத் தட்டும் ஒன்றையொன்று மோதியதால் இமாலய மலைகள் தோன்றின. இத்தட்டுக்கள் இன்னும் ஒன்றையொன்று நோக்கி நகர்வதால் இமயமலை இன்னும் வளர்ந்த வண்ணம் உள்ளது.

## புவி நடுக்கங்கள் (Earthquakes):

சில புவிச்சரித முறைகளால் ஏற்படும



படம் 03

பின்வருமாறு அழைக்கப்படுகின்றன:


வட அமெரிக்கன் தட்டு, தென் அமெரிக்கன் தட்டு, பசிபிக் தட்டு, அன்ராக்ரிக் தட்டு, ஆபிரிக்கன் தட்டு, யூரேசியன் தட்டு, அரேபியன் தட்டு கிழக்காசியத் தட்டு,



படம் 04


நஸ்கா (Nazca) தட்டு, கரிபியன் தட்டு, கோஸியா (Scotia) தட்டு, இந்திய அவுஸ்திரேலியத் தட்டு

இரு தட்டுக்கள் ஒன்றையொன்று பொருந்தும் வளைவான பகுதி தட்டு எல்லை (Plate Boundary) எனப்படும். புவியின் பன்னிரண்டு பாறைமண்டலத் தட்டுகளும் படம் 03 இல் காட்டப்பட்டுள்ளது.



படம் 05

மிகை அழுத்தம் காரணமாக, புவியின் மிகவும் ஆழமான உட்பகுதியில் அமைந்த பாறைகள் அமுக்கப்படுவதால் பாரிய சக்தி வெளிப்பாட்டுடன் அவற்றில் வெடிப்புக்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு வெளிவிடப்படும் சக்தியானது பல அணுகுண்டுகள் வெடிக்கும்போது வெளிவிடப்படும் சக்தியின் அளவிற்கு சமமானது. இச்சக்தியால் பு... மிகவும் உக்கிரமாகவும் சில சமயம மூர்க்கமாகவும் அதிரும் தோற்றப்பாடே



படம் 07

புவிநடுக்கமாகும். இதுவன்றி புவித் தட்டுக்களின் மேற்பொருந்துகை அல்லது உராய்வு, எரிமலை வெடிப்பு, விண்கல் மோதுகை, அணுக்குண்டு வெடிப்பு போன்றவற்றின் போதும் பெருமளவு சக்தி வெளிவிடப்பட்டு நிலநடுக்கம் ஏற்படலாம்.

பாறை மண்டலத் தட்டுக்கள் (Plate tectonics) என்ற கொள்கையின் அடிப்படையில் புவியதிர்வை பின்கண்டவாறு விளக்கலாம்: பெரும்பாலான புவிநடுக்கங்கள் புவித்தட்டெல்லைகளிலேயே ஏற்படுகின்றன. புவித்தட்டுகளின் நகர்வுகள் காரணமாக அவை விகாரமுற்று புவித்தட்டெல்லைகளுக்குச் சமீபமாக ஒன்றிலொன்று வழுக்கும். இது புவியின் புறணியில் வெடிப்பை ஏற்படுத்துகிறது. இவ்வெடிப்புகள் **குறை (Fault)** எனவழைக்கப்படும். ஆகவே குறை என்பது இரு தட்டுகள் ஒன்றிலொன்று வழுக்குவதால் புவியின் புறணியில் ஏற்படும் வெடிப்பாகும். ஒரு தட்டு மற்றைய தட்டுக்குச் சார்பாக கிடையாக அல்லது நிலைக்குத்தாக நகர்வதாலும் புறணியில் வெடிப்பு ஏற்படலாம்.

பிரசித்தி பெற்ற செயின்ற் அன்றூஸ் குறை ஆறாவது படத்தில் காட்டப்பட்டுள்ளது.

தட்டுகள் ஒன்றையொன்று இவ்வாறு சறுக்கிச் செல்லும் போது விகார சக்தி திடீரென வெளிவிடப்படுகிறது. நகர்வு சிறிதாயமைந்தாலும் வெளிவிடப்படும் விகார சக்தி மிகப்பாரியது. வருடமொன்றில் உலகில் ஏற்படும் புவியதிர்வுகளின் மொத்த சக்தி இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணுகுண்டுகளின் சக்தியின் ஒரு இலட்சம் (100,000) மடங்காகும். இவ்வாறு வெளிவிடப்படும் சக்தி அதிர்ச்சி அலைகளாக மாற்றமுற்று புவியதிர்வுகளில் முடிவடைகின்றது. புவிக்குள் வெடிப்பு எங்கு முதலில் ஏற்பட்டு பாறைகள் உடைந்து புவியதிர்ச்சியலைகள் தோற்றுவிக்கப்படுகின்றதோ அப்புள்ளி புவிநடுக்கத்தின் **மையப்புள்ளி** (Focus) எனப்படும். குறைவெடிப்பு (fault rupture) புவியதிர்வின் மையப்புள்ளியிலேயே தொடங்குகிறது.


மையப்புள்ளிக்கு நிலைக்குத்தாகயாகக் காணப்படும்.

## புவி நடுக்கத்தை அளவிடுதல்

புவிநடுக்க அலைகளை உணரவும் அவற்றைத் தொடர்ச்சியாகப் பதிவு செயயவும் அளவிடவும் புவி நடுக்க பதிகருவி (Seismograph) எனும கருவி உபயோகப் படுத்தப்படுகிறது. இவ்வாறு பதிவுசெய்யபபடும் புவி நடுக்கப் பதிவு (Seismogram) ஆனது புவிநடுக்கத்தின் வலிமை, மையப புள்ளி, வெளிவிடப்படும் சக்தியினளவு என்பவற்றை அறிய உதவுகிறது. எளிய பதி கருவியொன்று ஒனபதாவது படத்திற் காட்டப்பட்டுள்ளது.

## றிச்சர் அளவு

றிச்சர் அளவீடானது 1935ஆம் ஆண்டு கலிபோர்னியா தொழில் நுட்ப நிறுவகத்தைச் சேர்ந்த டாக்டர் சார்ள்ஸ் எவ்.றிச்சர் (Dr. Charles F. Ritcher of California Institute of Technology) என்பவரால் உருவாக்கப்பட்டது.



படம் 08

மேலே புவிமேற்பரப்பிலுள்ள புள்ளி **மேன்மையம் (Epicentre)** எனப்படும். மேன்மையத்திலிருந்து மையப்புள்ளியின் ஆழம் **குவிய ஆழம்** (Focal Depth) எனப்படும். இத்தொடர்புகள் ஏழாவது படத்தில் காட்டப்பட்டுள்ளன.

60 கிலோமீற்றருக்குக் குறைவான குவிய ஆழம் உடைய புவியதிர்வுகள் ஆழம் குறைந்தவை என வகைப்படுத்தப்படும். ஏனையவை நடுத்தர அல்லது ஆழமானவை என வகைப்படுத்தப்படும். புவிப் புறணியின் மெலிவான வலயங்களான தட்டெல்லையை ஒட்டிய குறைகளிலேயே புவியதிர்வுகள் ஏற்படுகின்றன. குறை வலயமொன்றில் (Fault Zone) சமீபத்தில் புவியதிர்வு ஒன்று ஏற்பட்டதால் அவ்விடத்தில் போதியளவு விகார சக்தி வெளிவிடப்பட்டுவிட்டது. அதற்காக இன்னுமோர் புவியதிர்வு அச்சுற்றாடலில் ஏற்படாது என்று கூற முடியாது.

## புவிநடுக்க அலைகள் (Seismic Waves):

புவிநடுக்கத்தின் காரணமாக இரு வகை அதிர்வுகள் - புவிநடுக்க அலைகள் - உருவாகின்றன:


* மேற்பரப்பலைகள் (Surface Waves) - இவை புவிமேற்பரப்பில் நகரும்.
* உடல் அலைகள்(Body Waves) - இவை புவியின் ஆழமான உடற்பகுதி யூடாக நகரும்

இவை எட்டாவது படத்தில் காட்டப்பட்டுள்ளன.

இப்புவிநடுக்க அலைகள் மணிக்கு 15,000 கிலோமீற்றருக்கு மேற்பட்ட வேகத்தில் செலுத்தப்படுவதால் அவை கட்டடங்களுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தும் அளவிற்குச் சக்தி வாய்ந்தவை



றிச்சர் அளவீடானது உயர் அல்லது இழிவுப் பெறுமானங் களைக் கொண்டிருப்பதில்லை. இற்றை வரை கணிப்பிடப்பட்ட உயர் றிச்சர் பெறுமானம் 9ஐ விட உயர்வானது. இது புவிநடுக்கத்தின் வலிமையை


படம் 09

கணித ரீதியாக ஒப்பிடுவதற்கு உதவும் அளவீடாகும்.

றிச்சர் அளவீட்டில், புவியதிர்வின பருமன் M ஆனது பின்வரும் சமன்பாட்டின் அடிப்படையில் எடுத்துரைக்கப்படுகிறது:

$$M = \log(A/T)$$

A - நில இயக்கத்தின் உச்ச வீச்சம் (மைக்கிரன்களில்)

T - ஆதிக்கம் செலுத்தும் அதிர் வலையின் அலைவுகாலம் (செக்கன்களில்) இதைப் போன்று புவிநடுக்கத்தின் அளவைநுட்பமாக அளவிடுவதற்கு மேலும் பல சமன்பாடுகள் உள்ளன.

(மேலும் வளரும்)

# விழிப்பின் பதிவுகள்



## ஜனாதிபதி தேர்தலில்

# தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனரா ?

தமிழ் மக்களிடையே இம்முறை தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கி வருவதை காணக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக வடகிழக்கில் இவ்விதமான கருத்து வலுப்பெற்று வருவதை காணக்கூடியதாகவுள்ளது. ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதைத் தவிர வேறு எதுவும் நிகழ்ந்துவிடவில்லை என அவர்கள் கருதுகின்றனர். சமாதானத்தை முன்வைத்து ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தையை இழுத்து சென்றதுடன் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அமெரிக்காவில் இடம்பெற அனுமதி அளித்ததன் மூலம் புலிகள் பேச்சுக்களில் இருந்து பின்வாங்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர். அத்தோடு போரினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கை கட்டியெழுப்ப ஏற்படுத்தப்பட்ட சிரான் அமைப்பை உண்மையில் இயங்க வைக்க எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்பதே அவர்களது கருத்தாக இருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க ஜே.ஆர். ஜயவர்தனவைப்போன்றே பிரச்சினைகளை இழுத்தடிப்பதன் மூலம், காலந்தாழ்த்துவதன் மூலம் அவற்றுக்கு தீர்வு தராமல் திசை திருப்புவதில் கில்லாடி என தமிழ் ஊடகங்கள் விமர்சிக்கின்றன.

உதாரணமாக, நடைபெற்ற பேச்சுகளை எவ்விதத்திலும் முடிவுக்கு வராமல் பார்த்துக் கொண்டதுடன் புலிகளையும் சர்வதேச வலைபின்னலில் சிக்கவைத்தமை குறித்து அக்கட்சி பெருமை பேசுகின்றமையையும் காணக்கூடியதாகவுள்ளது.

பேச்சுக்களை இன்று மட்டும் காலந்தாழ்த்தி பிரச்சினைகளுக்கு தீர்வைத்தராமல் வேறு பிரச்சினைகளை உருவாக்கி இவை தொடர்பாகவும் பேச்சு... மீண்டும் பேச்சு.. என தொடர்கின்ற செயலால் பிரச்சனைக்கு இறுதி வரையில் தீர்வு கிடைக்காது. போரும் ஏற்படாது. இதற்கிடையே புலிகள் இயக்கமும் தனது கட்டமைப்பை இழந்து விடும். அதன் பின்னர் ஏதாவது ஒரு தீர்வை திணிக்கலாம் என்பதே ரணிலின் எண்ணம் என சிலர் விமர்சிக்கின்றனர்.

அமெரிக்கா, இந்தியா , பிரிட்டன் போன்ற புலிகள் மீது கடும்போக்கு கொண்ட நாடுகளை இனப்பிரச்சினையில் தலையிட வைப்பதன் மூலம் தமிழருக்கு நியாயமான தீர்வினை வழங்காமல் விடலாம் என்பதே ரணிலின் எண்ணம் என அவர்கள் தெரிவிக்கின்றனர். அதேபோல புலிகள் இவற்றை ஏற்காது விட்டால் அமெரிக்கா, இந்தியா போன்ற புலிவிரோத நாடுகளின் இராணுவ பலத்தினை உபயோகித்து அந்த அமைப்பினை பலவீனப்படுத்தியே அழித்து விடலாம் என்பதே அக்கட்சியின் எண்ணமாக இருக்கிறது என அவர்கள் மேலும் கூறுகின்றனர். இவ்வாறான விமர்சனங்களை உறுதிப்படுத்துவது போல கடந்த 30 திகதி விஹாரமஹாதேவி பூங்காவில் இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி கூட்டத்தில் உரையாற்றிய நவின் திசாநாயக்க விடுதலைப்புலிகளின் கருணா பிளவினை ஏற்படுத்தியவர் ரணில் எனவும் மீண்டும் ஒரு போருக்கு புலிகள் சென்றால் இந்திய, அமெரிக்க இராணுவம் உதவும் எனவும் கருத்துத்தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கருத்துக்களால் வடகிழக்கு தமிழ்மக்களில் பலர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பதன் மூலம் அது பிரச்சினைகளுக்கு தீர்வு தரமுடியும் என்ற நம்பிக்கையை இழந்துள்ளனர்.

அதேவேளை மஹிந்த ராஜபக்ஷவை எடுத்துக் கொண்டால் அவர் நேரடியாகவே தமிழ் மக்களது உரிமைகளை நிராகரித்துள்ளார். குறிப்பாக ஜே.வி.பி, ஹெல உறுமயவுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்காது என்பதை தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர்.

**- என். ஜீவேந்திரன்**

சிங்கள மக்களது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துகின்ற கருத்தினையே அவரது 'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற தேர்தல் வாக்குறுதி வெளிப்படுத்தி நிற்கிறது.

விசேடமாக வடகிழக்கு பிரச்சினையில் மீண்டும் ஒரு போருக்கு தாம் தயாராக இருப்பது போன்ற தொனியில் மஹிந்த, ஜேவிபி, ஹெலஉறுமய போன்ற பேச்சாளர்களும் மேடையில் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். அதேபோல தற்போதுள்ள போர் நிறுத்த உடன்படிக்கையை மாற்றி எழுத வேண்டும் என தொடர்ந்தும் குறிப்பிட்டு வருகின்றன. இதனை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ள நிலையில் மஹிந்த ஆட்சிக்கு வந்தால் நிலைமை மோசமாகும் என்றே பெரும்பாலான தமிழ் மக்கள் கருதுகின்றனர். இவ்வாறு பார்க்கும் போது தமிழ் மக்கள் விசேடமாக வடகிழக்கு தமிழ் மக்கள் இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிலும் நம்பிக்கை இழந்துள்ள நிலையை காணக்கூடியதாகவுள்ளது. இதன் காரணமாக இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வடகிழக்கில் வாக்களிப்பு மந்தமாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினையின் தாக்கங்கள் பற்றி விளக்கும் அல்லது எடுத்துரைக்கும் கலைப்படைப்புகள் ஓரளவு காணப்படுகின்ற போதும், அவற்றுள் இளம் கலைஞர்களின் படைப்புகள் ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றன. இனப்பிரச்சினை பற்றியும் இவ்வாறான வரலாற்றைக் கொண்ட இனங்களுக்கிடையே ஐக்கியத்தை உருவாக்குதல் குறித்தும் உணர்த்துகின்ற கலைப்படைப்புகளுள் குறிப்பாக இளம் கலைஞர்களின் ஆக்கங்கள் பெரும்பாதிப்புகளை உருவாக்கக்கூடியவை

## அங்கவீனம் சிறகமேப்பாட்டிற்கு தடையல்ல





என்பதில் சந்தேகமில்லை. இளம் கலைஞர்களால் உருவாக்கப்படும் ஆக்கங்கள் பெரும்பாலாக இளைஞர் யுவதிகளால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் இளைஞர் யுவதிகள் தடைகளையும் தடங்கல்களையும் தாண்டி நாட்டின் இனப்பிரச்சினை பற்றி, அதனது பாதிப்புகள், பிரதிபலிப்புகள் பற்றி கலையினூடு பேசுவது அரிதான்தொன்றாகும். ஷானிகா கல்ஹாரி லேட்ரவிட் எனும் இளம் சிங்களக் கவிஞர் இதற்கு சிறந்ததோர் உதாரணமாகும். பல்லாயிரக்கணக்கான இரத்தினச் சுரங்கங்களை தன்வசம் கொண்டுள்ள இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியல்ல கிராமத்தின் உருப்பெற்றுள்ள ஒரு அரிதான பெண் கவிஞரே இவர். பிறக்கும் போதே கடினமான சவால்களை தன்னுடன் அழைத்து வந்த ஷானிகாவிற்கு தனது வாழ்க்கையின் ஆரம்பகாலம் ஏனைய சிறார்களைப் போன்று இனிதாக அமையவில்லை. பிறப்பிலிருந்து பாரிச வாதத்தையனுபவிக்கும் ஷானிகாவினால் ஏனைய சிறார்களைப் போன்று துள்ளி விளையாடவோ, ஓடி ஆடவோ முடியவில்லை. ஆரம்பக் கல்வியை வீட்டிலேயே பயின்ற ஷானிகாவின் எழுத்துத்திறமை அவரது 8வது வயதிலேயே வெளிச்சத்திற்கு வந்தது. அன்று தொடங்கி அவரது எழுத்துத்திறமை பெற்றோரது உதவியுடனும் அவரது விடாமுயற்சியின் காரணமாகவும் நாளடைவில் கவித்திறமையாக மாறி பின்பு படைப்புகளையும் பிரசவித்தன. பேனையை பிடித்து கவிதைகளை எழுதும் வரத்தை கடவுள் கொடுக்காது விட்டபோதும் அதனை சொற்களாக தான் வடிக்க தந்தை அவற்றை குறித்துக் கொள்வதை இவர்கள் பழக்கப்படுத்திக் கொண்டனர். இவரின் கவிதைகள் இலங்கையின் இனப்பிரச்சினை, சமூக விடயங்களை வலியுறுத்துகின்றனவாகவே அமைந்திருந்தன. காலப்போக்கில் வெளி உதவியுடன் இவர் தனது முதல் கவிதைக் கோவையாக 'கலியுகயே வசந்தய' அல்லது கலியுகத்தின் வசந்தம் 2000ஆம் ஆண்டு


**- ருவஷி**

வெளிவந்தது. இவ்வெளியீட்டுடன் கலையுலகினுள் பிரவேசித்த ஷானிகா தனது இரண்டாவது கவிதைக் கோவையை 'சினா மல் பிபென்னே கவதாத' என்ற 'சிரிக்கும் மலர்கள் மலர்வது எப்போது' எனும் பெயரில் இவ்வருட செப்டெம்பர் மாதம் 13ம் திகதி பொரளை நகரோதய நிலையத்தில் வெளியிட்டார். போரினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்படாத ஷானிகாவின் படைப்புகள் இலங்கை மக்களை குறிப்பாக இளைஞர்களை மட்டுமன்றி அதிகார வர்க்கத்தையும் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு தடங்கல்களையும், மிகுந்த கஷ்டங்களையும் தாண்டி ஈடுபாட்டுடன் நாட்டின் நலனைப் பற்றி சிந்திப்பவர்கள் இனங்காணப்பட வேண்டும் என்பதோடு மக்கள் அனைவரும் இப்படைப்புக்களின் உள்நோக்கங்களை புரிந்து கொண்டு அதன்படி செயற்பட வேண்டும் என்பதும் காலத்தின் தேவைகளாகும்.

## ஊடக மாற்றீடு காலத்தின் தேவை







கொள்கை அடிப்படையற்ற, பக்கச்சார்பான, வன்முறைகளையும், அநியாயங்களையும் நியாயப்படுத்துகின்ற ஊடகத்துறை ஒரு பக்கமும், மாற்றுக் கருத்துக்களை மதிக்கத் தெரியாத அரசியல் கட்சிகளும், ஆயுதக்குழுக்களின் வன்முறைகள் மறுபக்கமும் என இலங்கையின் ஊடகத்துறை ஒரு முறைகெட்ட பாதையால் வழி நடத்தப்படுகின்றது. நாட்டில் நடக்கின்ற அநியாயங்களை தடுத்து நிறுத்தாது, கண்டும் காணாதது போல் இருந்து வரும் சமூகத்தின் பெரும் பகுதியினரின் மௌனமும், சுயநலமும் இந்த ஊடக வழிகேட்டுக்கு ஒத்துழைத்து வருகின்றது. ஊடகமென்றாலே அது பக்கச்சார்பானதுதான் என இலகுவாக மறுதலித்து பேசும் பாரம்பரியம் எமது நாட்டில் நீண்டகாலமாக நிலைத்து வருகின்றது. இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் பிரச்சார போட்டிகளில் நாட்டின் அரச ஊடகம் உட்பட தனியார் ஊடகங்களும் நடந்து கொள்ளும் முறைகள் அருவருப்பானவையாக தெரிகின்றன. எனினும், இத்தகைய அவல நிலையிலிருந்து ஊடகத்துறையை பாதுகாக்கும் தொடர்ந்தேர்ச்சியான முயற்சிகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. அந்தவகையில் அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெற்ற ஊடக நிறுவனங்களின் சந்திப்பு குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாகும். மாற்றுக் கொள்கைக்கான நிலையம் ஏற்பாடு செய்த இந்த ஊடக நிறுவனங்களின் சந்திப்பில், எதிர்காலத்தில் இலங்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஊடகதர்மங்கள் குறித்தும், ஊடகவியலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தியும் ஒரு சாசனம் வெளியிடப்பட்டது. இந்த சாசனம் ஊழியர் ஊடக தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன கைச்சாத்திட்டு வெளி வந்துள்ளது.

இந்த சாசனத்தில் ஊடகமானது அதன் செய்தி வெளியிடும் முறை எதுவாக இருந்தபோதிலும் அது சுயாதீனமாகவும், சகிப்புத் தன்மை மிக்கதாகவும், கருத்துக்களின் பல்வகைத்தன்மையை பிரதிபலிக்க கூடியதாகவும் இருக்க வேண்டும் என வலியுத்துகின்றது. அதனூடாக ஒவ்வொரு சமூகத்தவரினதும் வேறுபட்ட இன, மத, பிரதேச பின்னணிகளை பிரதிபலித்து அந்த சமூகங்களுக்கு இடையில் பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும் என இந்த சாசனம் தெரிவிக்கிறது.

அதேபோன்று உண்மைகளை அல்லது முறையான தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமை எவ்வித சிக்கல்கள் இல்லாமல் பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் இலங்கையில் ஊடகத்துறை திட்டமிட்ட ஊடகக்கொள்கை ஒன்றியத்தினூடாக கட்டுப்படுத்தப்பட்டு பேணப்படல் வேண்டும் என்ற கருத்தும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், ஊடகச் சுதந்திரம் தொடர்பிலான விடயங்கள் இந்த சாசனத்தினூடாக வலியுறுத்தப்பட்டிருந்தமை முக்கியமாகும். அரசியல், கலாசார, சமய, இனத்துவ குறிக்கோள்களுக்காக ஊடகத்துறை பயன்படுத்தப்படுவதையும், தீவிரவாதத்தையும் வன்முறைகளையும் வளர்க்கும் பிரச்சாரக் கருவியாக பாவிக்கப்படுவதையும் முற்றாக தடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது. மேலும், பணியாற்றுகின்ற ஊடகவியலாளர்களின் தகவல்களை சேகரித்தல், தயாரிப்படுத்தல், செய்திகள் தெரிவு செய்தல், வெளியிடல் என்பவற்றில் பிரசுரிகளின் தலையீடு சட்டரீதியாக தடை செய்ய வேண்டும். அரசாங்கத்தின் அல்லது தனியார் ஊடகவியாளர்களின் தனிப்பட்ட நலன்களின் அடிப்படையில், நியாயமற்ற தணிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் தடை செய்ய வேண்டும். தனியார் ஊடகங்கள் குறித்த விமர்சனங்கள் இந்த சாசனத்தில், இடம்பெற்றிருந்தாலும் குறிப்பாக அரச ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அரச ஊடகங்களானது பொதுமக்கள் சேவை விழுமியங்களை மதித்து அரசியல் தலையீடுகள் அற்ற முறையில் உருவாக்கப்பட வேண்டும், அதில் சர்வதேச நியமங்களுக்கு ஒத்திசைவான நடைமுறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும், நெறிமிக்க வெளிப்படையான கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடுகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

**- இக்பால் அஜீட்**

மேலும், இலங்கையில் சமூகக் கலந்துரையாடல்களை ஊக்குவிக்கும் வகையிலும், ஊடகத்துறையினர் மீதான வன்முறைகளை கட்டுப்படுத்தி அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வண்ணம் சட்ட ரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தும் இச்சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பல்கோணங்களில் ஊடகச்சீர்திருத்தம் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டு புதியதொரு நெறிபிரளாக ஊடக கலாசாரமொன்று இலங்கையில் ஒருவாக்கத்துக்கான முன்மொழிவாக இந்த சாசனம் கருதப்படலாம். எனினும், கோட்பாட்டளவிலான சிந்தனைகளும் புரட்சிகர எண்ணங்களும் இலங்கையில் நடைமுறைக்கு வருவது என்பது சிரமமான காரியமாக இருக்கும். ஊடகத்துறையில் மாத்திரமல்லாமல் பொதுவாக இலங்கையின் எத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதென்றாலும் முதலில் தவறுகள் இடம்பெறுவதற்கும் அதற்கேதுவான சமூகத்தின் மனோநிலைக்கும் காரணமாக அமைந்துள்ள தவறான கொள்கைகள், தத்துவங்கள் என்பன மாற்றப்பட வேண்டும். இவ்வாறு சமூகத்தினை நிர்ணயிக்கும் கொள்கையில் ஏற்படுத்தப்படும் மாற்றத்தினால் மாத்திரமே காத்திரமான ஒரு மாற்றத்தினை நாம் எதிர்பார்க்க முடியும். இந்த மாற்றம் சுதந்திர ஊடகத்துறையை மாத்திரமல்லாது இனப்பிரச்சினைக்கான தீர்வினையும் சாத்தியப்படுத்தும்

### இவ்வார விழிப்பில்...

- வாக்குறுதிகளுடன் ஜனாதிபதி வேட்பாளர்கள்
- ஐரோப்பிய ஒன்றியமும் தேர்தல் கண்காணிப்பும்
- ஷானிகாவின் கவிதைத் தொகுப்பு
- ஊடக சீர்திருத்தம்
- சித்திரங்களினூடான உளவளப்படுத்தல்


விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி ஐ அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல. 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net


பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

# டேடன்ஸ் பரிசோதனை சேவை

## இப்போது யாழ்நகரில் நேரடியாக...

- ★ நவீன டிஜிற்றல் தொழில்நுட்ப ஆய்வுகூட சேவை
- ★ உடனடி பரிசோதனை முடிவுகள் யாழ்.நகரில்
- ★ சர்வதேச தர நிர்ணயத்திற்குட்பட்ட ஒரே ஆய்வுகூடம்
- ★ நோயியலாளர் (PATHOLOGIST) ஒருவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்
- ★ வேறெந்த ஆய்வுகூடத்தையும் விடக் குறைந்த கட்டணம்
- ★ சகல இரத்த, சிறுநீர், உடற்கூற்றியல் பரிசோதனைகள்
- ★ புதிய வடிவமைக்கப்பட்ட ஆய்வுகூடம் யாழ்.நகர மத்தியில் எக்கோ, ஸ்கான், ஈசீஜி (ECHO, SCAN, ECG) வசதிகள் உண்டு.
- ★ டேடன்ஸ் பரிசோதனை சேவை மதகெயர் கட்டடம் (MOTHER CARE) புதிய OPD இற்கு எதிரே உள்ள ஒழுங்கையில்



**541/1, வைத்தியசாலை வீதி,**
**யாழ்ப்பாணம். T.P.: 021 222 9521**

★ "யாழ்.நகரில் வேறு எந்தக் கிளைகளும் கிடையாது."

# HEAD OFFICE

# DURDANS HOSPITAL

3, Alfred Place, Colombo 3, Srilanka.

Phone: 2575205, 2575555 Fax: 94 - 11 - 2575302

E-mail: dhsc@diamond.lanka.net www.durdans.com

ACTION FAIM

## ASSISTANT LOGISTICIANS (JAFFNA)

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka, since 1997. Current activities are based in Jaffna, Batticaloa and Trincomalee districts. **We require services of two Assistant Logisticians (One for store, One for purchase) for Jaffna.**

The Assistant Logisticians will work under the responsibilities of a Logistician.

**Purchaser :** He will have to manage the purchases in accordance with the ACF procedures. Quotations, Planning of payment,...

**Store Manager :** He will be incharge of the stores in accordance with the ACF procedures. Follow - up of the in and the out, reports, documents and planning concerning the different deliveries.

- Applicants must be fluent in English and Tamil.
- Computer literacy, especially MS Word and Excel is required.
- Driving motorcycle license and Good knowledge of Jaffna area require.
- Experience in marketing, purchasing, and negotiating or logistics storage and storekeeping.

**Category** : Senior position
**Duration** : 1 year with insurance coverage

**Apply with in 10 days or as soon as possible :**

**ACF Logistic Job Vacancy**
**No.40, Rakka lane, CHUNDIKULI,**
**JAFFNA.**
**Phone Number : 222 2465**

(C/46195)

# தொண்டர் ஆசிரியருக்குப் பளையில் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமைபுரிந்துகொண்டு நிரந்தர நியமனத்துக்காக எதிர்பார்த்திருக்கும் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பளை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களின் எதிர்கால நலன்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்டத் தமிழீழக் கல்விக்கழகம் கேட்டுள்ளது. (எ-204)


Swiss Mineral

உங்கள் காரியாலயத்தில், உங்கள் வீட்டில் நீங்கள் பயன்படுத்த உகந்தது

★உலக சுகாதார விதிமுறைகளுக்கமைவான தயாரிப்பு முறை
★அதிநவீன தயாரிப்பு சதனங்கள் மூலமான இரட்டிப்பு சுத்திகரிப்பு
★இலங்கை தரநிர்ணைய உத்தரவாதம்
★உங்கள் வாசல் வரையான இலவச சேவை




No:231, Temple Road, Nallur.
Phone: 0776 244597, 0773126963


## Request for Quotations

UNDP

**United Nations Development Programme. Sri lanka invites Request for Quotations (RFQ) for the following and the documents could be collected from the locations given against each action:**

| | | |
|---|---|---|
| Lot 1 | Supply if 525 numbers of 120 liters garbage bins | UNDP Office, 121A Temple Road, Jaffna. |
| Lot 2 | Construction 175 bases for waste collection points in Jaffna Municipality | UNDP Office, 121A Temple Road, Jaffna |
| Lot 3 | Construction of health centre with midwife quarters at Thickkam in Point Pedro, Jaffna | UNDP Office, 121A Temple Road, Jaffna |
| Lot 4 | Re-construction of Market at Manaddy in Point Pedro, Jaffna | UNDP Office, 121A Temple Road, Jaffna |
| Lot 5 | Construction of 3Km access road in Maratimepattu, Mullaitivu. | UNDP Office, 7, Kumaraswamy Road, Ganeshapuram, Kilinochchi. |
| Lot 6 | Construction of Gromadaya Health Center at Arumugathankulam in Maratimepattu, Mullaitivu. | UNDP Office, 7, Kumaraswamy Road, Ganeshapuram, Kilinochchi. |
| Lot 7 | Reconstruction of 4km Access Road in Mulliyavalai, Millaitivu. | UNDP Office, 7, Kumaraswamy Road, Ganeshapuram, Kilinochchi. |


Documents to be presented for obtaining RFQ documents:
- request letter for document on the Company's business letter head
- ICTAD registration book (contractors are requested to be of minimum M7 level of ICTAD)

Completed documents will be accepted at the same locations from where the documents are distributed until 3p.m on November 28,2005 Documents can also be obtained from the UNDP Programme Office, Operations Manager, 202-204 Bauddhaloka Mawatha, Colombo 7, Sri lanka or via email at procurement tp.lk@undp.org

No telephone inquiries will be solicited and UNDP reserves the right to cancel all or one of the above actions and/or reject any quotations, without assigning any reasons.

(C/46188)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 17-02-1938 மறைவு 15-10-2005

### அமரர் சிதம்பரப்பிள்ளை சிற்றம்பலம்

**(ஓய்வுபெற்ற புள்ளி விபர உத்தியோகத்தர்)**

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் சி.சிற்றம்பலம் அவர்கள் 15.10.2005 அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு கொழும்பு ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் அஞ்சலி செலுத்தியோருக்கும் மலர்வலயம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் கரவெட்டியில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்திமூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (14.11.2005) திங்கட்கிழமை கரவெட்டி மத்தி, கரவெட்டியில் அமைந்துள்ள ஈஸ்வரி இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதன் பின்னர் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்....
குடும்பத்தினர்.

'ஈஸ்வரி இல்லம்'
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

(19-46-24)

# நான்கு ஜனாதிபதிகளின் அட்டூழியங்கள் போதும்; ஐந்தாவது ஜனாதிபதி தமிழருக்கு வேண்டாம்!

## தேர்தலை ப் புறக்கணிக்கக் கோருகிறது கடற்றொழில் சமாசம் அறிக்கை

வடமராட்சி,நவ.13

இலங்கைத் தீவில் கடந்த 4 தடவைகள் அதிகாரத்திலிருந்து வந்த ஜனாதிபதிகளின் பதவிக் காலத்தில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடுமைகளும் அட்டூழியங்களும் ஏராளம். இந்த நிலையில் இந்த நாட்டில் ஐந்தாவதாக - மற்றுமொரு ஜனாதிபதி - பதவிக்கு வருவதால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

நான்கு ஜனாதிபதிகளின் அட்டூழியங்களும்போதும். ஐந்தாவது ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு வேண்டாம். எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளிப்பதை தமிழ்மக்கள் பகிஷ்கரிக்கவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.

இதுதொடர்பாக சமாசம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளால் இவ்வளவு காலமும் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள் எம்மாத்திரம். எமது அன்பு உறவுகளே! நன்கு சந்திக்க வேண்டிய காலத்தில் வாழ்கின்றோம். சரியான முறையில் மக்களாகிய நீங்கள் சிந்திக்கத் தவறுவீர்களானால் உங்கள் ஒவ்வொருவருடைய அழிவிற்கும் நீங்களே வித்திட்டவர்களாவீர்கள்.

இலங்கையின் 5ஆவது ஜனாதிபதியை தெரிவுசெய்யும் நாள் எதிர்வரும் நவம்பர் 17ஆகும். இம்முடிவை சர்வதேசம் எதிர்பார்ப்பதாக ஊடகங்கள் கூறுகின்றபோதிலும் நவம்பர் 27இல் எமது தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் மாவீரர் உரையையே சர்வதேசம் விழிப்புடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

**கடற்படையின் அடாவடி**

கடற்படையின் அடாவடித்தனத்தினால் கடலிலே எமது கடற்றொழிலாளர்களின் கடல் உபகரணங்கள் கடற்படைக் கப்பல்களினால் முட்டிமோதி உடைக்கப்பட்ட, அழிக்கப்பட்ட தொழில்வகை எம்மாத்திரம். கடற்படையின் துப்பாக்கிச் சூட்டினால் இறந்த கடற்றொழிலாளிகளின் எண்ணிக்கை எம்மாத்திரம். இவைகளுடன் உழைத்து உண்டு உறங்கி வாழ்ந்த எம்மவர்கள் சொந்த இடங்களையெல்லாம்விட்டு வெறுங்கையுடன் உயிர்தப்பினால் காணும் என்று வேறிடம் தேடிவந்து அகதிகள் என்றபெயருடன் வாழ்ந்து வரும் குடும்பங்களின் எண்ணிக்கை எம்மாத்திரம். இக்குடும்பங்கள் இன்றும் நிற்கதிக்குள்ளாகி வாழும் நிலையில் அவர்களின் சொந்த இடங்களெல்லாம் இராணுவ சூனியப் பிரதேசமாக்கப்பட்டு எவரும் உட்செல்ல முடியாத நிலைக்கு உள்ளாகியிருக்கும் இந்நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் எமக்கு வேண்டுமா?

1994இல் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தமிழர்களின் பிரச்சினைகளை நான் தீர்த்துக்கொள்வேன் என வாயார உறுதிமொழிகளை அளித்து பதவிக்கு வந்தார்.

இறுதியில் தமிழர்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரம் காட்டிச் செயற்பட்டார். இவரது ஆட்சிக்காலத்தில் தமிழர் பிரதேசங்களிலே நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுகள், கடற்படைக் கப்பல்களின் தாக்குதல்கள், இராணுவ முகாம்களிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகளின் தாக்குதல்கள், இராணுவச் சிப்பாய்களின் துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகம் போன்ற நடவடிக்கைகளினால் நம் தமிழ்மக்கள் சொல்லொணா துன்ப, துயரங்களை அடைந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலை எம்மக்கள் ஏற்றுக்கொள்வார்களா?

2002இல் மற்றுமோர் தேர்தல் நடந்தது. இத்தேர்தலில் தமிழ்மக்கள் அதிக அக்கறை செலுத்தவில்லை என்பது வாக்கு எண்ணிக்கையிலிருந்து தெரியவருகிறது. எனினும், பிரதமராக இருந்த ரணில் விக்ரம சிங்கவுடன் விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், இந்த ஒப்பந்தம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பல போராளிகள் இந்த ஒப்பந்த காலத்தில் கடலிலும் தரையிலும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்கள் நடந்தேறியுள்ளது.

2004.12.26 இயற்கையனர்த்தம் ஏற்பட்டு எமது மக்கள் சின்னாபின்னப்பட்டு முகாம்களிலே முடங்கியிருந்த பொழுதிலும் சிங்களப் பேரினவாத அரசின் எவ்வித உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை. வெளிநாடுகளிலிருந்து ஆழிப் பேரலையின் பாதிப்புக்குள்ளான மக்களுக்குப் பல உதவிகள் கிடைக்கப்பெற்றும் அதனைக்கூட சிங்கள அரசு வழங்குவதற்குத் தயாராக இல்லை. இவ்வுதவிகள் அனைத்தும் சரியான முறையில் கிடைப்பதற்காகப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இன்று பொதுக்கட்டமைப்பின் நிலையென்ன? நீதிமன்றத்தில் முடக்கப்பட்டுக் கிடக்கையில் போடப்பட்டிருக்கிறது.

இவ்வளவு அட்டூழியங்கள் சிங்களப் பேரினவாத அரசினால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது தமிழர்களாகிய எங்களுக்கு ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தேர்தல் ஒன்று வேண்டுமா? எனவே, அன்பு உறவுகளே இத்தேர்தலில் நாம் வாக்களிப்பதால் எமது மக்களுக்கு நாமே படுகுழிதோண்டுவதற்கு உறுதுணையளித்தவர்களாக எமது வரலாற்றில் பதிக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்களிக்கச் செல்லவேண்டாம். முற்றுமுழுதாகப் பகிஷ்கரிப்புச் செய்து தமிழர் தம் ஒற்றுமையை சர்வ நாடுகளுக்கும் புலப்படுத்துவோம் - வெளிப்படுத்துவோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (த-173)

# சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் எவருமே தமிழருக்குத் தீர்வு தரார்!

## கோப்பாய் பிரதேச பொது அமைப்புகள் அறிக்கை

சிங்களப் பேரினவாதிகள் எவருமே தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைத் தரமாட்டார்கள் என்பது கடந்த கால அனுபவங்கள் மூலம் உறுதியாகியிருக்கிறது. இந்த நிலையில் வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எதற்காக வாக்களிக்க வேண்டும்?

- இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறது கோப்பாய் பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியம். தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரி மேற்படி ஒன்றியம் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் தாயகப் பிரதேசமாகிய வடக்கு -கிழக்கு மக்கள் செறிவாக வாழும் பகுதிகள் பொது நிறுவனங்கள் வீதிகள், என்பவற்றில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் பொலீஸாரும் தமது முகாம்களை அமைத்து மக்கள் சுதந்திரமாக நடமாடவிடாதும் அச்சுறுத்தியும் பெண்கள் மீதான வன்முறைகள், அடாவடித்தனங்கள் என்பவற்றை அரங்கேற்றியும் வருகின்றனர்.

மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தின் பால் ஒன்றுபடுவதைத் தடுக்கும் நோக்கில் திட்டமிட்டு எமது பாரம்பரிய கலாசாரத்தில் சீரழிவுகளை ஏற்படுத்துகின்றனர்.

சொத்துக்களையும் இழந்து நிர்க்கதியான மக்கள் தமது படைக்கட்டுமானங்களைப் பலப்படுத்தி தேசவிடுதலைப் போராளிகளோடு துணைநின்று வியத்தகு தாக்குதல்களை நடத்தி சிங்கள ஆட்சியாளர்களை மட்டுமன்றி சர்வதேசத்தையே திகைப்பில் ஆழ்த்தியது.

அதன் விளைவுதான் போர் தவிர்ப்பு ஒப்பந்தம். இவ் ஒப்பந்தம் மூன்றரை ஆண்டுகளுக்கு எதனை எமக்குத் தந்து குவித்தது? நிராயுதபாணிகளான அரசியல் போராளிகளை இழந்தோம். நாட்டுப்பற்றாளர்களை இழந்தோம். அது மட்டுமன்றி எமது மக்கள் நலன்புரி முகாம்களில் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழும் நிலை நீடிக்கிறது.

படிப்படியாக வெளியேறவேண்டிய இராணுவம் தமது நிலைகளை மேலும் பலப்படுத்தியது மட்டுமல்லாமல் எமது மக்களின் அன்றாட வாழ்வில் குந்தகம் விளைவித்தது. கடந்த ஸ்ரீலங்காவின் ஆட்சியாளர்கள் இதனையே எமது மக்களுக்குப் பரிசாகத் தந்தனர். இதனைத் தமிழ்மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் எமது தமிழ்தேசிய எழுச்சியை எதிரிக்கு எடுத்துக் காட்டுவோம். தமிழ்மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்லர். மானம்மிக்க, வீரம் மிக்க ஒரு, தேசிய இனம். எதிரிகளினதும் விரோதிகளினதும் கபடத்தனத்திற்கு நாம் ஒன்றுபட்டு பதிலடி கொடுப்போம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# அமைச்சர் மங்களவுக்கு எதிராக அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டு

## இலஞ்ச ஆணையாளரிடம் ஐ.தே.க. முறைப்பாடு

கொழும்பு, நவ.12

அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக, தேசிய சொத்துக்கள் மோசடி தொடர்பான முறைப்பாடு ஒன்று இலஞ்ச ஊழல்கள் மோசடித் தவிர்ப்பு ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில், சட்டத்தரணிகள் குழு ஒன்று இந்த முறைப்பாட்டை நேற்றுமுன்தினம் நேரடியாகச் சென்று கையளித்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வர்த்தக விளம்பரங்களை தேசிய ரூபவாஹினி மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பனவற்றில் கடன் அடிப்படையில் ஒலி, ஒளிபரப்புச்செய்யும்படி மங்கள சமரவீர உத்தரவிட்டார் என்றும்-

பல கோடி ரூபா செலவில் விளம்பரங்களைச் செய்துவிட்டு இதுவரை ஐந்து லட்சம் ரூபாவை மட்டுமே செலுத்தியிருந்தார் என்றும் - முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநர் சபைத் தீர்மானத்தின்படி எந்த ஒரு விளம்பரத்தையும் கடன் அடிப்படையில் ஏற்கமுடியாது. ஆனால், அமைச்சர் மங்கள சமரவீர தான் ஓர் அமைச்சர் என்ற வகையில் தனதுஅதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார். துறைமுக, கப்பல் போக்குவரத்து அமைச்சின் கடிதத் தலைப்பில் உத்தியோகபூர்வமாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

'' இது முற்றுமுழுதான அதிகார துஷ்பிரயோகம் மட்டுமன்றி தேசிய சொத்துக்கள் மோசடியுமாகும்.

''தனிப்பட்ட ஒருவரின் தேர்தல் விளம்பரங்களுக்குத் தேசிய சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.''

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பான சகல சான்றுகளும், ஆவணங்களும் இலஞ்ச ஊழல்கள் மோசடித் தவிர்ப்பு ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இலஞ்ச உழல்கள் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழுமுன் சமர்ப்பித்த குற்றச்சாட்டை ஆணைக்குழு நிராகரித்தது தெரிந்ததே.

அமைச்சர் மங்கள சமரவீரவின் முறைப்பாடுகள் ஆதாரமற்றவை, எந்தவிதமான சான்றுகளும் அற்றவை, முறைப்பாட்டாளரான அமைச்சர் மங்கள சமரவீரவிடம் வாக்கு மூலம் பெறவேண்டிய அவசியம்கூட இல்லை என ஆணைக்குழு அறிவித்திருந்தது.

''அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க மீது சேறு பூசும் வகையிலேயே இந்தப் பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்தியிருந்தார். இப்பொழுது அவருடைய போலித்தனம் வெளிப்பட்டுவிட்டது.'' - என ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# கையடக்கத் தொலைபேசி பாவனையாளருக்கு ஏமாற்றம்; பிசுபிசுத்துவிட்டது உத்தேசத்திட்டம்

கொழும்பு,நவ.13

கையடக்கத் தொலைபேசிகளுக்கு உள்வரும் அழைப்புகளுக்கு கட்டணம் அறவிடுவதில்லை என்ற உத்தேச திட்டம் முற்றுமுழுதாகப் பிசுபிசுத்துப் போய்விட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய நாடுகளில் உள்ளது போன்று கையடக்கத்தொலைபேசி பாவனையாளர் மற்றவர்களுக்கு எடுக்கும் வெளி அழைப்புகளுக்கு மட்டுமே கட்டணம் அறவிடும் திட்டத்தைக் கொண்டுவருவதுபற்றி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரே பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக உள்வரும் அழைப்புக்களை இலவசமாகக்கும் திட்டத்தை ஆராய்வதற்காக இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு அதிகார சபை குழுவொன்றினை நியமித்தது.

இத்திட்டம் குறித்து ஆராய்ந்த குழு உத்தேச திட்டத்துக்குப் பாதகமான முடிவைத் தனது அறிக்கையில் தெரிவித்தரிந்தது. அதனைத்தொடர்ந்து மேற்படி திட்டத்தை முற்றுமுழுதாகக் கைவிடுவதென தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இது குறித்து கருத்துவெளியிட்ட மேற்படி அதிகார சபையின் பேச்சாளர் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் அது நிரந்தர தொலைபேசி இணைப்பைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு மேலதிக செலவீனத்தை ஏற்படுத்துவதாய் அமைந்திருக்கும் என்றார்.

அத்துடன் நாணயம் செலுத்தி தொலைபேசி அழைப்பைப் பெறுவோர் அதற்காகப் பெரும் தொலைச் சில்லறை நாணயக்குற்றிகளை எடுத்துச் செல்ல நேர்ந்திருக்கும்.

நாட்டில் தற்போது நிரந்தரத் தொலைபேசி இணைப்பைக் கொண்டுள்ளோரின் எண்ணிக்கையில் மும்மடங்கு தொகையினர் கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டுள்ளனர். ஆயினும் நாணயம் செலுத்தி தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவோருக்கு அதிக செலவீனம் ஏற்படாதிருக்க உதவவேண்டியுள்ளது. தற்போது நிரந்தர தொலைபேசி இணைப்பு வசதி கொண்டுள்ளோரிடமிருந்து உள்வரும் அழைப்புகளுக்கு கட்டணம் அறவிடப்படுவதில்லை.

கையடக்கத்பேசி அழைப்பை ஏற்படுத்துவோருடமிருந்து மட்டுமே அதற்கான முழுக் கட்டணத்தையும் அறவிடும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்துமென நம்பி கடந்த ஆண்டில் இலங்கையில் நான்கு தொலைத் தொடர்பு வலைப் பின்னல் நிறுவனங்கள் தமது சேவையை ஆரம்பித்திருந் தன.

பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் ஏற்கனவே இந்த புதிய திட்டத்தைத் தத்தமது நாடுகளில் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது என்று அவர் மேலும் கூறினார். (எ-205)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 - 03 - 1908



மறைவு 21 - 10 - 1999

அமரர் **வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்**

திதி:13-11-2005

தன்னுயிர் போல் எமைக் காத்து
வையகத்தில் நற்பிள்ளைகளாய்
விளங்க வைத்தீர்
ஆண்டுகள் ஆறு கழிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதில்...

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தொண்டைமானாறு. (42826)(26-19-13)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## சித்திரவேலு மகாதேவா

(இளைப்பாறிய புகையிரதப் பாதைப் பரிசோதகர்)



பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
எம்மை இவ்வுலகில் வாழ வழிகாட்டிய
தெய்வமே!

மாதமொன்று கழிந்தாலும் - எம்
நினைவொன்றும் அகலவில்லை
உங்கள் ஆத்மாசாந்தியடைய
வேண்டுகின்றோம் - ஆண்டவனை.

நாளை (14-11-2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

145, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (42660) (24-26-19-13)

தகவல்:
**மனைவி.**

---

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சுந்தரமூர்த்தி

[இளைப்பாறிய உத்தியோகத்தர், வனபரிபாலனம்]



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது கல்கிசையில் வசித்து வந்தவருமாகிய தம்பையா சுந்தரமூர்த்தி 10-11-2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற நடராசா மற்றும் இராஜரட்ணம், தங்கராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மசீலன், சத்தியசீலன், ஜெயசீலன், மணிலால்தேவி, சாந்தினி, குணசீலன், சுகந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் நவராணி, நாகேஸ்வரி, ராகினி, பத்மநாதன், தவராசா, யாழினி, ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரணி, அர்ஜன், ரவிசங்கர், சிவசங்கர், திவ்யா, பிரதீபன், ஜனனி, திவாகரன், வாகினி, கிரிசாந், கஜசாந் டிலக்ஸன், டிலானி, வனிஷா, ஜெனிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (13-11-2005) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*நிரந்தர முகவரி:*
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்,
*தற்காலிக முகவரி:*
94/1, வத்தரபோல மாவத்த, கல்கிசை.
தொ.பேசி. இல. 011 2713670

தகவல்:
**குடும்பத்தினர்.**

(42825)(26-19-13)

## ஆறுமுகம் கணேஸ்



கச்சாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணேஸ் அவர்கள் 10-11-2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-11-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கெற்புலவு இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம். (42814)(26-19-13)

தகவல்:
**குடும்பத்தினர்.**

---

சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் ஐப்பசி மாதம் 27 ஆம் நாள் (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10.45 மணி முதல் 12.32 மணி வரையுள்ள ரேவதி நட்சத்திரமும் துவாதசி திதி சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ | பிரம்மஸ்ரீ |
| திரு.திருமதி நடனசபாபதி சர்மா | திரு.திருமதி இரத்தினசபாபதி சர்மா |
| தம்பதிகளின் புத்திரன் திருநிறை செல்வன் | தம்பதிகளின் புத்திரி திருநிறை செல்வி |
| **சிரஞ்சீவி ஸ்ரீதரசர்மா** | **ரோகினி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இரு வீட்டார் அழைப்பு. தனிப்பட்ட அழைப்பு இல்லை)

நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ இ.நடனசபாபதி சர்மா
பத்மினி,
ந.உமாதரசர்மா- கௌசல்யா,
ச.பரமேஸ்வரசர்மா- ரஜனி,
நீலியம்பனை பிள்ளையார் கோயிலடி,
மல்லாகம்.

பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதி
சர்மா-சாரதாம்பாள்,
சதாசிவசர்மா- கௌரியம்மா,
நாராயணசர்மா- தேவசேனா
சரவணபவ ஐயர்,
நந்தகோப சர்மா, கலைவாணி,
கலைச்செல்வி,
புலோலி தெற்கு, உபயகதிர்காமம்.

(அ-46207) (39-26-19-13)

---


# G.C.E(O/L) 3C, 3S தகமையுடன்

## Malaysia, Singapore

போன்ற நாடுகளில் 1 வருட பாடநெறியின் பின்னர் தொடர்ந்தும் U.K., USA போன்ற நாடுகளில் 2 வருட பாடநெறியை பூர்த்தி செய்ய இலகுவான வழிமுறைகள் செய்து தரப்படும்.

All Courses Available

Free Consulting

**SKY LINE** TRAVELS & SERVICES

PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS

No. 253- 1/2, Galle Road, Wellawatte. Tel: 0115512484. Mobile: 0773175767


# ஆறுமுக நாவலர் பற்றிய வினாடி - வினாப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.13

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பற்றிய வினாடி - வினாப் போட்டி எதிர் வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவருக்கு வேறாகவும், ஏனையோருக்கு வேறாகவும் தனித்தனியாக இந்தப் போட்டிகள் நடத்தப்படும்.

போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு அன்றைய தினமே நாவலர் விருதுக் கேடயம் உட்படபெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் 125, அரசடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும் என்று- சைவப் புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் சு.செல்லத்துரை அறிவித்துள்ளார். (எ)

# சைவப்புலவர் சங்க சங்கம நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.13

கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமியைப் பாராட்டும் நிகழ்வும் சைவப் புலவர் சங்க சங்கம நிகழ்வும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியா சாலையில் நடைபெற வுள்ளன. மேற்படி நிகழ்வுகள் இன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது. (எ)

---


# இலங்கையின் முன்னணி நிறுவனத்துடன் இணைய ஓர் சந்தர்ப்பம்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களை (FMCG) இலங்கையெங்கும் சந்தைப்படுத்தும் ஒருமுன்னணி நிறுவனம் தமது சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு புதிய வியூகங்களுடன் விரிவுபடுத்து வதற்கான நட வடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிறுவனம் தமது இலட்சியத்திட்டங்களை அடைய தமது சந்தைப்படுத்தற் பிரிவுக்கு அனுபவமும் ஆற்றலும், அர்ப்பணிப்புள்ள இளம் விண்ணப்பதாரர்களின் சேவையை எதிர்பார்கப்படுகின்றது.

**விற்பனைப்பிரதிநிதிகள்** - யாழ்ப்பாணம்,கிளிநொச்சி

எமது நிறுவனமானது வடக்கு பிரதேசத்திலே வாடிக்கையாளர்களினதும், நுகர்வோரினதும் நன்மதிப்பைப் பெற்ற ஒரு முன்னோடி நிறுவனமாகக் கருதப்படுவதால் ஆளுமைத் திறன் கொண்ட, சிரேஷ்ட விண்ணப்பதாரர்களின் சேவை எதிர்பார்கப்படுகின்றது.

**தகுதியான விண்ணப்பதாரி**

* சிறப்பான தொடர்பாடல் மற்றும் பலம்மிக்க உள்ளாந்த திறமைகளுடன், சிறப்பாகத் தீர்மானம் எடுக்கக் கூடிய திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வு திறமைகள் கொண்டவராய் இருத்தல் அவசியம்.

* 30 வயதிற்குக் குறைந்தவர்
* க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியுடன் ஆங்கில அறிவு.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் அனுபவம், ஆற்றலுக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

இரண்டு உறவினரல்லாத நடுவர்களின் தொடர்பு விவரங்களுடன் உங்களின் முழுமையான சுயவிவரக் கோவையை இவ்விளம்பரம் கண்டு 07 நாட்களுக்குள் கிடைக் கத்தக்கதாக அனுப்பவும்.

**விளம்பர இலக்கம்:2750**
**உதயன்**
**யாழ்ப்பாணம்.**



எம்மிடமிருந்து மட்டுமே ஒரிஜினல் Tally Study Kit மற்றும் சான்றிதழ்கள்

Tally Graduate Academy

நீங்க கொம்ப்யூட்டர் எக்கவுண்டன்ட் ஆகணுமா ?

Tally GRADUATE படிங்க

காலம் : 3 மாதங்கள்

கணக்கியல் துறையில் ஒரு புதிய வளர்ச்சி



CSC-ASIAN

101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 8196

# குடாநாட்டில் அடிக்கடி மின்தடை அன்றாடக் கருமங்களில் பாதிப்பு

## நிவர்த்திசெய்யக் கோருகின்றனர் பொதுமக்கள்

யாழ்.குடாநாட்டில்அடிக்கடி ஏற்பட்டு வரும் மின்தடைகாரணமாகப் பொதுமக்களின்அன்றாடச்செயற்பாடுகள் பாதிக்கப் படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் கடந்த சில வாரங்களாக மின்விநியோகம் சீரற்றநிலையில் உள்ளது.முன்னறிவித்தல் எதுவுமின்றிஅடிக்கடி மின்தடை ஏற்படுகிறது.

நாள்தோறும் அடிக்கடிமின்தடை ஏற்படுவதால் தமதுஅன்றாட அலுவல்கள் பாதிக்கப்படுவதாகவும் இதுதொடர்பாக எந்தவித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் மின்சாரசபை மேற்கொள்ள வில்லை என்றும் - பொதுமக்கள் குறை பட்டுக் கொள்கின்றனர்.

மின்தடை காரணமாகவும் வலுக்குறைந்த மின்விநியோகத்தினாலும் அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்களினதும்அன்றாடச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.நாம் முக்கிய விடயங்கள் பலவற்றை அவசர அவசரமாகச் செய்யும் போது தீடிரென ஏற்படும் மின்தடை தமது அலுவல்களைப்பாதிப்பதாக அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பமாகியுள்ளது. அதனால் மின்சாரம் எந்நேரமும் அவசியமான தொன்றாகக் கருதப்படுன்றது. இரவுவேளைகளில் ஏற்படும் மின்தடை காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்படுகின்றன. வருட இறுதி ஆகையால் ஆண்டிறுதிப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் ஆயத்தப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளனர். அத்துடன் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையும் நெருங்குகின்றன. இந்நிலையில் தொடர்ச்சியாக ஏற்படும் மின்தடையினால் மாணவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

வலுக்குறைந்த மின் விநியோகத்தாலும் மின்தடையினாலும் பொதுமக்கள் வீடுகளில் உபயோகிக்கும் மின் உபகரணங்களும் பழுதடைகின்றன.

எனவே, இது விடயத்தில் மின்சார சபையினர் அதிக கவனமெடுத்து விரைவில் மின் விநியோகத்தைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு மெனப் பொதுமக்கள் கோருகின்றனர்.

(எ-8)

## ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவருக்கு பொதுத்தேர்வு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவை நடத்தும் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான பொதுத்தேர்வு எதிர்வரும் 21 ஆம்திகதி முதல் 30ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அதிபர்கள்ஒவ்வொரு நாளுக்குமுரிய பரீட்சை வினாத்தாள்களை ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டநேரசூசிக்கு அமைவாக தமது பாடசாலை அமைந்துள்ள வலயக் கல்விப் பணிமனை அல்லது கோட்டக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என்று பேரவைத் தலைவர் தி.பெரிய தம்பி கேட்டுள்ளார்.

## பேச்சுப் போட்டி


ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தை முன்னிட்டு யாழ்.சைவபரிபாலனசபை நடத்தும் பேச்சுப் போட்டி ஏற்கனவே அறிவிக்கப்பட்ட படி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை. நாவலர் மகாவித்தியாசாலையில் நடைபெறும் என்று சைவ பரிபாலன சபையின் தலைவர் சைவப்புலவர் கலாநிதி வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

(எ)



குடத்தனை மாளிகைத்திடல் பகுதியில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு கிணறுகள், மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்கான அடிக்கல்லினை குடத்தனை தென்னிந்திய்த் திருச் சபையின் குரு வண.ராஜன் றோகான் நடுவதைப் படத்தில் காணலாம். இதற்கான நிதியுதவியினை தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனம் குடத்தனை தென்னிந்தியத் திருச்சபைக்கூடாக வழங்கியுள்ளது.

(படம் - குடத்தனைச் செய்தியாளர்)



வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை மரங்களை நடுகை செய்யும் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. பிரதேச சபை செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் முதலாவது மரத்தை நட்டு திட்டத்தை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

(எ-185)

# தமிழரின் தாயகப் பிரச்சினைக்கு தேர்தலால் எந்த முடிவும் வராது!

## புறக்கணிக்கக்கோருகிறது வவுனியா மாணவர்அமைப்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எவரும் தமிழ் மக்களின் தாயகம் தழுவிய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைத் தரமாட்டார்கள். எனவே தேர்தலால் எமது பிரச்சினைக்கு எந்த முடிவும் வராது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரி வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கைத் தீவு முழுவதும் தமக்கே சொந்தமென உரிமை கோரும் தேர்தலே இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல்.

1948 இலங்கையை பிரித்தானியா விட்டுச் சென்ற காலம் முதல் இலங்கையில் சிங்கள தேசத்தின் இரு பிரதான கட்சிகளுமே தேர்தல் நாடக அரங்கில் போட்டியிட்டு நாட்டின் சகல அழிவுகளுக்கும் காரணமாக இருந்து வந்துள்ளன.

1978 இல் அறிமுகமானஜனாதிபதிஆட்சி முறையின் பின்னரும் இவற்றில் போட்டியிட்ட கட்சிகளாக ஐக்கியதேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுமே வெற்றியீட்டின.

ஆட்சிபீடம் ஏறியோர் யாவரும் தமிழர்களை தொடர்ந்து நசுக்குவதிலும் எமது தாயகத்தை பாரிய அழிவுக்குட்படுத்துவதிலும் கவனம் செலுத்தி தங்களது நலன்களையும் சிங்கள தேசத்தின் நலன்களிலும் அக்கறை காட்டினார்கள்.

2005 ஆம் ஆண்டில் நடைபெறும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மஹிந்த, ரணில் ஆகிய இருவரும் தங்களின் ஆட்சிப் பீடத்திற்கான - அதிகார பீடத்திற்கான போட்டியில் உள்ளனரே தவிர எமது தாயகம், சுய நிர்ணயம், தன்னாட்சி, விடுதலை முதலியன பற்றிய சிந்தனை இல்லாதவர்களாகவே உள்ளனர். இவர்களது கூட்டுக் கட்சிகளின் இயல்புகள் இதனை வெளிப்படுத்தி நிற்கின்றன.

எனவே எமது தாயகமாகிய வடக்கு-கிழக்கில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களாகிய நாம் தேர்தலை பகிஷ்கரிப்போம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(த)



உலக ஆசிரியர் தினத்தில் வடலியடைப்பு கலைவாணி முன்பள்ளி ஆசிரியை திருமதி உ.பூமணி, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவி சே.கலைக்குமாரியினால் கௌரவிக்கப்படுவதையும் அருகில் சண்டிலிப்பாய் பிரதேச இணைப்பாளர் திருமதி கா.சந்திரவதனி, சனசமூக நிலையத் தலைவர் க.தர்மராசா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்- நவாலிச் செய்தியாளர்)

# எவர் வென்றாலும் எங்களுக்கு எந்தவிதமான பலனுமில்லை!

## இடம்பெயர்ந்தோர் நலன்புரிநிலையம் அறிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும் அதனால் தமிழ் மக்களுக்கு எந்தவித பலனும் கிடைக்கப்போவதில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறது இடம்பெயர்ந்தோர்களின் நலன்புரி நிலையம். தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரி நலன்புரி நிலையம் விடுத்துள்ள துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்காவில் தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிங்களப் பேரினவாதத்தின் மொத்த உருவமான தலைவர் ஒருவரையே தெரிவுசெய்யவுள்ளனர்.


இலங்கையை மாறிமாறி ஆண்டு வந்த சிங்கள அரசுகள் இனத்துவேசத்தை முன்வைத்தே ஆட்சிகளைக் கைப்பற்றி தமிழ் பேசும் மக்களை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளையே தொடர்ந்தவண்ண முள்ளனர்.

தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பேரினவாதத் தலைவரைத் தெரிவுசெய்வதன் மூலம் மேலும் தமிழ் மக்களைத் துன்புறுத்தும் வகையில் செயற்பட ஆயத்தமாகின்றனர். இரு பிரதான கட்சிகள் போட்டியிட்டாலும் அவர்களின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் ஒன்றாகவே காணப்படுகின்றன.

அண்மைக் காலத்தில் வெளிவரும் அறிக்கைகள் மூலம் திரும்பவும் தமிழ் பேசும் மக்கள் மீது ஒரு பாரிய போரை நடத்த விரும்பி அதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதை அறிய முடிகிறது. இத்தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் எமது மக்களிற்கு எதுவித பயனுமில்லை என்பது தெளிவாகின்றது.

எனவே, இத்தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் எவரும் வாக்களிக்காமல் பகிஷ்கரிப்பதே சரியான முடிவாகும். தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் எமது ஒன்றுதிரண்ட பலத்தையும் எமது அபிலாசைகளையும் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்துவோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(த)



பண்ணாகம், அம்பாள் கலை மன்றத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தின் திறப்பு விழா அண்மையில் மன்றத் தலைவர் து.துரைராஜ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற யாழ்.மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு கலாசார மண்டபத்தின் பெயரைத் திரைநீக்கம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்- வலி.தென் மேற்குச் செய்தியாளர்)

# இருவரது கரங்களும் இரத்தம் தோய்ந்தவை எவருக்கும் தமிழர்கள் வாக்களிக்கக் கூடாது

## இப்படிக்கோருகிறது மாதர் சங்கம்

பிரதானவேட்பாளர்களான ரணில், மஹிந்த ஆகிய இருவரது கரங்களும் இரத்தம் தோய்ந்தவை. எனவே தமிழ் மக்கள் எவருக்கும் வாக்களிக்காமல் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ் கரிக்கவேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது கோயிற் குடியிருப்பு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்.

தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரி அந்தச் சங்கம் வெளியிட்டிருக் கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழின அழிப்பையே தமது அரசியல் தளமாகக் கொண்டுள்ள ரணிலும், மகிந்தவும் ஸ்ரீலங்கா தேசத்தின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் இவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமாதானத் தீர்வுக்கான எந்த முன்வைப்புக்களும் இல்லை. ரணிலிடமோ, மகிந்தவிடமோ சமாதானத் தீர்வுக்கான ஆக்கபூர்வமான திட்டங்கள் எது வுமேயில்லை. இவர்கள் இருவருமே தேர்தல் மேடைகளில் இனவாதப் பிரசாரத்தையே முழக்குகிறார்கள்.

மிக நீண்டகால தமிழின அழிப்புக்களை தமது வரலாறாகக் கொண்ட முன்னைய ஸ்ரீ லங்காப் பிரதமர்கள் ஆகிய இவர்கள் இரு வரது கரங்களும் குருதி தோய்ந்தவை என்பதை எவராலும் மறுக்க முடியாது. இவர்கள் இருவருமே விரும்பியிருந்தால் மெய்யான சமாதானத் தீர்வை எட்டியிருக்கமுடியும். ஆனால் இவர்கள் கேடுகெட்ட பேரினவாதிகளாக இருக்கும்போது, சமாதனம் பற்றி இவர்கள் கூறுவது பொய்யைத் தவிர வேறு எதுவுமில்லை.

இவர்களை அண்டிப் பிழைக்கும் துரோகக் கும்பலொன்று வடக்கு - கிழக்கில் சுயாட்சி என்றும். மத்தியில் கூட்டாட்சியென்றும், கூறியது. இப்போது அந்தக் கும்பல் மகிந்தவின் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு சந்தர்ப்பவாத அரசியல் பேசுகிறது.

பேரினவாத போர்க்கோலம் பூணும் ஸ்ரீலங்கா தேசத்து அரசியல் குறித்து எமக்கு அக்கறையில்லை அதன் மூலம் எமக்கு விடிவுமில்லை. ஜனாதிபதித் தேர்தல் அவர்களுடன் போகட்டும். சிங்கள தேசம் ஜனாதிபதித் தேர்தலை எம்மீது திணிக்க நாம் அனுமதிக்க மாட்டோம். என்று அதில் உள்ளது.

(த)


## கண்டெடுக்கப்பட்டுள்ளது

தங்கநகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

**மயூரா அன்பளிப்பு அகம்**
**இல.14,நவீன சந்தை வெளிப்புறம்**
**யாழ்ப்பாணம்.**
**021 222 2084.**

(42830)(42-13-15-30)



## பதவி வெற்றிடம்

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல கம்பனியின் முகவர் நிலையத்திற்கு கீழ்க்காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ விற்பனைப் பிரதிநிதி (Distibutor Sales Representative)

தகைமை : க.பொ.த.(உ/த) வர்த்தகப் பிரிவு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
குறிப்பு : ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
வயது : 20-30 வரை

உங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 18-11-2005 வெளிக்கிழமைக்கு முன்பாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

முகவரி: விளம்பர இல. மே/பா 2751
உதயன் பத்திரிகை,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(42832)(13-15-30)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2005ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி

**ஜெயக்குமார் சஜீவா**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவருக்கு கற்பித்து வழிகாட்டிய பாடசாலை ஆசிரியர்களையும் ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களையும் பாராட்டி வாழ்த்தி நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
மாமா, அத்தை - ஜெயந்தி விஜயகுமார் (சுவிஸ்)
சித்தப்பா, சித்தி - ஜெயராஜ் சாமினி (லண்டன்)
சித்தப்பா - ஜெந்திரன்.

கைதடி.

(42828)(42-13-15-30)



## அமெரிக்கா செல்வதற்கான ஓர் வாய்ப்பு

**லொத்தர் மூலம் விசா**

இன்றே இன்றெற்மூலமாக உங்கள் பெயரை பதிவு செய்யது நீங்களும் அதிஸ்ரசாலியாகுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு

**Director**
**BBS Netting**
3/14; Pinwatta Road,Dehiwala
T.P:011-2737158
E-Mail:-bbsnetting@yahoo.com



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவனும் **ஜெகதீஸ்வரன் கிச்சிலா** தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனுமான

**நிதர்சன்**

2005 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டுப் பாராட்டுவதுடன், அவர் மேலும் பல கலைகளையும் பெற்று வாழ்வில் ஒளிவீச மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமி.

(சி/46192)(26-13-15-30)



## வன்னை வீரமாகாளி அம்மன் கோயில் தேவஸ்தான அறிவித்தல்

மேற்படி எமது ஆலயத்தில் இந்தியாவிலே திருவெண்ணாமலையிலே திருவிளக்கு கொண்டாடப்படும் திகதியான 15.12.2005 ஆம் திகதியே எமது ஆலயத்திலும் விளக்கீடு உற்சவம் இடம்பெறவுள்ளது. எனவே, எமது ஆலயத்தை சார்ந்த அடியார்கள் அனைவரையும் அன்றையதினமே தங்களது இல்லங்களில் விளக்கீட்டுத் திருநாளைக் கொண்டாடும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

04.01.2006 ஆம் திகதி திருவெம்பாவை ஆரம்பம்.

**சிவாஸ்ரீ சிவ.கமல்ராஜ்குருக்கள்**
(பிரதம குருக்கள்)

(42833)(21-13-15-30)



## கண்ணீரில் கரைந்த நான்காம் ஆண்டு நினைவு நாள்

மண்மகிழ 26 - 12 - 1935



கண்நெகிழ 13 - 11 - 2001

**இராமலிங்கம் செல்லத்துரை**

கைப்பிடித்த நாள்முதலாய் கணமேனும் பிரியாமல்
நிழல்போல வந்தவளை நிமிடத்தில் மறந்து
நிர்க்கதியாய் தவிக்கவிட்டு நிம்மதியாய் மறைந்தீரே!
உன் உதிரத்தில் வந்துதித்த மும்மணிகள் கதறி அழ
உன்கடமை முடிந்ததென்று கண்மூடிக் கொண்டீரே!
நெஞ்சும் குமுறி எழ நிம்மதிகள் கலைந்தோட
கண்ணீர் பெருகி வரக் கதறி அழுதாலும்
கண்ணன் கழல் அடியில் களிப்புடன் வாழவேண்டுகிறோம்.

நிரந்தரமுகவரி:
"செல்வபதி",
மல்லாகம்.

தற்காலிகமுகவரி:
இல.64, கணேசபுரம்,
கிளிநொச்சி.

- குடும்பத்தினர்.

(சி/46210)(42-13-17-30)


## பன்னிரு திருமுறை பாராயணம்

- யாழ்ப்பாணம், நவ.13

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் நடத்திவரும் பௌர்ணமி தின அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு ஆனைக் கோட்டை ஸ்ரீகாசி காண்டாமடம் ஸ்ரீ காசி விசாலாட்சி சமேத ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அடியவர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-204)


## மரண அறிவித்தல்

திருமதி ஞானசுந்தரம் இரத்தினேஸ்வரி (இரத்தினம்)



உடுவில் தெற்கு, யாமா சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசுந்தரம் இரத்தினேஸ்வரி 10.11.2005 வியாழக் கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லையா, தங்கம்மா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் மகாலிங்கம் (கனடா), விஜயலட்சுமி (ஜேர்மனி), நகுலேந்திரன், கேதீஸ்வரன் (உப அதிபர், மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம், பூந்தோட்டம், வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி (கனடா), மகாலிங்கம் (ஜேர்மனி), ஞானரஞ்சினி, விஜயலட்சுமி (திட்டப் பணிப்பாளர், புனர்வாழ்வு செயலகம், கச்சேரி-வவுனியா) ஆகியோரின் அருமை மாமியாரும் சுதாயினி, சுகந்தி, மகேந்திரன், சிறீதரன்(கனடா), ஜெகதீசன், ஜெகதீஸ்வரி, ஜெயக்குமார், பத்மரஞ்சினி, கண்ணதாசன், குலேபா (ஜேர்மனி), டிலக்ஷா, லக்ஷன், மாதங்கி, மாதூரன் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அனிக்கா, லக்ஸ்மன், நவீதா, கௌசியா, அபிலாஸ், ஆர்த்திக், பூமிகா, வினுஷன், விதுனா, நதீசன், சஜோனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஞா. கேதீஸ்வரன்**
(உப அதிபர், மாகாண கூட்டுறவுச் சபை, பயிற்சி நிறுவனம். பூந்தோட்டம், வவுனியா.),
ஞா. நகுலேஸ்வரன், ஞா. மகாலிங்கம் (கனடா).

உடுவில் தெற்கு,
யாமா சந்தி,
மானிப்பாய்.

(42831) (54-17-13-30)



இளைஞனுக்கோ, யுவதிக்கோ இளம் வயதில் தாம் கொண்டிருந்த இலட்சியங்களை அடைவது கனவாக இருக்கலாம். சாதாரணமாக இருக்கலாம். இந்த வயதில் காலத்தை வீணாகக் கழிப்பது ஆபத்தில் போய் முடியலாம். காலம் சென்றால் மீள வராது. சுயாதீன அரசாங்கமொன்றை அமைத்து மகிழ்வான வாழ்வை உருவாக்கிக் கொள்வோம்.

நாம் சமாதானத்தை பரப்புவோம் — விக்டர் ஹெட்டிகொட — சின்னம் கோப்பை

S.V.H.

# நிறைவேறுமா ஐ.நாவின் இலக்கு?

**ஐக்கிய நாடுகள் தினம் அண்மையில் உல கெங்கிலும் அனுஷ்டிக்கப்பட்டது. அதனை யொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



சமாதானத்தையும் நட்புறவையும் ஏற்படுத்த வலியுறுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஒக்ரோபர் மாதம் சர்வதேச சிறுவர் தினம், முதியோர் தினம், உலக உணவு தினம் என உல கெங்கிலும் முக்கியம் பெற்ற நிகழ்வுகள் நடந்துள்ளன. இந்த இரண்டு தினங்களையும் எதற்காகக் கொண்டாடுகின்றனரோ அந்த இலக்கை உலகம் எட்டவில்லை. பாரிய தோல்வியையே சந்தித்துள்ளது. இனி வரும் காலங்களிலேனும் இலக்கை அடையுமா?

## 189 நாடுகள்

உலகின் மிகப்பெரிய நிறு வனம் ஐ.நா. சான்பிரான் சிஸ்கோ மாநாட்டின் பலனாக 110 நாடுகளைக் கொண்டு உருவாகிய ஐ.நா. அமைப்பில் இப்பொழுது 189 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

ஐ.நா.நாடுகளின் பாது காப்பு நலன்கள் தொடர்பாக எடுக்கும் முடிவுகளினைக் கடந்த காலத்தில் சரியான முறையில் செயற்படுத்தியதா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றன. நீதியான வழியில் செயற்பட ஏகாதிபத்தியம் அதற்குத் தடையாக இருந்து வந்தமை மறுக்கமுடி யாத உண்மை.




இருந்தும் ஐ.நா. தனது கிளை அமைப்பு நிறுவனங்களுக் கூடாக அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளது; ஆற்றியும் வருகின்றது. UNESCO (ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனம்), ILO (சர்வதேச தொழிலாளர் நிறுவனம்), FAO (உணவு விவசாய நிறுவனம்), UNICEF (ஐ.நா. சிறுவர் அபிவிருத்தி நிதியம்) போன்ற அமைப்புகளைக் குறிப்பிடலாம்.

ஐ.நா. அமைப்புக்கு அதன் செயற்பாட்டிற்குத் தேவையான பெருமளவான நிதியை அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் வழங்குகின்றன. இந்த நிதி உதவியில் அமெரிக்காவின் உதவி கணிசமான அளவு கிடைக்கின்றது.

## அமெரிக்க மேலாதிக்கம்

அமெரிக்கா தனது மேலாதிக்க நலன்சார்ந்த நடவடிக்கைகளிற்கு ஐ.நாவைப் பயன்படுத்துவதான குற்றச்சாட்டு இன்று வரை நீங்கவில்லை. மூன்றாம் உலக நாடுகள் மீது தனது ஆதிக்கத்தைத் திணிக்க முயன்று வருகின்றது. அதற்கான செயற்பாடுகளில் தீவிரமாக இறங்கியுள்ளது. ஈழத் தமிழர் பிரச்சினையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதில் இந்த ஏகாதிபத்தியத்திற்குப் பெரும்பங் குண்டு.

பசிவந்தால் பத்தும் பறந்துபோகும். இது தமிழ்ப் பழமொழி. உலகெங்கிலும் பட்டினிக்குள்ளாகி மரணமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உலகம் உணவுப் பிரச்சினைகளை எதிர்நோக்கிவருகின்றது. இருந்த போதிலும் அதற்கான ஆக்கபூர்வ செயற்றிட்டங்கள் எதனையும் சரியான முறையில் மேற்கொள்ள உலகம் தவறி வருகின்றது என உலக உணவு நிறுவன அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## வறுமை நீக்க 400 கோடி போர்ச் செலவீனம் 95600 கோடி

உலகம் எதிர்நோக்கும் உணவுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக 1996ஆம் ஆண்டு உலக உணவு மாநாடு ரோம் நகரில் நடைபெற்றது. 2002ஆம் ஆண்டு இதேபோன்ற மாநாடு நடைபெற்றவேளை 2015ஆம் ஆண்டளவில் உலகின் வறுமையை அரைவாசியாகக் குறைக்க ஐ.நா. தீர்மானம் எடுத்தது.

இத்திட்டத்தை நோக்கும்போது உலகம் எங்கே செல்கின்றது என்ற வினா எழுகின்றது. இத்திட்டத்தை நிறைவேற்ற 4ஆயிரம் தொடக்கம் 7 ஆயிரம் கோடி டொலர் வரை தேவை என ஐ.நா. கணக்கிட்டுள்ளது.


இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், உலக வறுமையை அரைவாசியாகக் குறைக்கத்தான் இந்தத் தொகை என்பதாகும்.

கடந்த 2003ஆம் ஆண்டின் உலக இராணுவ செலவீனம் என்ன தெரியுமா? 95ஆயிரத்து 600 கோடி டொலர். இந்தச் செய்தி அதிர்ச்சியைத் தருகின்றது. இது தொடர்ந்தால் ஐ.நா. என்ன ஆண்டவன் வந்தாலே உலகைக் காப்பாற்ற முடியாது.

## சிறுவர் உரிமை

பட்டினிச் சாவு தவிர்க்கப்படும்போது ஓரளவுக்கேனும் சிறுவர்களின் நலனும் அதனால் பாதுகாக்கப்படும் என்பது உண்மை. இன்று உலகில் சிறுவர்களும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். வயதுகுறைந்த சிறுவர்களை வீட்டு வேலைக்கு அமர்த்துதல், பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல் ஆபத்தான தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்துதல் போன்ற இன்னோரன்ன நடவடிக்கையினால் இளம் பராயத்தினர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் ஏட்டின் 2005 ஆம் ஆண்டு சித்திரை, வைகாசி இதழில் கலாநிதி சோமாஸ்கந்தன் குறிப்பிட்ட சில தரவுகளின்படி அமெரிக்காவின் தனியார்துறை ஆய்வு நிறுவனம் புறுக்கிங்ஸ் அமைப்பின் (Brookings Institution) அரசியல் விஞ்ஞான பேராசிரியராக இருக்கும் பி.டபிள்யூ.சிங்கர் சிறுவர்கள் ஏன் போருக்குச் செல்கிறார்கள் என்ற நூலினை எழுதி வெளியிட்டார்.



அதில் உலகில் நடக்கும் எல்லா யுத்தங்களிலும் 18 வயதிற்குக் குறைந்த சிறுவர்களே போரிடுகின்றனர். இது சர்வ சாதாரணமாகி விட்டது என்று அவர் குறிப்பிடுகிறார்.

சிறுவர்கள் பங்கேற்கும் யுத்தம் புத்தம் புதியதோர் போரியல் கோட்பாடாக ஏற்கவேண்டிய நிலை வளர்ச்சி கண்டுள்ளது. கொலம்பியாவில் அரசபடைகளிலும் கிளர்ச்சியாளர்களிலும் 8 வயது வரையான சிறுவர்களைப் படையில் இணைத்துள்ளனர்.

இந்தியாவில் 20 மில்லியன் சிறுவர்கள் தொழிற்சாலைகளில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்கு இந்திய நீதிமன்றம் தடைவிதித்தபோதும் அது தொடர்கின்றது. பாகிஸ்தானில் கால்பந்து தயாரிக்கும் தொழிற்சாலைகளில் சிறுவர்கள் பல ஆயிரம் பேர் உள்ளனர் என்ற தரவு கள் அதில் உள்ளன.

## யுனிசெவ் அறிக்கை

இவைதவிர, யுனிசெவ்வின் அறிக்கைப்படி உலகம் முழுவதிலும் எத்தனை சிறுவர்கள் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர் என்ற தரவுகளை திரட்ட முடியாதிருப்பதாகத் தெரிவிக்கின்றது.

சரியான நோய்த் தடுப்பு வசதி இல்லாமல் உலகில் வருடம் ஒன்றுக்கு 22 லட்சம் சிறுவர்கள் இறக்கின்றனர். ஆபிரிக்க கண்டத்தில் தென்பகுதியில் மட்டும் 60 லட்சம் சிறுவர்களும் 5 லட்சத்து 29 ஆயிரம் தாய்மாரும் தவிர்க்கக்கூடிய நோய்களினால் இறக்கின்றனர் போன்ற தரவுகள் யுனிசெவ் இன் அறிக்கையில் ஆச்சரியப்பட வைக்கின்றது.

மனித உரிமைகளின் ஆரம்பம் சிறுவர் உரிமைகளில் இருந்தே தொடங்குகின்றது என்ற Unicef இன் கூற்றோடு உலகில் ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சத்திற்கும் சேர்த்து சர்வதேசம் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். அப்போது தான் ஐ.நா. முன்னெடுக்கும் திட்டங்கள் சாத்தியமாகும்.

உலகில் 87 கோடிக்கும் கூடுதலானோர் கல்வியறிவில்லாமல் இருக்கின்றனர். பாடசாலை வசதி ஓரளவுக்கேனும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. உலகம் முழுவதும் 10 கோடி சிறுவர்கள் பள்ளிக்குச் செல்வதில்லை.

ஐ.நா. தனது தார்மீகக்கட்டுப்பாட்டுடன் செயற்பட அனைத்து நாடுகளும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். தற்போதைய புள்ளி விவரங்களை எடுத்துநோக்கினால் ஐ.நா. தனது தார்மீக செயற்பாடுகளில் வெற்றியீட்டியுள்ளது என்று கூறமுடியாது. போருக்குச் செலவிடும் தொகை யிலும் பார்க்க மிகக் குறைந்த தொகையே உணவுப் பஞ் சத்தைத் தீர்க்க உதவுகிறது. உணவுப் பஞ்சம் தீரும் போது தான்பிற பிரச்சினைகள் தீரும். எல்லாவற்றுக்கும் மூலாதா ரமான உணவுப் பிரச்சினை 2015ஆம் ஆண்டளவில் அரை வாசியாகவாவது குறை படுமா என்பது பொறுத்தி ருந்துதான் பார்க்கவேண்டும்.

**சி.கேசவன்**

# வவுனியா வடக்கில் சுகாதாரச் செயற்பாடுகள் சீர்பெறுவதற்கு வகை வேண்டும்!

**1999** ஆம் ஆண்டு ஓயாத அலைகள் III நடவடிக்கையால் தமிழீழ விடுதலைப் புலிகளால் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து கைப்பற்றப்பட்டதன் பின்னர் வவுனியா வடக் கில் மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்தனர். தற்போது வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 15 ஆயிரம் பேர்வரை வாழ்கின்றனர்.

இப்பகுதியில் 2002 ஆம் ஆண்டு மூன்று குடும்பநல உத்தியோகத்தர்களையும், இரண்டு பொதுச் சுகாதார பரிசோதகர்களையும் ஓர் அலுவலக உதவியாளரையும் கொண்டு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலா நிதி சத்தியலிங்கம் தலைமையில் இயங்கிக் கொண்டிருந்தது.

சில காலத்தின் பின்னர் வைத்திய கலாநிதி சத்தியலிங்கம் வவுனியா பொது மருத்துவமனைக்கு இடமாற்றம் பெற்று சென்றுவிட்டார். அதனைத் தொடர்ந்து அவர் (தற்காலிகமாக) பதில் சுகாதாரவைத்திய அதிகாரியாக சிலகாலம் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

பின்னர் வைத்திய கலாநிதி சி.விக்கினேஸ்வரன் 2003 இறுதிப் பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டு பணியாற்றிக்கொண்டிருந்தார்.

2004ஆம் ஆண்டு ஆரம்பத்தில் குடும்பநல உத்தியோகத்தரில் ஒருவர் திருமணத்திற்காக தற்காலிகமாகவென ஆறு மாதகாலத்திற்கு தனது சொந்தப் பகுதியான கிழக்கு மாகாணத்திற்குச் சென்றுவிட்டார். 2004 மார்கழியில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னர் மற்றுமொரு குடும்ப நல உத்தியோகத்தர் அதனைக் காரணம் காட்டி ஆறுமாத காலத்திற்கென தற்காலிக இட மாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். மிகுதியாகவிருந்த ஒரே ஒரு குடும்பநல உத்தியோகத் தரும் நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனையின் பிரசவ விடுதிக்குக் கடமைக்காக அனுப்பப்பட்டுள்ளார்.

இவ்வாறு மாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு குடும்பநல உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக எவரும் மீள இதுவரை நியமிக்கப்படவில்லை. அத்தடன் நெடுங்கேணி சுற்றயல் கூறு மருத்துவமனைக்கு பிரசவ விடுதியில் பணியாற்றிக் கொண்டிருப்பவருக்குப் பதிலாகவும் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

2004 ஆரம்பத்திலும் 2005 ஆரம்பத்திலும் மாற்றம் பெற்றுச் சென்ற குடும்பநல உத்தியோகத்தர்களை அவர்களது பணிக்கு வவுனியா வடக்கிற்கு அனுப்புமாறு வவுனியா பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனையால் திருகோணமலையிலுள்ள மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்குப் பலதடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டும். இதுவரை குறித்த இருவரையும் பணிக்கு அனுப்பவில்லையென வவுனியா சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனையினர் தெரிவிக்கின்றனர்.

**வன்னிமடல்**

## பணிமனைகள் இல்லை

வவுனியா வடக்குச் சுகாதார வைத்திய அதிகாரி விடுதி ஒன்று உள்ளூர் அரசசார்பு நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது.

இதுவரை இக்கட்டடத்தில் வவுனியா வடக்குச் சுகாதாரத் திணைக்களம் செயற்படவில்லை. இதில் பணியாற்றுவோர் அனைவரும் (சுகாதார வைத்திய அதிகாரி உட்பட) வவுனியா சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனையிலேயே பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

வவுனியா வடக்கில் கனகராயன்குளம், நெடுங்கேணி ஆகிய பகுதிகளின் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கான பணிமனைகளும் இதுவரை திறக்கப்படவில்லை.

## தற்போதைய நிலை

பணி ஓய்வுபெற்று மீண்டும் ஒருவருடகாலம் மீள் நியமனம் பெற்ற ஒரு குடும்பநல உத்தியோகத்தரை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலிருந்து எடுத்து வாகனத்தில் நடமாடும் சேவைபோன்று காலை 11 மணியிருந்து 1.30 மணிக்குள் தாய்சேய்நல கிசிச்சையை மட்டும் மாதத்தில் 12 நாள்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

ஒரு குடும்பநல உத்தியோகத்தரால் அதுவும் மீள் நியமனம் பெற்ற ஒருவரால் தனியாக நூற்றுக்கு மேற்பட்டோரை தாய் சேய் கவனிப்பு சிகிச்சை அளிப்பதென்பது இயலாத காரியமாகும். இந்த நிலையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இருவரும் இணைந்து குடும்பநல உத்தியோகத்தருக்கு உதவியாகப் பணிசெய்யவேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. வீடு வீடாகச் சென்று தாய் சேய் உட்பட ஒவ்வொரு குடும்பங்களின் சுகாதார மேம்பாட்டை மேற்கொண்டு தனிமனித சுகாதாரத்தையும் உறுதிப்படுத்த வேண்டியது கட்டாய பணியாக குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு உள்ளது.

இந்நிலையில் தாய், சேய் குடும்பங்களின் சுகாதாரத்தை உறுதிப்படுத்தி ஆரோக்கியமான பணிகளை யார் மேற்கொள்வதென கேள்வி எழுப்பப்படுகிறது.

முழுமையாகக் கட்டிமுடிக்கப்பட்டு இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையாக இயங்கவென திறக்கப்பட்ட விடுதிக் கட்டடத்தில் சுகாதாரத் திணைக்கள செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளாமலுள்ள போதும் வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கான புதிய கட்டடம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு 95 வீதமான பணி பூர்த்தியடைந்துள்ளது. இப்பணியும் முழுமையாக இவ்வருடத்துக்குள் நிறைவடைந்துவிடும்.

**காண்டீபன்**

வவுனியாவில் ஓரளவு திருப்திகரமான பணியை மேற்கொண்டுவரும் சுகாதாரத் திணைக்களத்தினர் வவுனியா வடக்குப் பகுதியை மட்டும் ஏன் புறக்கணிக்கின்றனர் என்று மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

*

DEZA DDC DSC SDC COSUDE

# VACANCY

## Receptionist (01 position)

SDC-Swiss Agency for Development and Cooperation is a government organization of the Swiss Ministry of Foreign Affairs. We are looking for a person with the following requirements.

- G.C.E. A/L with 3 Passes
- Excellent command of English
- Efficient communication skills, courteous mannerism
- Possess computer literacy
- A minimum of one year experience in the same field

Age - Below 30 years
Duty Station - Field Office, Jaffna
Duration - Initial appointment will be for one year with a possibility of extension
Remuneration - Negotiable

**Women are encouraged to apply**

Please send the letter of application with a complete CV to **SDC Field Office, 521/11, Point Pedro Road, Nallur, Jaffna** on or before the 23rd November 2005.

(42572)

# பால்நிலை சமத்துவ பயிற்சி வகுப்புகள்

செம்பியன்பற்று, நவ.13

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட உழைக்கும் நிறுவனம் பால்நிலை சமத்துவ பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றது.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில்உள்ள ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, போக்கறுப்பு, கல்லாறு ஆகிய இடங்களிலேயே இந்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. (எ-36-203)

# திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம், நவ.13

அகில இலங்கை திருமுறை மன்றத்தினால் மாதம் ஒரு கோயில் என்ற அடிப் படையில் இடம்பெற்றுவரும் பன்னிரு திருமுறை முற்றோதல் இம்முறை காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணி தொடக்கம் எட்டாம் திருமுறை முற்றோதல் நடைபெறும். (எ-203)

## வெள்ளம் பாதித்த 362 பேருக்கு சண்டிலிப்பாயில் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு, நவ.13

கடந்த ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட தொடர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வலி.தென்மேற்கு(சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 362 குடும்பங்களுக்கு சமூகசேவை திணைக்களத்தினால் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள சமூகசேவை அமைச்சு வெள்ளத்தினால் இப்பிரதேச செயலகப் பிரிவில் பாதிப்படைந்தவர்களுக்கு வழங்குவதற்கென 30 இலட்சம் ரூபாவை யாழ்.மாவட்ட செயலகம் ஊடாக அண்மையில் அனுப்பி வைத்திருந்தது.

கடந்தவாரம் இதற்கான கொடுப்பனவு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டதாக பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வே.அருந்தவராசா தெரிவித்தார். (எ-135)

The 54th Annual Festival
Of
**Carol Singing**
By
The Youth of the North
at
The Peto Memorial Hall
St.John's College, Jaffna
on
Tuesday 15th November 2005
at 10.00a.m
**Admission By Programme Rs 15/=**



## சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் (ஆயுள் பகுதி)

யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாணம், தீவுப்பகுதி பிரதேசத்திற்கான பதவி வெற்றிடம்**

I. *விற்பனை ஆலோசகர்*
II. *விற்பனை மேற்பார்வையாளர்*

*தகைமைகள் :* **G.C.E. (A/L)**

அத்துடன், காப்புறுதித்துறையில் மற்றும் ஏனைய விற்பனைத்துறைகளில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ்ப்பாணம், தீவுப்பகுதிப் பிரதேசத்தில் இருந்துவரும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வேறு பிரதேசங்களிலிருந்துவரும், விண்ணப் பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**விண்ணப்பங்கள் யாவும் 21.11.2005 இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

முகாமையாளர்
**(JF 0101 UNIT)**
சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்.
(ஆயுள்பகுதி)
560,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
**E-Mail.ambikaikumar@ sltnet.lk**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

(42647)



மண்ணில் - 01-10-1988
விண்ணில் - 13-11-2004

இறைவா..! எங்கள் ஜீவனுக்கு நித்திய இளைப்பாறுதலைக் கொடுத்தருளும்

எங்கள் செல்லமகன் ஜீவனே! உம்மைப் பிரிந்து ஓராண்டாகியும் அம்மா, அக்கா, அண்ணன்மார், தங்கையவள், உற்றார், உறவினர், நண்பர்அனைவரும் உன்னைப் பிரிந்து அழுகின்றனர்.

உன் ஆத்மசாந்திக்காகக் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அந்தோனிப்பிள்ளை ஜெகஜீவன்**
(மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன்)

- தந்தை -
கனகசபை வீதி, மானிப்பாய்.

## யாழ். Y.M.C.A சிற்றுண்டிச்சாலை

2006ஆம் ஆண்டிற்கான
(01.01.2006 - 31.12.2006)

### கேள்வி கோரிக்கை

யாழ். Y.M.C.A சிற்றுண்டிச்சாலையைக் குத்தகைக்கு கொடுக்க கேள்வி கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளது.

முடிவு திகதி : 30.11.2005

கோரிக்கைகள் அனுப்பவேண்டிய முகவரி:
- பொதுச்செயலாளர், Y.M.C.A. JAFFNA
109,கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

பொதுச்செயலாளர்

(C/46176)


**Panasonic**
ideas for life

# நீர் இறைக்கும் இயந்திரம்

விசேஷ அம்சங்கள்
- சக்திவாய்ந்ததும், பாவனை கூடியதும்
- சத்தம் குறைந்ததும், சக்தி சேமிப்பும்
- வேகம் கூடியது
- பாவனைக்கு இலகுவானது
- வெப்பத்தை தாங்கக்கூடியது



*Model GP-200JA

| | |
|---|---|
| இயந்திரவலு | 200W |
| வெளிப்பாய்ச்சல் வலு | 45 liter/min (Max) |
| உயர வலு | 35 meters (Max) |

*Model GP-125JB

| | |
|---|---|
| இயந்திரவலு | 125W |
| வெளிப்பாய்ச்சல் வலு | 30 liter/min (Max) |
| உயர வலு | 30 meters (Max) |

*Model A-200JAE
*(Auto pressure pump)*

| | |
|---|---|
| இயந்திரவலு | 200W |
| அதிகபட்ச வெளிப்பாய்ச்சல் வலு | Max 45 L/min |
| உயர வலு | Ht12m 29 L/min |
| அழுத்த ஆளியுடன் | Max 19 meter |
| அழுத்த ஆளிஇன்றி | Max 35 meters |
| | ON 1.1kgf/cm2 |
| | OFF 1.8 kgf/cm2 |

ஏகவிநியோகஸ்தர்கள்
CAPRICORN®

* ஒரு வருட உத்தரவாதம்
(தயாரிப்பாளர் குறைபாட்டிற்கு மாத்திரம்)
* உத்தரவாதப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும்

## கப்ரிகோன் என்ரபிரைசஸ் பிரைவேட் லிமிட்டட்

காட்சி அறை அலுவலகம்:
வெள்ளவத்தை காட்சி அறை : 298 A & B காலி வீதி வெள்ளவத்தை தொலைபேசி: 2582154, 2360919
புறக்கோட்டை காட்சி அறை : 59, மெலிபன் வீதி கொழும்பு 11 தொலைபேசி: 4737443
காலி காட்சி அறை : 04 வாட் வீதி காலி தொலைபேசி: 091-2234104
தலைமை அலுவலகம் 47, டெம்பிளர்ஸ் வீதி கல்கிசை தொலைபேசி: 2735584, 2714631
பெக்ஸ் : 2735586 மின் அஞ்சல் : capricol@sltnet.lk

- நாடளாவிய ரீதியிலான விநியோகம் -


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
01
06
1938



விண்ணில்
14
10
2005

## அமரர் வேலுப்பிள்ளை வீரவாகு

திதி :13.11.2005

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
உள்ளத்தின் தியாக தீபமே!
மாதம் ஒன்று என்ன பலநூறு ஆனாலும்
எம் இதயத் தெய்வத்தை என்றுமே
எம்மால் மறக்க முடியாது!
உங்கள் ஆத்மசாந்திக்காக
ஆண்டவனை அர்ச்சிக்கின்றோம்.
ஓம் சாந்தி.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.*
(42628)
-குடும்பத்தினர்.

# சீனத் தலைவர் ஹூ ஜின்டா ஓவுக்கு பிரிட்டனில் அமோக வரவேற்பு

மக்கள் சீனக் குடியரசின் அதிபர் ஹூ ஜின்டா ஓ தமது ஐரோப்பிய ராஜீய பயணத்தின் முதல் கட்டமாக லண்டன் நகர் சென்றடைந்தபோது அவர் எதிர்பார்த்தாரோ இல்லையோ ஒருபக்கம் அரச மரியாதைகள் அபாரமாக இருந்த அதேவேளை, சீன அரசினால் பாதிக்கப்பட்ட மற்றும் அதன் கொள்கைகளுக்கு மாறானவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கும் குறைவிருக்கவில்லை.

ஒரு நாட்டின் மிக உயர்ந்த அரச தலைவர்களுக்கு வழங்கப்படவேண்டிய சகல மரியாதைகளுடனும் சீனத் தலைவர் வரவேற்கப்பட்டார். பிரிட்டிஷ் இரண்டாவது எலிசபெத் மகாராணியாரே சீன அதிபரை நேரில் வரவேற்று, சம்பிரதாயபூர்வமாகத் தமது குதிரை வண்டியில் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்.

பிரிட்டனில் அரசியல் எதிர்க்கருத்துகளுக்கு எவ்வாறு இடமளிக்கப்படுகிறது என்றவகையில் இந்தப் பிரயாணத்தின்போது அறிந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு சீனத் தலைவருக்குக் கிடைத்திருக்கும் என்று கருதப்படுகின்றது.

அதிபர் ஜின்டா ஓ குதிரை வண்டியில் மகாராணியுடன் பிரயாணம் செய்யும்போது வழி நெடுகிலும் அவருக்கு எதிராகக் கொடிகளை அசைத்தும், கூச்சலிட்டும் எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள். அதே சமயம் சீனத் தேசியக் கொடிகளை அசைத்தபடி அவருக்கு ஆரவாரத்துடன் வரவேற்பு கூறுபவர்களும் வந்திருக்கவே செய்தார்கள்.

அதிபர் ஜின்டா ஓ அமர்ந்திருந்த பக்கமாகத் தெருவில் வரவேற்புக் கூறும் ஆதரவாளர்கள் காணப்பட்ட அதேவேளை மகாராணியின் பக்கத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் காணப்பட்டனர். இருவர் முகங்களிலும் புன்னகைக்குக் குறைவே இருக்கவில்லை.

இங்கிலாந்திலும் வேறு ஐரோப்பிய நாடுகளிலுமுள்ள சீன மாணவர்களும் வர்த்தகர்களுமே அதிபரைச் சீனக் கொடிகளை அசைத்து வரவேற்புக் கூறியவர்களில் காணப்பட்டனர். எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் சகல தரப்புகளையும் சேர்ந்தவர்களாய் இருந்தனர். நீளமாகத் தலைமயிர் வளர்த்தவர்களும் பெரிய கைக்குட்டைகளைத் தலையில் அணிந்தவர்களும் காணப்பட்டனர். சீனாவின் மனித உரிமை மீறல்களையும் அயல் நாடுகளின் மீது ஆக்கிரமிப்புச் செய்யும் மனப்பான்மை கொண்டிருப்பதாகவும் அவர்கள் கண்டித்தனர்.

சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் ஆதரவாளர்களுக்குமிடையில் பெரும்



லண்டன் பக்கிங்ஹாம் மாளிகையில் மகாராணி எலிஸபெத், கணவர் எடின்பரோ கோமகன் ஆகியோருடன் சீனத் தலைவர் ஹூ ஜின்டா ஓ மற்றும் பாரியார் லியு யொங்குயில் காணப்படுகின்றனர்.

மோதல்கள் ஏற்பட்டுவிடுமோ என்ற அளவுக்கு நிலைமை இருந்தது. தடுப்பு அமைப்புகளுக்குள் இருந்தபடி ஒரு தரப்பு மற்றத் தரப்பை முஷ்டிகளைக் காட்டி எச்சரிப்பதும் அச்சுறுத்துவதுமாகக் காணப்பட்டனர். ஒரு கட்டத்தில் ஹூ ஆதரவாளர் ஒருவர் எதிர்த் தரப்புக்குள் நுழைந்து மோதலில் ஈடுபடவிருந்த சமயம் அதிகாரிகளால் அப்புறப்படுத்தப்பட்டார். இல்லையெனில் எதிர்க் கோஷ்டியினரால் நசுக்கிக் கொல்லப்பட்டிருப்பார்.

தாய்வான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 31 வயது டாக்டர் யயிட் லீ என்ற விரிவுரையாளர் பின்வருமாறு கூறினார். ''தன் நாட்டு மக்களின் மனித உரிமைகளை நசுக்கிவிட்ட ஒரு மனிதரை வரவேற்பதன் மூலம் பிரிட்டன் தன்னைத் தாழ்த்திக்கொண்டுவிட்டது'' திபெத் மீது இராணுவ ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட ஒரு மனிதருக்குத் தாய்வான் மீது இராணுவ நடவடிக்கையை ஆதரிக்கும் ஒரு மனிதருக்கு 21 தடவை பீரங்கிகளை முழக்கி வரவேற்பளித்திருப்பது பிரிட்டனுக்கு அவமானம் என்றார் அவர்.

எதிர்த்தரப்பில் சீனத்தலைவருக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் தலைக்கு 5 டொலர் வீதம் லஞ்சம் கொடுத்து ஏற்றி இறக்கப்பட்டவர்கள் என்று அவர் கிண்டல் செய்தார்.

திபெத்திய மதகுருவான 31 வயது தாஷி என்பவர் சீன அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பியமைக்காகச் சீனச் சிறையில் இரண்டு வருடங்கள் துன்புற்றதாகவும் பின்னர் பிரிட்டனுக்குத் தப்பிவந்ததாகவும் கூறினார்.

சீன அதிபருக்கு ராஜாங்க வரவேற்பு கொடுக்கப்பட்டதை அவர் ஆட்சேபித்தார்.

## ஆதரித்தும் எதிர்த்தும் சீனக் குழுக்கள் மோதல்

இதனால் உலக மக்கள் அந்த அரசுக்கு அங்கீகாரம் வழங்கியதாகிவிடும் என்று கூறினார். சீன அதிபர் மூன்று ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொள்வதற்காகக் கடந்த 8ஆம் திகதி லண்டன் வந்தார். முதலில் அவர் பிரிட்டிஷ் பிரதமரும் ஐரோப்பிய யூனியனின் தற்போதைய தலைவருமான ரொனி பிளேயருடன் ஆலோசனைகள் நடத்துவார். சீனா மீது ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்டுவரும் 16 ஆண்டுகாலப் பொருளாதாரத்தடை மற்றும் வர்த்தகப் பிரச்சினைகள் பற்றி ஜின்டா ஓ ஐரோப்பிய தலைவர்களுடன் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பிரிட்டிஷ் பிரதமருடன் ஆலோசனை கலந்ததன் பின்னர் சீன அதிபர் ஜேர்மனி மற்றும் ஸ்பெயின் நாடுகளுக்குச் செல்லவிருக்கிறார்.

* * *

### கியூபா மீதான் 41 வருட காலப் பொருளாதாரத் தடை

கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள

## கொமன்ஸ் சபையில் பிளேயருக்கு ஏற்பட்ட அதிர்ச்சித் தோல்வி

தடையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் எனக் கோரி ஐ.நா. பொதுச் சபை மீண்டும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இவ்வாறு பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றியிருப்பது இது 16ஆவது முறையாகும். கியூபா மீது வர்த்தக, பொருளாதார மற்றும் நிதித்தடைகளைக் கடந்த 41 வருட காலமாக அமெரிக்கா மேற்கொண்டுவருகின்றது.

பொதுச்சபையில் கியூபாவால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் 182 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. நான்கு நாடுகள் எதிராக வாக்களித்ததுடன் ஒரு நாடு வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இஸ்ரேல், மார்ஷல் தீவுகள், பாலாஷ மற்றும் அமெரிக்கா ஆகியவை எதிர்த்து வாக்களித்தன.

தீர்மானத்தைச் சமர்ப்பித்து கியூபா வெளிநாட்டமைச்சர் பிலிப்டே பெரெஸ் ரொக்கு பேசுகையில் பின்வருமாறு தெரிவித்தார்:-

பல பத்தாண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தத் தடை கடந்த 18 மாதங்களில் போன்று மிகக் கடுமையாக அமுல் நடத் தப்படவில்லை. இதன் விளைவாக அமெரிக்காவில் ஒருவர் கியூபா சுருட்டொன்றைப் புகைக்கக்கூட முடியாமல் தடுக்கப்பட்டுள்ளார். வெளிநாட்டுக்குப் போகும் போதும் கூட இத்தடை இருந்து வருகின்றது. இம்மாதிரியான பைத்தியக்காரத்தனம் கின்னஸ் புத்தகத்தில் பதியப்படவேண்டும் என்று கூறினார்.

இப்பொருளாதாரத் தடையைத் தொடர்வதானது, கியூபா மீதான உலக அளவில் நடத்தப் படும் ஒரு போராகவே இருந்து வருகின்றது என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கப் பிரதிநிதி ஜோன் போல்டனின் ஆலோசகர் றொனால்ட் கொடார்ட் பேசும்போது, கியூபா மீதான அமெரிக்க பொருளாதாரத்தடை இரு தரப்பிலானது. இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள விடயம். அது பொதுச் சபை விவாதத்திற்கு வந்திருக்கவே கூடாது - என்றார்.

* * *

### வட கொரிய அணு ஆயுதம்

வடகொரியாவின் அணு ஆயுதங்கள் தொடர்பான பேச்சுக்களில் அமெரிக்கா மிக உறுதியான ஒரு நிலைப்பாட்டையே மேற்கொள்ளவிருக்கிறது. வடகொரியா ஏதாகிலும் அணுசக்தி உதவிகளைப் பெற்றுக் கொள்வதாய் இருந்தால் முதலில் அது தனது அணு ஆயுதத் தயாரிப்புத் திட்டத்தைக் கைவிட முன்வரவேண்டும் என்று அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

ஆயுதக் குறைப்புக் கண்காணிப்பாளர்களை எப்பொழுது அனுமதிப்பது, அவ்வாறு செய்யும்போது அதற்குப் பிரதி உபகாரமாகப் புதிய 'மென் - நீர்' அணு உலை உட்பட சன்மானங்களைப் பெற்றுக்கொள்ளுமா என்பது பற்றி இருநாடுகளுக்குமிடையில் இழுபறிநிலை இருந்து வருகின்றது.

வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் கருத்து வெளியிடுகையில், வட கொரியாவின் மனித உரிமை மீறல்கள் பற்றிய பதிவுகள் குறித்துக் கவலை தெரிவித்தார். ஆனால், ஆறு நாடுகள் பேச்சுகளின் போது தமது நாடு பொறுமையைக் கடைப்பிடிக்கும் என்று தெரிவித்தார். தங்களின் முக்கிய நோக்கமெல்லாம் வடகொரியாவின் அணு ஆயுத ஆசையை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதுதான் என்று வலியுறுத்தினார்.

மாநாடு ஆரம்பமாவதற்கு முன் அமெரிக்கக் குழுவின் பிரதான பேச்சாளர் பெய்ஜிங்கில் கருத்து வெளியிடுகையில்,

முதலில் அவர்கள் அணு ஆயுதத்தைக் கைவிடவேண்டும், அணு ஆயுதமற்ற கொரியத் தீபகற்பம் உருவாக வழிவிடவேண்டும். மீண்டும் அவர்கள் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்திற்குள் வரும்போது சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பின் பாதுகாப்புடன் பொருத்தமான ஒரு சமயத்தில் 'மென் - நீர்' அணு உலை பற்றிய விவாதத்தை நாம் ஆரம்பிக்கமுடியும். இது தெளிவாக அவர்களுக்கு விளக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

இதேசமயம் பேச்சுகளில் கலந்துகொள்ளும் வடகொரிய குழுவின் பிரதான பேச்சாளர் பெய்ஜிங்கில் கருத்து வெளியிடுகையில் எமது தரப்பில் நாம் நேர்மையான முயற்சிகளில் ஈடுபடுவோம். ஆனால், முன்னால் இருக்கும் வழி இன்னமும் தெளிவாக இல்லை என்றார்.

இம்முறை பேச்சுகளில் நாம் நேர்மையான முயற்சிகளில் ஈடுபடுவோம். கூட்டு அறிக்கையின் உணர்வைப் பூர்த்திசெய்ய முயற்சி செய்வோம். கடந்த முறை வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை நாம் மதிக்கின்றோம் என்று கூறினார்.

வடகொரியா, சீனா, அமெரிக்கா, ரஷ்யா, தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கலந்துகொள்ளும் வட கொரியாவின் அணு ஆயுதம் தொடர்பான மாநாடு கடந்த புதனன்று பெய்ஜிங்கில் ஆரம்பமாகியது.

* * *

### ஷெரோனின் புதிய கட்சி

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் தனது லிகுட் கட்சியிலிருந்து விலகிப் புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்க இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

வலதுசாரி லிகுட் கட்சியில் ஏரியல் ஷெரோனின் காஸாப் பிரதேசத்திலிருந்து இஸ்ரேலியர் வெளியேறும் திட்டத்திற்கு ஏற்பட்டிருக்கும் பெரும் எதிர்ப்பின் காரணமாகவே அக்கட்சியிலிருந்து அவர் வெளியேறுவது பற்றி ஆராய்ந்து வருவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கட்சியிலிருக்கும் கடும் போக்காளர்களைக் கட்சித் தலைவர்கள் கட்டுப்படுத்தி ஒழுங்குக்குக் கொண்டுவராவிட்டால் ஷெரோன் விலகி வேறுகட்சி ஆரம்பிப்பதைத் தவிர அவருக்கு வேறு வழியேதும் இல்லையென்று ஷெரோனுக்கு நெருங்கிய ஒருவர் தெரிவித்துள்ளார்.

## உலக வலம்

மேனா

* * *

### விசாரணை வெளிநாட்டில்



பூட்டான் மன்னர் வான்சுக்

### நடக்குமா?

முன்னாள் ஈராக்கிய சர்வாதிகாரி சதாம் ஹுசைனின் வழக்கு நியாயமாகவும் நேர்மையாகவும் நடைபெற்று முடியவேண்டுமானால் சதாமுக்காக வாதாடமுன்வந்திருக்கும் வழக்கறிஞர்களைக் காப்பாற்றவேண்டிய கட்டாயத்துக்குள் ஈராக்கிய - மற்றும் அமெரிக்க அதிகாரிகள் இருக்கிறார்கள். சதாம் ஹுசைனுக்காக வாதிடும் வழக்கறிஞர்கள் ஒருவருக்குப் பின் ஒருவராக இரண்டு பேர் சுட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். ஒருவர் ஏற்கனவே கொல்லப்பட்டிருந்த நிலையில் மேலும் ஒருவர் கடந்த செவ்வாயன்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சதாம் ஹுசைனுக்காக வாதிடும் அவரது சொந்த வழக்கறிஞர்கள் இந்த விசாரணையைப் பாதுகாப்பான வேறொரு நாட்டில் நடத்தவேண்டும் எனக் கோரியுள்ளார். தனது சகாக்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளித்து அவர்களைக் காப்பாற்ற ஈராக்கிய - அமெரிக்க அதிகாரிகள் தவறிவிட்டார்கள். என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த விடயத்தில் தலையிட்டு விசாரணைகள் நடத்தும்படி அவர் ஐ.நா.வைக் கேட்டுள்ளார்.

* * *

### அதிகாரத்தைக் கைவிடவிரும்பும் பூட்டான் மன்னர்

முற்றிலும் ஏகாதிபதியான ஓர் அரசர் ஜனநாயகத்தை மக்கள் மீது திணிப்பது ஜனநாயகமாகுமா?

இப்படி கேட்கிறார்கள் பூட்டானிய மக்கள்.

பூட்டானில் அரச ஏகாதிபத்தியத்துக்கு விடை கொடுத்து மக்கள் ஆட்சிக்கு வழி கோல அந்த நாட்டுமன்னர் ஜிக்மே சிங்யே வாங்சுக் முயற்சி செய்வதை விரும்பாத மக்கள் இவ்வாறு கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள் 30 வருடங்களுக்கு மேலாக மன்னர் ஆட்சி நடத்தியுள்ளார். மிகுந்த ஞானத்தோடும் கருணையோடும் அவரது ஆட்சி நடைபெற்றுள்ளது. அப்படி இருக்க அவர் ஏன் முடிதுறக்கவேண்டும் என்று மக்கள் கேட்கிறார்கள்.

ஆனால், மக்கள் அரசுதான் எதிர்காலத்துக்கு நல்லது. மக்களே தங்களை ஆளவேண்டும் என்று விரும்புகிறார் அரசர்.

ஸ்ரீ பாலடியாள் கருப்பண்ணை சுவாமிகள் துணை

## திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஐப்பசித் திங்கள் 27 ஆம் நாள் (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.42 மணிமுதல் 12.32 மணிவரையுள்ள மகர லக்கினமும் கூடிய சுபயோக சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி பாலகிருஷ்ணன் பரஞ்சோதி
தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்

**சதீஸ்குமார்**



திரு.திருமதி சதானந்தம் பரமேஸ்வரி
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி

**வடிவாம்பிகை**

ஆகிய இருவருக்கும் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, மேற்படி திருமணம் அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் மணிமண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு.திருமதி பாலகிருஷ்ணன் தம்பதிகள்,
பாலவனம், பெரியார் பகுதி, அல்வாய் கிழக்கு, அல்வாய்.
தொ.பே.0777-686759

(இரு வீட்டார் அழைப்பிதழ்)

திரு.திருமதி சதானந்தம் தம்பதிகள்
'அம்பிகா வாசா' பெரியார் பகுதி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

# மண்டைதீவுக்கு மின்சார வசதி ஏற்படுத்தித்தரக் கோரிக்கை

மண்டைதீவு, நவ.13

பதினாறு வருடங்களாகத் தடைப் பட்டுப்போயுள்ள மின்சார வசதியை மீண்டும் ஏற்படுத்தித் தருமாறு மண்டைதீவில் 1996 ஆம் ஆண்டின் பின்பு மீளக்குடியமர்ந்தவர்கள் எழுத்துமூலமாக மின்சாரசபையின் வேலணை அலுவலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீட்டு உரிமையாளர்கள், கோயில் தர்மகர்த்தாக்கள் பாடசாலைகளின் நிர்வாகிகள் ஆகியவர்கள் தமது தனித்தனியான விண்ணப்பங்களைத் தத்தமது பகுதிக் கிராம சேவையாளர்கள் ஊடாக வேலணை உதவி அரச அதிபருக்கு மேலதிக நடவடிக்கைக்காக அனுப்பிவைத்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் இருந்த 90 வீதத்திற்கு மேலான வீடுகள் யுத்தம் நடைபெற்ற காலத்திலும் அதன்பின்பும் அழிக்கப்பட்டன. மீளக்குடியமர்ந்தவர்கள் இரவல் வீடுகளிலும் குடிசைகளிலும் குடியமர்ந்ததால் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டவில்லை.

ஆனால், தற்பொழுது 110 அரை நிரந்தர வீடுகள் அரசசார்பற்ற நிறுவனங்களால் அமைத்து வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பல நிரந்தர வீடுகளும் கட்டியமைக்கப்பட்டு வருகின்றன.

மண்டைதீவு மகாவித்தியாலயத்திற்கு அந்தப் பாடசாலையின் பழைய மாணவர்களால் வழங்கப்பட்ட கணனிகள் மின்பிறப்பாக்கிகளின் உதவியுடனேயே இயங்கிவருகின்றன. இங்குள்ள பாடசாலை மாணவர்கள் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு மூன்று வருடங்கள் முடிவடைந்தபின்பும் குப்பிவிளக்குகளிலேயே தமது கல்வியைத் தொடரும் பரிதாப நிலையில் உள்ளனர்.

(ஒ-88)

## பிறந்தநாள் வாழ்த்து



60 ஆவது

53 ஆவது

**சி.சிவராசா சி.தங்கராணி**

இன்று 13-11-2005 இல் தமது பிறந்தநாளைக் கொண்டாடும் தம்பதியினரை அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் அருளினால் நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

இல.29/4, புகையிரத நிலைய வீதி,
புங்கங்குளம், அரியாலை.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/46185)(50-14)



## தற்பொழுது வவுனியா மாநகரில்....

வலதுகுறைந்தோர், ஊனமுற்றோர்களுக்கான ஊன்றுகோல்கள் (Walking Stick), கிரட்சஸ (Crutches), முழங்கை கிரட்சஸ் (Elbow Crutches), BedPan, Urinal, Walking Frame, Wheel Chair நாற்காலி, Tricycle ஆகியவை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயவிலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

**ASHRAFF CO.**

இல.30, தர்மலிங்கம்வீதி, வவுனியா.
T.P:024 2222383.

(46039)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**ரோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் ரோயல் குளுக்கோஸ்தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:-
ROYAL INDUSTRIES
COLOMBO 12
☎:0777-277670





ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567

(C-43109)

## மறையாசிரியர் தேர்வு

யாழ்ப்பாணம், நவ.13

தேசிய ரீதியிலான கத்தோலிக்க மறையாசிரியர் தேசியத் தேர்வு அடுத்த மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், இளவாலை, பருத்தித்துறை, கிளிநொச்சி, முழங்காவில், முல்லைத்தீவு ஆகிய மறைக் கோட்டங்களில் அன்றைய தினம் பரீட்சை நடைபெறுமென யாழ். மறைக் கல்விநிலைய இணைப்பாளர் யோன் மௌலிஸ் தெரிவித்தார்.

(ஓ-202)

## மலேசியாவில் வேலைவாய்ப்பு

மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் 1½ மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை | வயதெல்லை |
|---|---|---|
| கட்டடக் கூலி ஆள்கள் | 500 | 20-45 |
| மேசன்மார் | 200 | 20-45 |
| தச்சுவேலை செய்பவர் | 200 | 20-45 |
| கம்பி வளைப்பவர்கள் | 200 | 20-45 |
| சுத்திகரிப்பாளர் ஆண்/பெண் | 300 | 20-35 |
| வேலைத் தள உதவியாளர்கள் | 300 | 20-35 |
| ரெயிலர் | 60 | --- |
| எரிபொருள் நிரப்பு நிலையத்தில் | | |
| எரிபொருள் நிரப்புபவர் | 400 | --- |
| வாகனம் கழுவுபவர்கள் | 200 | --- |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்:
சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுச்சீட்டு
பாஸ்போட் அளவு படம் 15 (கலர்)
வீட்டுப் பணிப்பெண்கள் 200 பேர்
வயதெல்லை 19-45

தொடர்பு: 0777 279813
மைக்கல்

குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

(42384)(50)

# Welcome to the First Canadian campus in Sri Lanka

Cambrian College of Applied Arts and Technology

Cambrian College is the largest College of Applied Arts and Technology, in Northern Ontario, Canada.

## 2nd Intake

**We are Now in Canada**

**Subramaniam Thayananthan**



I'm happy to declare that my ambition to study in Canada has fulfilled through Governor's College.

**Prasad Rasika Mendis**



I have experienced true Canadian education from Governor's College before leaving to Canada for continuing my education.

**Courses Offered**

- HOTEL AND RESTAURANT MANAGEMENT
- TRAVEL AND TOURISM MANAGEMENT
- SOFTWARE ENGINEERING TECHNOLOGY
- BUSINESS ADMINISTRATION - ACCOUNTING

☑ Complete TWO semesters (one year) at Sri Lankan campus, and transfer to CANADA
☑ Free ESL course (English as a Second Language)
☑ Loan facilities on request
☑ Hostel Facilities

**Course fee can be paid monthly - Rs. 15,000/=**

FOR THE SECOND INTAKE
Contact : Niroshini / Kavitha
Hot Line : 0785 271 337



## GOVERNOR'S COLLEGE

"COLLEGE CAMPUS"
376, Galle Road, Colombo 03, Sri Lanka.
Tel : +94 11 2375371, +94 11 2375222 Fax : +94 11 2375374

E-mail : governors@sltnet.lk Website : cambrianc.on.ca

## கருத்தமர்வு

யாழ்., நவ.13

கரித்தாஸ் கியூடெக் யாழ். பிராந்திய குழுக்களுக்கான சமுகப் பகுப்பாய்வு பற்றிய கருத்தமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அரியாலை சென்யூட்ஸ் மண்டபத்தில் ஊக்குவிப்பாளர் டொறினா தலைமையில் இடம் பெறும்.

(ஒ-190)

## திருமலையில் நாளை தையல் கண்காட்சி

யாழ்.,நவ13

திருகோணமலை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் அலுவலகத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தைத்த ஆடைக் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளன.

(எ-203)

## வேலை வாய்ப்பு

டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் 520 வேலை வாய்ப்புகள் உள்ளன.

பயணம் 1 1/2 மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை |
|---|---|
| தச்சு வேலை செய்வோர் | 200 |
| கம்பி கட்டுபவர் | 50 |
| மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| மின்சார வேலையாள்கள் (வீட்டு மின் இணைப்பு) | 20 |
| வாகன மின்சாரவேலை செய்பவர் | 10 |
| பைப் பொருத்துபவர்கள் | 20 |
| ஸ்பிறே பெயின்ரர் / ரிங்கர் (வாகனம்) | 20 |
| பார வாகனம் ஓட்டுபவர்கள் | 20 |
| (ரவர் ரெயின், றேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்) | |
| கைற்றொனிக் மெக்கானிக் | 10 |

**கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்**


பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம் 05
குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.

தொடர்பு : மைக்கல்
0777 279813

குறிப்பு : முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

(42385)





விடுதலைப் புலிகளின் படையணிகளுக்கு இடையிலான கலை, இலக்கியப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் லெப். கேணல் ராஜன் கல்விப்பிரிவின் பொறுப்பாளர் இ.கீதன் தேசியக் கொடியேற்றுவதையும் சோதியா படையணிப் போராளி செல்வி மலர்மாலை சூட்டுவதையும் போராளிகள், பொறுப்பாளர்கள் அகவணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# புலிகள் படையணிகள் இடையே மாவீரர் நாள் போட்டிகள் ஆரம்பம்

கிளிநொச்சி,நவ.13

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் படையுணிகளுக்கிடையிலான கலை இலக்கியப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் இப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவின் கல்லூரியில் போராளி அகனழகன் தலைமையில் போட்டிகள் ஆரம்பமாகின.

நிகழ்வின் ஆரம்பத்தில் முதன்மைச் சுடரினை வடபோர்முனை கட்டளைப் பணியகத்தின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் ரமேஸ் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை லெப.கேணல ராஜன் கல்விப்பிரிவின் பொறுப்பாளர் இ.கீதன் ஏற்றிவைத்தார்.

மாவீரர்களின் பொது உருவப்படத்திற்கான ஈகச்சுடரினை லெப்.கேணல் ராஜன் கல்விப்பிரிவின் மகளிர் பொறுப்பாளர் ஜெயந்தி ஏற்றிவைத்தார். மலர் மாலையினை சோதியா படையணிப் போராளி செல்வி அணிவித்தார்.

தொடர்ந்து படையணிப் போராளிகளுக்கிடையிலான கலை இலக்கியப் போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இக் கலை இலக்கியப் போட்டிகள் தொடர்ந்து இடம்பெறவுள்ளன. (ஐ-12)

# பாலியல் துஷ்பிரயோகம் புரிந்த வெளிநாட்டவருக்கு குற்றப்பத்திரிகை

கொழும்பு,நவ.13

இரண்டு சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள வெளிநாட்டுப் பிரஜைக்கு எதிராக சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் மேல்நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வருடம் ஓகஸ்ட் இரண்டாம் திகதி முதல் செப்டெம்பர் 14 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் சிறுவர்கள் இருவரை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியமை தொடர்பில் இரண்டு குற்றங்கள் இந்த நபர் மீது சுமத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் 15 சாட்சியங்களும் இருக்கின்றன என சட்டமாஅதிபரின் குற்றப்பத்திரிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட இந்த நபரைக் கைதுசெய்யச் சென்றபோது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வைத்து மூன்று பேர் புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(க)

# குழந்தைகள் கௌரவிப்பு நிகழ்வு

வலி.தெற்கு,நவ.13

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு உடுவில் பிரதேச குழந்தைகள் தினத்தை முன்னிட்டு இப்பகுதியைச் சேர்ந்த முன்பள்ளிக் குழந்தைகள் கௌரவிப்பும் கலை விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உடுவில் பிரதேச மக்கள் கட்டமைப்பு முன்பள்ளிக் கழக கல்வி மேம்பாட்டு நிலையத்தைச் சேர்ந்த தி.அன்ரன் லீனஸ் தலைமையில் விழா நடைபெறும்.

இவ்விழாவில் முதன்மை விருந்தனராக தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்ப்பாண மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் கலந்து கொள்வார். (3-152)

# பேராசிரியரின் மனைவி,மகள் கொலை சந்தேகநபருக்கு மரணதண்டனை விதிப்பு!

கொழும்பு,நவ.12

பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசியர் நிமல் செனவிரட்ணவின் மனைவி மற்றும் மகள் ஆகியோரின் கொலைச்சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி டி. எவ். சி. லேக்கம் வசந்தவால், முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேக நபர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என அவர் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

2001 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி கண்டி இரண்டாவது ராஜசிங்க மாவத்தையில் அமைந்துள்ள பேராசிரியரின் வீட்டிலேயே இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக முன்னாள் பொலீஸ் கான்ஸ்டபிள் செனவிரட்ண தர்மபாலவிற்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# திருக்கோவிலில் கண்ணிவெடி மீட்பு

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பிரதேசத்தில் அதிசக்திவாய்ந்த கண்ணிவெடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

ஒலுவில் துறைமுகத்திற்கு என சுவீகரிக்கப்பட்ட காணி ஒன்றின் சொந்தக்காரருக்கு இழப்பீடாக வழங்கப்பட்ட காணி ஒன்றிலே இக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த காணியை துப்பரவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும்போதே இக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. குண்டை கண்டவர்கள் திருக்கோவில் சிறப்பு அதிரடிப்படைக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் குண்டுசெயலிழக்கும் படைப்பிரிவினரை வரவழைத்து குண்டை செயலிழக்கச் செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வரட்ணம் பூமணி



கோணவளை வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் பூமணி அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பிள்ளை-சரவணமுத்து தம்பதியரின் அன்பு மகளும் செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும் அருளானந்தபகவான், ராஜ்பகவான் (மாவீரர்-றொபின்), ஈவரபகவான் (ஹொலண்ட்), உருத்திரபகவான் (ஹொலண்ட்), பகவான், ஜெயபவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும் புஸ்பா, வசந்தி (ஹொலண்ட்), செல்வி (ஹொலண்ட்), சுகிர்தா, கணேஸ்வரன் (அப்பன் - பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் நல்லம்மா, காலஞ்சென்ற நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.2005) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோணவளை வீதி,*
*கொக்குவில்.*

(42639)(33-15-45-12)

**தகவல்:**
**செல்வரட்ணம்**
**(கணவன்).**

## ஞானப்பிரகாசம் பிலேந்திரராஜா ஜெயராசா (பொன்ராசா)



ஏழாலை மத்தியை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்ராசா அவர்கள் (11.11.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சந்திரகாந்தி (ஆசிரியை, யா/கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை) அன்புக் கணவரும் பொன்னுத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பொன்ராணி, ஆனந்தராணி (இந்தியா), யோகராணி, ஜெயராணி (ஜேர்மன்), அன்ரன் ஜெயரட்ணம்(ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சகுந்தலா, ஜெகதீஸ்வரி, ஜெயலட்சுமி, புஸ்பராணி, வரதராஜா, நந்தகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் ஏழாலை புனித இசிதோர் சேமக்காலையில் நாளை (14.11.2005) திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
***மனைவி சந்திரகாந்தி (ஆசிரியை),***
***சகோதரர்கள்.***

(42841)(33-15-45-12)










# மரண அறிவித்தல்கள்

## நாராயணபிள்ளை சுதந்திரராசா

(போமன் இ.போ.ச - காரைநகர்)



சிவன் கோயிலடி, சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை சுதந்திரராசா அவர்கள் நேற்று (12.11.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இ.போ.ச சாரதி தோழர் நாராயணபிள்ளை - அன்னம்மா தம்பதியரின் ஏகபுதல்வனும் கமலலோஜினியின் பாசமிகு கணவரும், இ.போ.ச பரிசோதகர் அமரர் சின்னத்துரை - செல்லக்கண்டு தம்பதியரின் மூத்த மருமகனும் திருமதி பரமேஸ்வரி கதிர்காமநாதனின் அன்பு சகோதரரும் புஸ்பமாலா, கிருஷ்ணமாலா(சுவிஸ்), ரஞ்சினி, சுதர்சன் (பொறிவலர் இ.போ.ச கோண்டாவில்) ஆகியோரின் அருமைத் தந்தையும் குகநாதன், உதயகுமார், ஜெயதீஸ்வரன்(துரை) ஆகியோரின் மாமனாரும் சபிதா, லபிஷா, கபிலாஷ் ஆகியோரின் அருமைப்பேரனும் லோகநாதன் (இ.போ.ச பயிற்சி ஆசிரியர் கோண்டாவில்), பத்மலோஜனி, சந்திரலோஜினி, மதிவதனி, யோகரஞ்சினி, தேவலோஜினி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***சிவன்கோயிலடி,***
***சித்தன்கேணி.***

(42838)(33-15-45-12)

***தகவல்:***
***மனைவி, மக்கள்,***
***மருமக்கள்***

## பற்றிக் இராஜேஸ்வரன் (றலீஸ்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட பற்றிக் இராஜேஸ்வரன் (றலீஸ்) அவர்கள் நேற்று (12.11.2005) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற லாவுஸ் ஜோசப் பற்றிக் (தம்பிநாயகம்) - ராணி தம்பதியரின் அருமை மகனும் மேரி அஞ்சலீனாவின் (பிறேமா) அன்புக் கணவரும், பாணுசா, றேணுசா (யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அருமைத் தகப்பனும் றோச்சஸ் (பிரான்ஸ்), றஜீமா, றங்கிஸ், காலஞ்சென்ற கொயன், றாஜி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெசிமா (பிரான்ஸ்), செல்வக்குமாரன் (பிரான்ஸ்), மல்லிகா, மாலினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பேபி (லண்டன்), பவாணி (கொழும்பு), ராசாத்தி (கொழும்பு), அன்ரன் (லண்டன்), ரெறன்ஸ் (பெல்ஜியம்), தயா(இத்தாலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுஜீவா, நிறோசன், றாயு, பிரதீபா, நிசானி, நிறோசா, சரண்ராஜ், பிரசாந், தர்சிக்கா, சோனியா, உசாந்தன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் செபினாகிறேஸ், டினாள்குளோறி, றெனாபியூலா, ஷீபா, றேக்கா, கோபி, கரன், ஜீவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.2005) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*14, ஐஸ்பிளாட் வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

(42840)(33-15-45-12)

*தகவல்:*
*குடும்பத்தினர்.*




கல்முனையில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 25ஆவது [illegible] ய மாநாட்டின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# மூவின மக்களும் இணைந்து காணும் தீர்வை நடைமுறைப்படுத்துவேன்!

## முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் ரணில் தெரிவிப்பு

அம்பாறை,நவ.13

இனப்பிரச்சினைக்கு தமிழ் - சிங்கள - முஸ்லிம் மக்களை ஒன்றிணைத்து தீர்வு ஒன்றைக் காணவேண்டும். அந்தத் தீர்வை மக்கள் முன்வைத்து சர்வஜனவாக்கெடுப்பு நடத்தி அதனைப் பின்னர் நடைமுறைப்படுத்துவேன்.

- இப்படிக் கூறினார் ஐ.தே.கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 24ஆவது தேசிய மாநாடு நேற்று கல்முனையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ரணில் இப்படிக் கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் பெரும் எண்ணிக்கையான முஸ்லிம்கள் கலந்துகொண்டனர்.

ரணில் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர். அவர்களது வாழ்வைச் சீராக்க வேண்டும். ஜனாதிபதியாகத் தெரிவாகும் பட்சத்தில் இந்த மக்களின் மறுவாழ்வுப்பணிகளுக்குப் பொறுப்பாக அதிகாரி ஒருவரை நியமிப்பேன். அந்த அதிகாரி மூலமாக அரச, அரசசார்பற்ற அமைப்புகளின் உதவியுடன் 365 நாள்களில் மக்கள் வாழ்வை பழைய நிலைக்கு கொண்டுவருவேன் - என்றார்.

இந்த மாநாட்டையடுத்து கல்முனையில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றிலும் ரணில் உரையாற்றினார். (ஐ-7-12)

## லொறி - ஓட்டோ விபத்தில் நால்வர் காயம்!

அரியாலை, கன்கரட்ணம் வீதிப் பகுதியில் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்ற லொறி - ஓட்டோ விபத்தில் ஓட்டோவில் பயணம் செய்த நால்வர் படுகாயமடைந்தனர்.

முள்ளி வீதி, அரியாலையைச் சேர்ந்தவர்களான ரி.ஜூட்(வயது20), வை.றூபன் (வயது 18), வை.ஒலிஸ்ஸன்(வயது21), ரி.திகிலன் (வயது21) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த நால்வரும் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-12-190)

# வாக்காளரது அடையாளங்களை உறுதிப்படுத்த முயற்சிப்பது வாக்களிக்கும் ஆர்வத்தை குறைக்கும்

## கண்காணிப்பாளர்கள் கருத்து

கொழும்பு,நவ.13

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள வாக்காளர்களின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று வழங்கப்பட்ட நிதிமன்றத் தீர்ப்பின் காரணமாக சில வாக்காளர்கள் வாக்களிப்பில் அக்கறைகாட்டமாட்டார்கள் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை அவசியமில்லை என்று கூறப்பட்ட போதிலும் வாக்காளர்கள் குறித்து சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் அதிகாரிகள் வாக்காளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த விசாரணைகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்திருந்தது. இதன்காரணமாக வாக்காளர்கள் தமது வாக்குகளைப் பதிவு செய்வதில் அதிக அக்கறைகொள்ளமாட்டார்கள் என்றும் - வாக்களிக்கும் நடவடிக்கைகளுக்கு கூடிய நேரத்தைச் செலவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் - ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-12)

# மதுபோதையில் பத்திரிகையாளரை மிரட்டியவருக்கு சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம், நவ.13

செய்தி சேகரிப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சண்டே ரைம்ஸ் பத்திரிகையாளர் குழுவினரை மிரட்டி அவர்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சித்தார் எனக் கூறப்படும் நபர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்திருக்கிறது.

கொழும்பில் வெளிவரும் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் செய்தியாளர்கள் இருவரும் படப்பிடிப்பாளரும் வேம்படிச் சந்தியில் உள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்துக்குக் கடந்தவாரம் சென்ற வேளை அங்கு மதுபோதையில் இருந்த நபர் ஒருவர் அவர்களைக் கடுமையாக ஏசி தாக்க முயன்றார் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பின்னர் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட அந்த நபர் யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

பத்திரிகையாளர்களைத் தாக்க முற்பட்டமை மற்றும் அவர்களை அவதூறாகப் பேசியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இந்த நபர்மீது சுமத்தப்பட்டன.

குற்றச்சாட்டுக்களை அவர் ஏற்றுக் கொண்டதை அடுத்து அவருக்கு ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ-3)

### பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படமாட்டார்கள். அவர்கள் முகமாலையில் அமையும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் வெளிக்கள உதவித் தெரிவத்தாட்சி அதிகாரிகளாகப் பணியாற்றுவர். அந்த வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாக சிரேஷ்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த அதிகாரிகள் பணியாற்றுவர்.

தேர்தல் முடிந்த பின் யாழ்.செயலகத்தில் வாக்கு எண்ணும் பணி இடம்பெறும். அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படும் பட்சத்தில், அது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்து அவரது உத்தரவு கிடைத்த பின்பே வாக்குகள் எண்ணப்படும். அவரது உத்தரவு கிடைக்காத பட்சத்தில் மீள வாக்களிப்பை 19 ஆம் திகதி நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3-7-8)

### நேரடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொறகொடவும் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினர்.

இரு பிரதான வேட்பாளர்களினதும் விவாதத்தைநடத்துவதற்கு நேரகாலம் போதாமை காரணமாக அதனைக் கைவிடுவதென இச் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-3)

## உழவு இயந்திரத்தின் பெட்டி கழன்றதில் இருவர் படுகாயம்!

விறகு ஏற்றிவந்த உழவு இயந்திரத்தின் பெட்டி திடீரெனத் தனியாகக் கழன்று வீழ்ந்ததினால் அதன்மீது அமர்ந்துவந்த இருவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தனர்.

அம்பனை, ஆலடிப்பகுதியில் நேற்றுமாலை 6 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பெரியவிளான், இளவாலையைச் சேர்ந்தவர்களான திரவியம் அரியதாஸ் (வயது 26), மரிஸ்லீன் அன்ரனிஸ் (வயது 24) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர் இருவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ([illegible]-12)

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தியவர்கள் பிரஸ்தாப சிப்பாய்கள் வசம் இருந்த இரண்டு ரி-56 ரக துப்பாக்கிகளையும் அபகரித்துக்கொண்டு தப்பிவிட்டனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-3-12-164)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரத்தினம் இரத்தினம்

நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் ஆறுமுகம் தங்கமுத்துவின் மகளாகிய இரத்தினம் அவர்கள் நேற்றுக் காலமாகி விட்டார்.

அன்னார் அமரர் கனகரத்தினத்தின் அன்புமனைவியும் சிந்தாமணியின் அன்புச் சகோதரியும் செல்லப்பாவின் மைத்துனியும் மதனகல்யாணி, மகேந்திரராசா(இந்தியா), தருமராசா, இரவீந்திரன், கணேசமூர்த்தி (அஞ்சல் அலுவலகம் கைதடி) கோசலர் ஜீவகாருணிய மூர்த்தி, குணசுந்தரி, தயாநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்னம்பலம், அமரர் யோகேஸ்வரி(இந்தியா), செல்வநாயகமலர், ஸ்ரீ சாந்தினி, புஸ்பராணி, கௌரி, இராசகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கோட்டுக்கொள்கின்றோம்.

*சித்திவிநாயகர் வீதி,*
*நாவற்குழி மேற்கு, நாவற்குழி.* (42844)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**




சிறப்புத் தள்ளுபடி
கையிருப்பு உள்ளவரை மட்டுமே
9900/=
டயலொக் வெளிச்செல்லும் அழைப்பு ரூ.4.60
வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடியமுறையில்
டயலொக் G.S.M., மொபிரெல் G.S.M. மேசைத் தொலைபேசிகள் பூட்டித் தரப்படும்.
தொடர்புகளுக்கு:
நியூ பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி
கையடக்கத் தொலைபேசி விற்பனைக்குண்டு.
டயலொக் 500/=, மொபிரெல் 300/=பக்கேஜ்
இணைப்புகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
இல.205/01, கஸ்தூரியார் வீதி, (ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.
தொ.பே.0712 399220, 0714 182500, 0773518330

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
13.11.2005

# என்னத்தைத்தான் சாதித்தார் சந்திரிகா?

**1994** நவம்பர் 2ஆம் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்காவின் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற சந்திரிகா 11ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து பதவியைப் பொறுப்பேற்றார். அவரின் பதவிக்காலம் இன்னும் ஒரு வாரத்தில் முடிவடைகிறது. இம்மாதம் 17ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனாதிபதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். இந்த நிலையில் சந்திரிகா குமாரதுங்கா ஏற்றுள்ள அரசியல் பாத்திரம் குறித்து ஆராய்வது பொருத்தமானது.

**பண்டா குடும்பம்**

இந்த நாட்டின் மிக முக்கியமான அரசியல் குடும்பமாக பண்டார நாயக்காவின் குடும்பத்தைக் கூறலாம். இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நாட்டின் பிரதமர்களாகியுள்ளனர். அவர்களில் ஒருவர் ஜனாதிபதியுமாகியுள்ளார். மற்றொருவர் (அனுரா) சபாநாயகராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

தனது வாழ்க்கையையே அரசியலுக்கு அர்ப்பணித்து அதிகாரங்களின் அதிஉச்சம் வரை உயர்ந்தவர் அக்குடும்பத்தில் சந்திரிகாவே. முன்னாள் பிரதமர்களான எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்க தம்பதிகளின் மகளான சந்திரிகாவின் அரசியல் வாழ்க்கை 1970 முதல் 1977 வரை அவரது தாயின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பமானது. தனது தாயாருடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்திரிகா மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை போன்ற நிறுவனங்கள் ஊடாகக் காணிகள் தொடர்பான விடயங்களில் தலையிட்டார். அவ்வேளையில் சந்திரிகா தனது கட்சித் தலைவர்களுடனும் இடதுசாரித் தலைவர்களுடனும் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தார்.

மக்களைக் கவர்ந்தவரும் நடிகரும் சிறந்த அரசியல்வாதியுமான விஜேகுமாரதுங்கவை சந்திரிகா திருமணம் செய்துகொண்டார். திருமணத்தை அடுத்து கணவரும் மனைவியும் சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இந்தக் காலகட்டத்திலேயே - 1977இல் ஆட்சியைக் கைப்பற்றிய - ஜே.ஆர்.ஜயவர்த்தன தனது அரசியல் எதிரியான சிறிமாவோவின் குடியுரிமையை ஏழு ஆண்டுகளுக்குப் பறித்தார். இதனையடுத்து சுதந்திரக் கட்சிக்குள் உட்கட்சிப் பூசல்கள் உருவாகின. அநுரா பண்டாரநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர் தலைமை தாங்கிய குழுவினர் சிறிமாவோவை கட்சித் தலைமையிலிருந்து நீக்க வேண்டும் எனக் கோரினர். ஆனால. விஜேகுமாரதுங்க மற்றும் சந்திரிகா ஆகியோரின் குழுவினர் அந்தக் கோரிக்கையை எதிர்த்தனர். பின்னர் அநுர மற்றும் மைத்திரிபால சேன நாயக்கா ஆகியோர் கட்சியில் இருந்து தடைசெய்யப்படவே அவர்கள் தனியாகச் சென்று இயங்கினர். அவ்வேளையில் கட்சியைப் பாதுகாத்தது சந்திரிகா குழுவினரேயாவர்.

சிறிது காலத்தின் பின்னர் விஜேயும் - சந்திரிகாவும் சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி ஸ்ரீலங்கா மக்கள் கட்சி என்றொரு கட்சியை ஆரம்பித்தனர். இடதுசாரிக் கட்சிகளுடன் இவர்கள் இணைந்து கொண்டு ஐக்கிய சோசலிஷ முன்னணியை உருவாக்கினர். இதன் ஊடாக இனங்களுக்கிடையே சமாதானத்தை உருவாக்கும் நோக்கில் புதிய அரசியல் வழிமுறையை அவர்களால் உருவாக்க முடிந்தது. இவ்வாறான வேளையிலேயே, விஜேகுமாரதுங்க படுகொலை செய்யப்பட்டார். கொலை அச்சுறுத்தல்கள் காரணமாக சந்திரிகா நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது.

**சந்திரிகாவின் மீள்பிரவேசம்**

தென்பகுதி வன்முறை யுகம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து நாடு திரும்பிய சந்திரிகா மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைந்து புதிய அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து பொதுஜன ஐக்கிய முன்னணியை உருவாக்கினார்.

1993 இல் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு பெரு வெற்றிபெற்ற சந்திரிகா, மேல் மாகாண சபையின் முதலமைச்சரானார். அந்தத் தேர்தலில் சந்திரிகா 2 லட்சத்து 94 ஆயிரத்து 457 வாக்குகளைப் பெற்றார். இதுவரை மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் பெற்ற ஆகக்கூடிய வாக்கு எண்ணிக்கை இதுவாகும்.

ஆர்.பிரேமதாஸவின் மரணத்தையடுத்து ஜனாதிபதிப் பதவியை ஏற்ற டி.பி.விஜேதுங்க 1994 ஜூன் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்தார். அவ்வருடம் ஒகஸ்ட் 16 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலை அடுத்து முஸ்லிம் காங்கிரஸின் உதவியுடன் பொ.ஐ.முன்னணி ஆட்சி அமைத்தது; சந்திரிகா பிரதமரானார்.

இந்தத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட சந்திரிகா 4 லட்சத்து 64 ஆயிரத்து 588 வாக்குகளைப் பெற்றார். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெற்ற ஆகக்கூடிய வாக்கு எண்ணிக்கை இதுவாகும். 1994 நவம்பர் 9 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா 62 சதவீத வாக்குகளைப் பெற்றார். இதுவும் ஒரு சாதனையாகும். அந்தத் தேர்தலில், நாட்டிலுள்ள தேர்தல் தொகுதிகளில் மஹியங்கனை தவிர்ந்த ஏனைய தொகுதிகள் அனைத்திலும் வெற்றிபெற்றதன் மூலம் சந்திரிகா மற்றுமொரு சாதனையைப் படைத்தார்.

1994 இல் சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது பல்வேறு அரசியல் விடயங்கள் அவரது நிகழ்ச்சி நிரலில் இருந்தன. அன்று பலராலும் பேசப்பட்டு வந்த அரசியல் விடயம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகும். அதுபோலவே அரசியல் அதிகாரங்களைப் பகிர்வதை அடிப்படையாகக் கொண்ட தீர்வின் மூலம் யுத்ததிற்கு முடிவு கண்டு சமாதானத்தை ஏற்படுத்தல், ஊடகங்களுக்கான சுதந்திரத்தை வழங்கி ஜனநாயகத்தைப் பேணுதல் என்பனவும் முன்னுரிமை வழங்கப்பட்ட விடயங்களாக இருந்தன. சந்திரிகாவின் நிகழ்ச்சி நிரலிலும் இவற்றுக்கே முக்கிய இடம் இருந்தது.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் முதலாளித்துவத்தையோ இடதுசாரிக் கொள்கையையோ அனுசரிக்காத வகையில் அமைந்த ஒரு கொள்கையினைக் கடைப் பிடித்தல் அவரது திட்டமாகும். இது அப்போது "திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு புதிய தோற்றத்தை அளித்தல்" என அழைக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் 11 ஆண்டுகள் ஆட்சிக்காலத்தில் அவர் எதிர்பார்த்த - நிறைவேற்ற நினைத்த - எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவில்லை. பதிலாக அவை மேலும் சிக்கலாக்கப்பட்டன.

**சமாதானப் பேச்சு**

சந்திரிகாவால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பணி விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பித்ததாகும். அரசின் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே 1995 இல் பல சுற்றுப் பேச்சுகள் யாழ்ப் பாணத்தில் நடைபெற்றன. அவ்வேளையில் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டது.

1995 ஏப்ரல் 19ஆம் திகதி விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை மீறி இலங்கைக் கடற்படைமீது தாக்குதல் நடத்தினர். வடக்கு - கிழக்கில் மீண்டும் பயங்கர யுத்தம் ஆரம்பமானது. 'ரிவிரச'வில் இருந்து 'ஜயசிக்குறு'வரை பல்வேறு ராணுவ நடவடிக்கைகள் இந்தக் கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.



இந்த யுத்தங்களால் யாழ். நகரத்தின் நிர்வாகத்தை படையினரால் மீண்டும் கைப்பற்ற முடிந்த போதிலும் அவர்கள் வசமிருந்த பூநகரி, ஆனையிறவு மற்றும் முல்லைத்தீவு ஆகிய முகாம்கள் புலிகளிடம் வீழ்ந்தன. ஆயிரக் கணக்கான ராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

**அதிகாரப் பகிர்வுத் திட்டம்**

1995 இன் பிற்பகுதியில் சந்திரிகாவின் அரசு அதிகாரங்களைப் பரவலாக்கும் அரசியல் திட்டம் ஒன்றை முன்வைத்ததுடன், 1997 இல் புதிய அரசமைப்பு முன்யோசனையையும் முன்வைத்தது. பிரிட்டனைச் சேர்ந்த லியம் பொக்ஸ் ஊடாக அரசுக்கும் எதிர்கட்சிக்குமிடையை புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. புலிகளுடனான பேச்சுகளுக்கு அனுசரனையாளராகப் பணியாற்ற நோர்வே நாட்டிற்கும் அவ்வேளையிலேயே அழைப்பு விடுக்கப்பட்டது.

1999 இல் வடமேல் மாகாணத்திற்கான மாகாண சபைத் தேர்தலில் பெருமளவில் கள்ள வாக்குகள் அளிக்கப்பட்ட சம்பவத்தை "ஜனநாயகத்திற்கேற்பட்ட களங்கம்" என ஜனாதிபதி பகிரங்கமாகக் கண்டித்த போதிலும், அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் அவர் எடுக்கவில்லை. இது பாரதூரமான விடயமாகும்.

சந்திரிகாவின் ஆட்சியில் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டதென்றால் பெரும்பாலும் மக்களின் அழுத் தங்கள் காரணமாகவே அது இடம்பெற்றது எனலாம். ஜனநாயகம் குறித்து ஜனாதிபதி பெரும்பாலும் பேசிவந்தாலும் அதை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதில் அவர் வெற்றிபெற்றார் எனக் கூறமுடியாது.

சந்திரிகா தனது இரண்டாவது பதவிக்காலத்திற்கான ஜனாதிபதித் தேர்தலை 1999 டிசெம்பர் 21 ஆம் திகதி எதிர்கொண்டார். அவரது இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற போது தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். அந்தத் தாக்குதலால் அவர் தனது ஒரு கண்ணை இழந்தார். அந்த தேர்தலில் எதிர்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடித்து மீண்டும் ஜனாதிபதியானார்.

தேர்தலை அடுத்து அரசமைப்பை மாற்றி புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு அவர் எதிர்க் கட்சியின் ஒத்துழைப்பைக் கோரினார். இருதரப்பினரும் இணைந்து அரசமைப்பு நகலைத் தயாரித்த போதிலும் இறுதி இணக்கத்திற்கு அவர் களால் வரமுடியவில்லை. 2000 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் அரசமைப்பு நகல் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் போதிய ஒத்துழைப்புக் கிடைக்காத காரணத்தினால் அது பின்னர் கைவிடப்பட்டது.

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முன்னணி வெற்றிபெற்றது. இருப்பினும், 2001 நடுப்பகுதியில் அரசு கவிழும் அறிகுறிகள் தென்பட்டன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து வெளியேறியதும் ஆளும் கட்சிகளுக்கிடையே உருவான பூசல் களுமே இதற்குக் காரணங்களாகும்.

சிங்கள மூலம் : லங்காதீப்
தமிழில் : [illegible]

**மீண்டும் தேர்தல்**

2001 ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் திகதி எதிர்க்கட்சியால் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. அதில் 115 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டிருந்தனர். அன்றைய தினம் நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைத்த ஜனாதிபதி, அடுத்த அமர்வு செப்ரெம்பர் 7ஆம் திகதி இடம்பெறும் எனத் தெரிவித்தார். புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்துக்கணிப்பு ஓகஸ்ட் 21ஆம் திகதி நடைபெறும் எனவும் அவர் அறிவித்தார். பின்னர் மக்கள் கருத்துக் கணிப்பை ஒக்ரோபர் 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். செப்ரெம்பர் 6ஆம் திகதி பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் இணைந்து தகுதிகாண் அரசை அமைத்தன. இது ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு முக்கிய சம்பவமாகும். அந்த அரசின்

*(VIIIபக்கம் பார்க்க)*

# யுத்தத்தால் தீர்வு காண ஜே.வி.பியாலும் முடியாது

**1948இல்** ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்த போது ஆசியக் கண்டத்தில் அபிவிருத்தியில் ஜப்பான் மட்டுமே ஸ்ரீலங்காவை விட முன்னணியில் இருந்தது. சிங்கப்பூர், தாய்லாந்து, தாய்வான், கொரியா போன்ற நாடுகள் அபிவிருத்தியில் ஸ்ரீலங்காவை விட மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்தன. இருப்பினும் மிக விரைவாகக் குறுகிய காலத்திற்குள் அபி விருத்தியில் இந்த நாடுகள் ஸ்ரீலங்காவைவிட முன்னேற்றமடைந்துவிட்டன.

இன்று தாய்லாந்தில் தனிநபர்



ஒருவருக்குக் கிடைக்கும் வருமானம் ஸ்ரீலங்காவில் தனிநபர் ஒருவருக்குக் கிடைக்கும் வருமானத்தின் பத்துமடங்காகும். சிங்கப்பூரை எடுத்துக்கொண்டால் இது ஸ்ரீலங்காவை விட இருபது மடங்குகள் ஆகும். இவ்வாறான நிலைமை எவ்வாறு உருவானது? இந்த விளைவுக்கான விடை மிகவும் சிக்கலானது.


**குறைகூறும் போக்கு**

இவ்வாறான நிலைமை ஏற்பட முக்கியமாக இரு காரணங்கள் உள்ளன. இதில் முதலாவது, இந்நாட்டு அரசியலில் ஆரம்பத்திலிருந்தே இரு பிரதான கட்சிகளுக்கிடையே இருந்து வரும் பிளவாகும். இதன் காரணமாக ஒரு கட்சியின் அரசியல் தோற்றமும் அக்கட்சியால் மேற்கொள்ளப்படும் முடிவுகளும் சகல சந்தர்ப்பங்களிலும் மற்றக் கட்சியால் குறை காணப்படுகின்றன; விமர்சிக்கப்படுகின்றன. உண்மையில், இக்கட்சிகளின் அரசியல் தலைவர்கள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதிலும் அதிகாரத்தைத் தக்கவைப்பதிலுமே தங்கள் கவனத்தைச் செலுத்துகிறார்களே தவிர, நாட்டின் அரசியல், சமூக மற்றும் அரசியல் தொடர்பான மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிப்பதில்லை.

மற்றைய காரணமாவது, நாட்டில் வாழும் இனங்களுக்கிடையே நிலவும் ஒற்றுமையீனம். ஓர் இனம் மற்ற இனத்தின் கலாசாரம், மொழி, உரிமை, மதம் மற்றும் அடையாளம் ஆகியனவற்றைப் புரிந்துகொள்ளாமல் விடுதல், மதிப்பளிக்காமல் விடுதல் ஆகியவற்றால் சமூகத்தில் பிரச்சினைகள் உருவாகின்றன; இவற்றின் இறுதிப் பலாபலன் பயங்கரமான இனப்போராகும். இதனால், ஒரு நாட்டில் இணைந்து ஒரே பார்வையுடன் செயலாற்றக் கூடிய நிலைமையை நாம் இழந்துவிட்டோம்.

இருப்பினும், பல தசாப்தங்களாக நிலவிவரும் இந்த அரசியல் குளறுபடிகளுக்குத் தெளிவான மாற்றத்தை உருவாக்க வாய்ப்புகள் உள்ளன. அண்மையில் முக்கிய கட்சிகள் இரண்டும் இணைந்து செயற்படக்கூடிய பின்னணிக்கான அத்திபாரம் இடப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வியூகங்களை மேற்கொள்ளும் போதும், அது தொடர்பான கொள்கை மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளும்போதும் நாட்டின்



தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்படும்போதும் இந்த முக்கிய கட்சிகளிடையே ஒரு ஒற்றுமையைக் காண முடிந்தது. குறிப்பாக, பொருளாதாரம் தொடர்பாக அக்கட்சிகளிடையே பல உடன்பாடுகள் உருவாகின. விரைவான அபிவிருத்தியை நோக்கிச் செல்வதாயின் திறந்த பொருளாதாரக் கொள்கையை அனுசரிப்பது, வெளிநாட்டு உதவிகளைப் பெறுதல், உலக வங்கி போன்ற சர்வதேச அமைப்புகளின் ஆலோசனைகளுக்குச் செவிமடுத்தல், அவர்களால் உருவாக்கப்படும் சட்ட திட்டங்களைப் புரிந்துகொள்ளுதல் ஆகியனவற்றை இன்றியமையாதவை என ஐ.தே.கட்சியும் ஸ்ரீல.சு.கட்சியும் நன்கு புரிந்துகொண்டுள்ளன.

சர்வதேச சமூகம் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் நேரடியாகச் செயற்படுவது அபிவிருத்திப் பாதைக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். இந்தப் பின்னணிகளை நன்கு புரிந்துகொண்டுள்ள முக்கிய கட்சிகள் இரண்டும் கடந்த ஒரு தசாப்தமாக தேசியப் பிரச்சினைகளிலும் ஒரே பார்வையுடனும் பொது இணக்கத்துடனும் செயற்பட்டன.

இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணமுடியாது என இந்தக் கட்சிகள் புரிந்து கொண்டன. சர்வதேசத்தின் அனுசரணை மற்றும் ஒத்துழைப்பின் தேவையை நன்கு புரிந்துகொண்டுள்ளன. அதிகாரங்களைப் பரவலாக்கி, அதிகாரங்களைப் பகிர்வதே யுத்தத்தை இல்லாதொழிப்பதற்கான ஒரேயொரு வழி என்பதை ஜனாதிபதி சந்திரிகாவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் புரிந்து கொண்டுள்ளனர். இந்த இருவரும் சமஷ்டி முறையின் தேவைகளையும் புரிந்துகொண்டுள்ளனர். இந்த

இணக்கங்களைக் கடந்த ஆண்டு எங்களால் தெளிவாகக் காணமுடிந்தது.

தேசியப் பிரச்சினையில் ரணிலும் சந்திரிகாவும் சமாந்தமான கண்ணோட்டத்தைக் கொண்டிருந்த காரணத்தால் சர்வதேசத்தின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுக்கு அழைக்க முடிந்தது. அதேபோலவே ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணசபை தொடர்பான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற வேளையில் அரச - எதிர்க்கட்சித் தலைவர்கள் மிகவும் நெருக்கமாக ஒற்றுமையாகச்



செயற்பட்டனர்.

சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் முடிவடைந்த போதிலும் இன்றும் முன்னேற்றமடைந்துவரும் நாடாக இருப்பதற்குக் காரணம் எமது நாட்டின் அரசியல் பயணம் தூரநோக்கற்றதாகவும் பிரிவினைவாத நோக்கத்தைக் கொண்டிருந்தமையுமே ஆகும். அவ்வாறான இருண்ட அரசியல் சூழ்நிலையில் சந்திரிகா - ரணில் உறவு நல்லதோர் அறிகுறியாகும். இந்த நல்ல சூழ்நிலையில் நாட்டின் எதிர்காலம் தொடர்பான மேலும் நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களால் முடியும் எனத் தோன்றுகிறது.

**வழிமாறினார் மஹிந்த**

இருப்பினும், மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனம் ஊடாக ஸ்ரீல.சு.கட்சியின் தீர்மானங்களுக்கு முற்றிலும் முரண்பட்ட விதத்தில் எதிரணி அரசியல் கட்சிகளுடன் கை கோத்துள்ளார். இந்த அரசியல் கட்சிகளுடன் உடன்பட்டுள்ள மஹிந்த, ஜனாதிபதி சந்திரிகாவால் உருவாக்கப்பட்ட அரசியல் தோற்றத்திற்கு மாறுபட்ட வழியில் பயணம் செய்து கொண்டிருக்கிறார். மஹிந்தவின் தற்போதைய போக்கு நாட்டை மீண்டும் 1970-1980 காலகட்டத்திற்கு இட்டுச் செல்கிறது. இந்தப் பிரிவினைவாதத்தைத் தோற்கடிக்கும் வரை நாட்டை முன்னேற்றிச் செல்வது கடினமாகும்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான பலப் பரீட்சையில் ஐ.தே.கட்சியும் ஸ்ரீல.சு.கட்சியும் போட்டி போட்டாலும், அரசியல் கண்ணோட்டத்தில் இந்த இரு கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டிற்கு வந்துள்ளன. இருப்பினும், மஹிந்த வேறு திசையை நோக்கிப் பயணஞ் செய்கிறார். மஹிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்தவர்களால் இந்த முயற்சிகள் சற்றுப்

பலவீனமடைந்துள்ளன. மஹிந்தவுடன் சேர்ந்துள்ள கட்சிகள் (ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய) யுத்தம் தொடர்பாக சுமார் 20 வருடங்களுக்கு முன் நிலவிய கருத்தையே கொண்டுள்ளன. அவர்கள் திறந்த பொருளாதாரத்தையும் வெளிநாட்டு உதவிகளையும் நிராகரிக்கிறார்கள். தரித்திரத்தால் பாதிக்கப்பட்ட ஏழை நாடுகளுக்கு அபிவிருத்தியை நோக்கிப் பயணம் செய்யும் போது தனித்துப் பயணம் செய்ய முடியாது என்பதை உலகம் எடுத்துக் காட்டியுள்ளது.



அண்மையில் மூன்று பொலீஸ் உத்தியோகத்தர்கள் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்வதற்கு இதுவரை ஸ்ரீலங்கா அரசால் முடியாமற் போயுள்ளது. இதிலிருந்து நாங்கள் எதைப் புரிந்துகொள்ள முடிகிறது. நாட்டின் உள்விவகாரம் இரு தரப்பினரால் பரிபாலிக்கப்பட்டு வருவதையே இது காட்டுகிறது. இன்று வடக்கில் விடுதலைப் புலிகளின் தனியான நீதிமன்றங்களும் காவற்றுறையும் இயங்கி வருகின்றன.

வடக்கில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த நிர்வாகத்தில் தலையிடும் ஆற்றல் ஸ்ரீலங்கா அரசுக்குச் சிறிதேனுமில்லை. இதிலுள்ள யதார்த்தம் என்னவெனில், வடக்கிலும் தெற்கிலும்

**சிங்களமூலம் : ஜெஹான் பெரேரா**
**தமிழில் : கஜனி**

தெளிவான வெவ்வேறான நிர்வாகங்கள் இடம்பெறுகின்றன. இருப்பினும், இதை இரு வெவ்வேறான நாடுகள் என்றோ அல்லது வெவ்வேறு நிர்வாக அமைப்பைக் கொண்ட அலகுகளாகவோ சர்வதேசம் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஜே.வி.பி. மற்றும் சிறு இனவாதக் குழுக்கள் ஒற்றையாட்சித் திட்டத்தை முன்வைத்துள்ளன. ஒற்றையாட்சித் திட்டமானது அதிகாரங்களை ஒருமுகப்படுத்தும் வகையில் அமைந்ததாகும். மத்திய அரசின் 'அதிகாரங்களை அதிகரிக்கச் செய்து நிர்வாக முறையை மையப்படுத்தவே இவர்கள் முயற்சிக்கிறார்கள். ஆனால், இதை யுத்தத்தின் மூலம் மாத்திரமே மேற்கொள்ள முடியும். சமஷ்டிமுறை என்பது அங்குள்ள (வடபகுதியில்) நிர்வாகத்தை தென்பகுதி மத்திய நிர்வாகத்துடன்

*(VIIIஆம் பக்கம் பார்க்க)*

# தாய் – சேய் பிணைப்பிற்குத் தாய்ப்பால்

ஓர் ஆரோக்கியக் குழந்தையை உருவாக்குவதற்குத் தாய்ப்பால கொடுப்பது சிறந்தது. இது குழந்தையை ஆரோக்கியத்துடன் வளரச் செய்வதுடன் தாய் - சேய் இருவரிடையேயும் இறுக் கமான அன்புப் பிணைப்பை உருவாக்குகின்றது.

தற்போதைய நவீன மயமாக்குதலும் தொழில்நுட்ப முன்னேற்றமும் அநேகமான தாய்மாரை பால்மா வகைகளை உபயோக்கிக்கத் தூண்டுகின்றது.

தாய்ப்பால் இயற்கையாக செலவின்றி, ஊட்டமுடன் கிடைக்கும் ஓர் உணவு. வசதி வாய்ப்பில்லாதவர்கள் கூட தமது குழந்தையை ஆரோக்கியக் குழந்தையாக வளர்க்க இது உதவும்.



ஆனால், பல தாய்மார் நினைக்கின்றனர் புட்டிப் பால் (விளம்பரங்க ளின் மகிமை) கொடுப்பதே தமது பிள்ளைகளுக்கு நல்லது என்று.

தாய்ப்பால் குழந்தைக்கு மிகவும் பாதுகாப்பான ஓர் உணவு. எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் தங்கு தடையின்றிக் கிடைக்கக் கூடியது. ஒரு குழந்தையின் உடல் அமைப்பு, சுபாவம் என்பற்றிற்கு ஏற்புடையது.

தாய்ப்பாலால் ஊட்டம் மட்டுமல்ல மேலும் பல நன்மைகளும் உண்டு.

* தாயிடம் குழந்தை பால் குடிக்கும் போது பாதுகாப்பு, அன்பு போன்ற உணர்வை அனுபவிக்கின்றது.
* நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்குகின்றது.
* பசும்பாலை விட தாய்ப்பாலில் லக்டோஸ் அதிகளவில் உள்ளது.
* தாய் - சேய் பிணைப்பை வலுப்படுத்துகின்றது.
* தொடக்கநிலைத்தொடர்பு முறையை வளர்க்கின்றது.
* தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் வரும் சாத்தியம் குறைவு.
* தாயின் கருப்பை விரைவில் பழைய அளவிற்குள் திரும்பி விடும்

- சம்யுக்தா

# சந்தியாவின் கடிதங்கள்



**பிரியமுள்ள பிரியாவிற்கு!**

பெண்கள் இன்று உலக சாதனை படைக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். சாதாரண கூலி வேலையா? மலையேறும் வேலையா? விஞ்ஞானத்தில் புதுமையா? எதையும் செய்யும் திடமும் ஆர்வமும் இன்று பெண்களிடம் நிறைந்துவிட்டது.

ஓட்டோ ஒட்டுவது, தச்சு, மேசன் போன்ற தொழில்களில் கூட பெண்கள் ஈடுபடுவதை இன்று காணக்கூடியதாக உள்ளது.

இதையெல்லாம் வெளிநாட்டுப் பெண்களா செய்கின்றார்கள்? நம் நாட்டில், நம் தமிழ்ப் பெண்கள்தான் சாதனை படைக்கின்றார்கள்.

ஆனால், தற்போது கூட தற்துணிவு என்பது சில பெண்களிடம் இல்லை. இதைத் கண்கூடாகவே நாம் காண்கின்றோம்.

தற்துணிவு சில பெண்களிடம் ஏற்படாததற்குக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தோமானால் அநேகமான பெண்கள் சிறுவயது முதல் எந்த ஒரு விடயத்திற்கும் சார்ந்து இருக்கப் பழகிக் கொள்கின்றனர்.

பெரும்பாலும் பெண்கள் தங்களின் குடும்பத்து ஆண்களிடமிருந்து அதிகமான ஆதரவையும் அரவணைப்பையும் பெறுகின்றபோது அவர்கள் தம்மையறியாமல் மனதளவில் பலவீனப்பட்டு போகின்றார்கள்.

செல்லப்பிராணி போல எப்போதும் பயந்து - தனியே நின்று எதையாவது செய்வதற்குத் துணியாத மனோபாவம் அந்தப் பெண்களுக்கு வந்துவிடுகின்றது.

எந்த வேலையையும் யாராவது தனக்குச் செய்து தரமாட்டார்களா என்று எதிர்பார்த்து வாழ்கின்றார்கள். அதாவது சுயமாக ஒரு வேலையைச் செய்யமுடியாது சார்ந்து வாழப் பழகிக் கொள்கின்றார்கள்.

ஒரு பெண் மனத்தைரியத்துடன், தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டும். அதாவது வாழ்க்கையை எதிர்கொண்டு வாழத் தெரியவேண்டும். அப்படி வாழும் ஒவ்வொரு பெண்ணும் 'தன்னம்பிக்கைப் பெண்மணி' என்றே அழைக்கப்படக் கூடியவர்கள்.

இதனால், ஆண்களைச் சார்ந்து வாழும் பெண் கோழை என்று குறிப்பிடவில்லை. ஒவ்வொரு விடயத்திற்கும் ஆணை எதிர்பார்த்து அவன் பின்னால் ஒழித்து நிற்கக்கூடாது என்றுதான் கூறுகின்றேன்.

இவ்வாறு எதிர்பார்த்து நிற்பது - சார்ந்து வாழல் - அவளை மேலும் பலவீனப்படுத்திவிடும்.

எனவே, பெண்கள் தமது வாழ்க்கையைத் தீர்மானிக்கும் திடத்தை வளர்க்க வேண்டும். எந்தவொரு விடயத்தையும் பகுத்தாராய்ந்து செயற்படும் திறன் பெண்களிடம் வேண்டும் என்பதே எனது விருப்பம்.

பிரியமுடன் சந்தியா

# அதிகரித்து வரும் போசனைக் குறைபாடு

மந்தபோசனைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பெண்களில் கூடுதலானோர் வடக்கு - கிழக்கு மாகாணத்தியே உள்ளதாக உலக உணவுத் திட்ட ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையின்படி இலங்கையில் வசிக்கும் பெண்களுள் 100இற்கு 67வீதம் போசனைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 100இற்கு 37வீதம் வடக்கு - கிழக்கில் உள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

இப்படி பெண்கள் கூடுதலாக பாதிக்கபட்டிருப்பதனால் 100இற்கு 25வீதத்திற்கும் அதிகமான குழந்தைகளும் மந்த போசனைக் குறைபாட்டுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளவர்களாக உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 40 வீதத்துக்கும் கூடுதலானோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா உட்பட்ட பகுதிகளில் பெண்களும் குழந்தைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. சுத்தமான குடிதண்ணீர் பாவனை இன்மை, உணவுத் தட்டுப்பாடு மற்றும் முக்கிய தேவைப்பொருள்கள் குறைபாட்டாலும் சுற்றாடல் பாதிப்பு காரணங்களினாலும் வடக்கு - கிழக்கு பெண்கள் மற்றும் குழந்தைகள் போசாக்கு இன்மை காரணமாகக் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர் என அறியப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தம், ஆழிப்பேரலை என்பவை வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்வை எவ்வாறு சீர்குலைத்ததோ அதேயளவு தாக்கத்தை பெண்கள் மற்றும் குழந்தைகளின் போசாக்கு வீதத்திலும் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, இளம் தாய்மாரும், வயோதிபப் பெண்களுமே போ[illegible]க்குத் தாக்கத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அ[illegible]கரித்துவரும் உணவுப் பொருள்களின் விலையேற்றமும் இ[illegible]க்குக் காரணமாக உள்ளது.

- குமாரசாமி

**அர்த்தமுள்ள வாழ்விற்கு...**

சந்தோசமாக வாழ்வதே
வாழ்க்கை; சந்தேகமாக
வாழ்வதல்ல. அந்த
வாழ்க்கையில்
அர்த்தமேயில்லை.

# வாழ்வைத் தீர்மானிக்கும் உரிமை அவளுக்குமுண்டு

திருமணம் என்றதும் சமூகத்தில் அதிகமாகக் குழம்புபவர்களும் குழப்பப்படுபவர்களும் பெண்களாகத்தான் இருப்பார்கள். இந்த நிலையில் இருந்து விடுபடும் நிலையை பெண்களாலேயே உருவாக்கவும் முடியும். பெண் தன் நிலையில் நியாயமானவளாக நிற்கும் போது எந்தப் பகையையும் அவளால் முறியடிக்க முடியும். அண்மையில் பெண் ஒருவர் சந்தித்த சிறு அனுபவத்தை இங்கு பகிரலாம் என எண்ணுகிறேன்.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவை முடித்துக் கொண்டு தன் குடும்பத்துடன் கொழும்பு பயணமானாள் அவள். உறவினர்களின் வீடு களை கட்டியிருந்தது. வெளியூரிலிருந்து வருகை தந்திருந்த அவள் குடும்ப உறுப்பினர்களைப் பார்த்துச்செல்ல, விருந்தினர்களும் வேறு வந்து போய்க்கொண்டிருந்தனர். வழமையாக எமது சமூகத்தில் கொண்டாட்டங்கள் உறவுகளால் களை கட்டுவது வழமை. வழமைக்கு மாறாக அங்கு ஆயத்தங்களும் இருக்கவில்லை. ஆனால், சுழியோடிக் கொண்டிருந்தசூழல். தொலைபேசி அழைப்பொன்றைத் தொடர்ந்து சூழல் பரபரத்தது. வாயிலில் வாகனங்களும் இரண்டு மூன்றென நிரையிட்டன. அதிலும் வெளிநாட்டிலிருந்து வருகைதந்திருக்கும் தமிழ் உறவுகள். வரவேற்பு சாரமாரியாகப் பொழிந்தது. விருந்தினர்களிடையே முணுமுணுப்புக்களும் கேள்விக்கணைகளும் சலசலத்தது.



புது விருந்தினர்களின் வரவு பற்றி ஊடறுத்தவள் நிதானமானாள். அமைதியாக அவ்விடம் விட்டு நகர்ந்தாள். அதிர்ச்சிக்குள்ளானார்கள் விருந்தினர்கள். அவள் அனுமதியின்றி அவளுக்கொரு திருமணம் பேசி முற்றாக்கப்பட்டிருந்தமையே அவள் கோபப்படுவதற்கு நியாயமானதாயிருந்தது. விருந்தினர்களை அவமதிக்க வேண்டும் என்ற நினைப்பு அவளிடம் இருக்கவில்லை. நேரில் கலந்தாலோசிக்கவும் விரும்பவில்லை. "நான் மேல் படிப்பு படிகப்போகிறன். எனக்கு இப்ப இந்த விடயத்தில் இஷ்டமில்லை" ஆத்திரத்தின் உச்சப் பீறிடுகையை மிக பொறுமையாக்கிக் கொண்டாள். தன்னைப்பற்றி தான் முடிவெடுப்பதில் உறுதியானாள். அந்தச் சூழலில் வாதப்பிரதிவாதங்கள் அதிர்ந்தன. திட்டியும் தீர்த்தனர். பெண் என்றால் சும்மாவா? அவளுக்கும் வேறு வாழ்த்துப் பாடல்கள்... புரிந்துணர்வுடையவர்களாக புரிதலுடன்; "அவளைப் பற்றி எல்லாம் தெரிந்தும் ஆசைப்பட்டிட்டம்போல... அதுதான் தப்பு" நட்புக் கலந்து வெளியேறினார்கள் விருந்தினர்கள். மிகுந்த குழப்பங்களினூடே அந்த நாள்கள் கரைந்து சென்றது. அவளும் தன் அடுத்த கட்ட உயர்கல்வியைத் தேடிப் பயணிக்க தயாரானாள்.

எனவே, பெண்களாகிய நாம் எந்த விடயத்திலும் விழிப்புக் கொள்வது அவசியம். சாதாரண வாழ்வால் நாம் எதை சாதித்தோம்? பெண்பிள்ளைகளுக்கு வயது வருகின்றது என்றதும் திருமணம் பற்றி பெற்றோர் அதிகம் யோசிப்பதுண்டு. தவறல்ல. வாழ்வையும் மனிதத்தையும் முன்னேற்றம் நோக்கி வழிப்படுத்தும் வாழ்க்கைபற்றி முடிவெடுக்கும் பொறுப்பும் உரிமையும் அவளுக்கே உரியது. நியாயமான தேடலுடன் அவள் தன் முடிவுகளை எடுக்கும்போது நியாயமற்ற சமூகப் பிரச்சினைகளிலிருந்து அவளால் விடுபட முடியும். நல்ல சமுதாயத்தை உருவாக்கவும் முடியும்.

- அக்னிகுஞ்சு

# காயகற்பம்: தமிழர்களின் தனிச் சொத்து!

திருவள்ளுவர் தனது திருக்குறளில் 'மருந்து' எனும் அதிகாரத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.
''நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்''

அதாவது - நோயின் தன்மையும் நோயின் மூலகாரணமும் அதைத் தணிக்கும் வகையில் ஆராய்ந்து, அதற்கு தகுந்தவாறு மருத்துவம் செய்தல் வேண்டும் என்பதாகும்.

சித்தமருத்துவமுறைகளில் காயகற்பம் முதன்மையானது. இது சித்தர்கள் கண்டு, பயனடைந்து, உலக நன்மைகளுக்காகத் தந்த முறையாகும்.

மனித உடலில் ஏற்படும் நரை, திரை, பிணி, மூப்பு ஆகியவற்றால் உடலை அழியாதபடிகாத்து, பலப்படுத்தி நீண்ட காலம் வரை உயிரோடு இருக்கச் செய்யும் முறை இதுவாகும். சித்த முறையில் உடலின் நன்மையைக் காப்பது காயகற்பம் எனப்படும். காயகற்பம் அல்லது காகாக்கலை தமிழர்களின் தனிச்சொத்தாகும். உலகில் வேறு எந்த மனித இனமும் அடைந்திராத பேறு. சித்தர்கள் எங்களுக்கு விட்டுச் சென்ற ஈடு இணையற்ற செல்வம். இது எண் வகை சித்திகளை அடைவதற்கு ஏதுவான மருந்தாகும்.

மனித உடலைக் காத்துப் பேணல் எந்த அளவுக்கு அவசியம் என்பதை
*'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்*
*திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்'* என்ற திருமந்திர வரிகளாலும் - *'உடம்பினா லன்றியுணர்வுதா னில்லை*
*உடம்பினா லுன்னியதே யாம்'*. மற்றும், *'உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே'*
- என்ற ஔவை குறளாலும் உணர முடிகிறது.

உடம்பைக் காப்பது காயகற்பம். இது உடம்பைக் கல்லைப் போலாக்கும். கல்லினால் செய்த சிலை நீண்ட நாள்களாயினும் நரை, திரை, மூப்பு, பிணி அடையாததைப் போல, கற்பமாக உடலும் இத்தகைய மாற்றங்களை அடைவதில்லை. இதனை 'கற்பத்தை யுண்டால் காயம் அழியாது' என்ற திருமூலர் வாக்கால் உணரலாம்.

உடலை நோயின்றி நல்ல நிலையில் வைத்திருக்கவும் பல ஆண்டுகள் நோய்களைப் போக்கி நீண்ட காலம் உயிரோடு வாழவும் நோய்களை நீக்கி உடலைத் தேற்றவும் நோய் வரும் முன் தடுக்கவும் கற்ப மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.
கற்பம் 2 வகைப்படுகிறது.
1. பொது கற்பம்
2. சிறப்பு கற்பம்
நரை, திரை, பிணி, மூப்பு வராதவாறு தடுத்து நீண்ட காலம் உயிருடன் வாழச் செய்வது பொதுக் கற்பமென்றும் உடலில் ஏற்பட்ட பிணியைப் போக்கி உடலை வன்மை பெறச் செய்து நீண்ட நாள்கள் உயிருடன் வாழச் செய்வது சிறப்பு கற்பமென்றும் கொள்ளலாம்.

காயகற்பத்துள் மூலிகை கற்பம், தாதுகற்பம் ஆகிய மருந்துகளும், உடலைக் காத்தும், நோய்களை நீக்கியும் நன்மை தரும் ஆசனம் முதலிய பயிற்சிகளும், மூச்சுப் பயிற்சியும், யோக முறைகளும் மூப்பு, தீட்சை ஆகியவைகளும் அடங்கும்.

இப்போது மூப்பு என்றால் என்ன? என்பதை சற்றுப் பார்ப்போம்.

மூப்பு என்ற உயரிய மருந்து மூன்று முக்கிய பூதச் சேர்க்கையாலானதாகும்.
இதில் 4 வகையுள்ளது.
1. வாத மூப்பு
2. வைத்திய மூப்பு
3. யோக மூப்பு
4. ஞான மூப்பு

வைத்திய மூப்பு என்ற வேதியியல் பொருளைப் பற்றிப் பல சித்தர்கள் பல வகையாகச் சொல்லி இருக்கிறார்கள்.வைத்திய மூப்பு செய்பவர்கள் தமிழ் நாட்டில் இன்னும் இருக்கிறார்கள். வைத்திய மூப்பு உடலில் உள்ள நோய்களை மிக விரைவில் போக்கி உடலைத் தேற்றும் வல்லமை கொண்டது. ஏற்கனவே, செய்யப்பட்ட மருந்துகளுடன் கொஞ்சம் கலந்து கொடுத்தால், அம்மருந்துகளுக்கு சக்தி அதிகமாகும். இப்படிப்பட்ட உயர்ந்த வேதியியல் பொருள்கள் நிறைய சித்த மருத்துவத்தில் உண்டு.

வாதமூப்பு என்பது உடல் நோய்வாய்ப்பட்டு அழியும் நிலையில் இருந்தாலும் அவற்றை நீக்கி அழியாதபடி காக்கும்.

யோக மூப்பு, ஞான மூப்பு என்பவை நமது உடலின் உள்ளேயே சுரந்து உடலை அழியாதபடி காத்து நன்மை செய்யும் சிவக்குடிலை நீர் போன்ற கத்துக்களாகும். இவை ஆயுட்காலத்தை அதிகரிக்கச் செய்யும் தன்மை கொண்டவை. யோகப் பயிற்சியின் மூலம் இவற்றை ஒழுங்குபடுத்தி நீண்ட நாள்கள் நோயின்றி வாழ முடியும்.

**சுகநலம்**

இவை தவிர அமுரிதாரனை, தசதீட்சை, இயமம் எனும் நல்மனது, நியமம் எனும் நன்னடத்தை ஆகியனவும் காயகற்பங்களாகும்.

கற்பம் உண்ணும் காலத்துள் கூறப்பெற்ற விதிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடிக்க வற்புறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு செய்ய சிறந்த பலனைக் கொடுக்கும் என்பதில் ஐயமே இல்லை.

நி.தர்ஷனோதயன்,
*4ஆம் வருடம், சித்தமருத்துவத் துறை, யாழ்.பல்கலைக்கழம்.*

## நன்று தூங்கும்!

ஆறுதிங்கள் கும்பகர்ணன்
நீண்ட துயில் கொண்டானென்றால்,
அதிசயம் என்ன உண்டு?
அவனிலும் பன்மடங்கு விஞ்சியவர்
நாமன்றோ
தேர்தல் முடிந்தவுடன் தூங்குகின்ற
தேருநர் நாம்!
ஆறாண்டு கழிந்து 'அடடா' என்றெழுந்து
கண்ணைக் கசக்குகின்றோம்.

கண்முன்னே நிற்பவர் யார்?
சென்ற முறை கொண்டுவந்த பொய்மூடை
பன்மடங்கு பெரிதாக்கி
கொள்கை அடகுவைத்து,
கொள்ளையடிப்பதற்குக் கூட்டுச் சேர்ந்து
வந்து நிற்கும் - அரசியல்
வர்த்தகரை உற்றுப்பார்!

எதிரியை ஏமாற்ற உருமறைப்புச்
செய்யுமுறை
எங்கட்குப் புதிதல்ல.
பரப்புரைக்குள் உருமறைத்து - பவ்வியமாய்
கூனிக்குறுகி நிற்கும் வேட்பாளர்
கொண்டு வருவது பழையகள் - அதனை
மொண்டு வருவது புதுமொந்தை
உண்டு மயங்காதீர்!
சென்று உம் சோலி பாரும் - அன்றேல் நன்று
தூங்கும்!

புத்தூர்
வே.இளையகுட்டி

## வெறுமை

கட்டுக்குளத்திலிருந்து நீர்பெருகி நீரேரிப்பக்கம் பாய்ந்து கொண்டிருக்கிறது. முடங்கிக் கிடந்த மீன்கள் புளுகத்துடன் வெளியேறத் தொடங்கின. கிணியாப் பற்றையிலிருந்த கொக்கு மெதுவாக ஓடையில் இறங்கியது.
குஞ்சு மீன்களை வழியனுப்பி பெரிய மீன்களின் வருகையை வரவேற்கத் தவங்கிடந்தது.
பெரிய மீன்கள் கூட்டமொன்றைக் கண்டு உஷாரடைந்த நேரத்தில்...:.
யாரோ குளிப்பதற்காகக் குளத்தில் இறங்கி விட்டார்கள்.
இப்போது மீன்கள் வந்த பாதையில் சவர்க்கார நுரைக்கோலங்கள் மட்டுமே...
திடுக்கிட்ட கொக்கு மீண்டும் பற்றையில் கால்களைப் பதித்தது.
நீண்ட அலகால் இறகுகளைக் கோதி வெதுவெதுப்பை

**கடுகுக்கதை**

உண்டுபண்ணவும் செய்தது.
அந்தநேரம்.....!
தூரத்தில் நின்ற வண்டில்மாட்டில் உண்ணிகளைப் பொறுக்கிப் பசியை மறக்கலாமெனத் தீர்மானித்தது
மீன்களின் அதீத சுவை அந்த யோசனைக்கும் தடைபோட்டது. அந்த மாடு வாலை விசுக்கி எருத்தி கலைப்பதும் பனைமரத்தோடு உராய்ந்து உண்ணி விரட்டுவதும் கொக்கின் பொறுமையைச் சோதிப்பதாக அமைந்தது.
மாட்டைநோக்கி பறக்க எத்தனித்தபோது.... குளித்தவர்கள் வெளியேறிவிட்டார்கள்.
மீண்டும் மீன்களின் வரவு!
கிணியாப் பற்றையின் உச்சியை நோக்கி கட்டுத்துவக்கொன்று குறிபார்க்கின்றது.
இந்தா......!
இன்னும் ஒரு நொடியில் கொக்கு விழப்போகிறது. உங்கள் காதுகளைப் பொத்துங்கள் சத்தம் பெரிதாக இருக்கும்.
........ம்......பொத்துங்கள்
குறிபார்த்த கையை இன்னொரு கை அவசரமாகப் பாய்ந்து தடுத்தது.




''உனக்கென்ன விசரே-உதிலை ஒரு சிறங்கை இறைச்சி கூடத் தேறாது. பூனைக்கு வைக்கத்தான் காணும்; வா.......முயல் ஏதும் பார்ப்பம்''
நல்லகாலம்; மருந்தை அநியாயமாக்கியிருப்பாய்?
குறிபார்த்த கை வியர்வையுடன் தளர்ந்தது.
கொக்கும் பறந்தது!
அவர்களும் நடக்கத் தொடங்கினார்கள்!!

-ந.வினோதரன்

# உல்லாசப் பயணிகளைக் கவரும் டென்மார்க்கின் சுனபோ நகரம்

டென்மார்க், ஜேர்மனுடன் 60கிலோமீற்றர் எல்லையைப் பகிர்ந்துகொண்டுள்ளது என


சதுரமுகி வடிவ கட்டடத்தின் தோற்றம்

ஏற்கனவே எழுதியிருந்தேன். இந்த எல்லைக்கு அண்மையில்தான் 'சுனபோ' (Sonderbore) நகரம் அமைந்துள் ளது. நாம் தங்கியிருந்த வயன் நகரத்தில் இருந்து 200 கிலோ மீற்றர் தொலைவில்தான் இந்த சுனபோ நகரம் அமைந்துள்ளது.

டென்மார்க் நேரம் காலை 8 மணியைக்காட்டியது. ஆயினும் சூரியன் இங்கு மதியம் 11மணிக்கு நிற்பதுபோல் காணப்பட்டது. முதல் மூன்று நாள்களும் மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. நாம் புறப்பட்டதினம் சூரியனைக் கண்ணுற்றதாலேயே சுனபோ பயணத்தை ஆயத்தம் செய்தோம். மூன்று கார்களில் எமது பயணம் ஆரம்பித்தது.

நாம் இவ்வாறான திட்டமிட்ட பயணங்களை மேற்கொள்வதற் குப் போதுமான உணவுவகை களைத் தயாரித்து எடுத்துச்செல்வது வழமை.

அன்றைய தினமும் உணவுவகைகளைப் போதுமான அளவிற்கு எடுத்துச்சென்றோம். இதுவரை நாம்சென்ற இடங்களுக்கு ஏற்கனவே சென்று அந்த இடங்களைப்பற்றி அறிந்தவர்களும் உடன் வந்திருந்தனர். ஆனால், இந்தப் பயணத்தில் வந்த எவருமே இதற்கு முன்னர் 'சுனபோ'


சுனபோவில் உள்ள பௌதிகவியல் காட்சியகத்தின் ஒரு பகுதி

சென்றதில்லை. கையில் வரைபடத்தை வைத்துக் கொண்டே எமது பயணத்தை ஆரம்பித்தோம். எமது திட்டத்தின் படி ஒரு குறிப்பிட்ட இடத்தில் கார்களை நிறுத்தி தேநீர் அருந்தி இளைப்பாறுவது எனத் தீர்மானித்திருந்தோம். கார்கள் புறப்பட்ட பின்னர் எமக்குள்ளே கைத்தொலைபேசியிலேயே தொடர்புகொண்டோம். வரைபடத்துடன் எமது கார் முன்னேசென்று கொண்டிருந்தது. எம்மைத்தொடர்ந்து ஏனைய இரண்டு கார்களும் வந்து கொண்டிருந்தன. நான் இடங்களை ஆவலுடன் பார்த்தவாறே சென்று கொண்டிருந்தேன். சாமை வயல்கள் இரண்டுபுறமும் பச்சைப்பசேல் எனக்காட்சி அளித்தன. இடைக்கிடையே உருளைக்கிழங்குத் தோட்டங்களும் காணப்பட்டன. அவற்றின் மத்தியில் ஆங்காங்கே அழகிய வீடுகளும் காணப்பட்டன. சில இடங்களில் மாட்டுப் பண்ணைகளும், குதிரை லயங்களும் காணப்பட்டன. குதிரைகள் சுதந்திரமாகப் புல்மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றின் அழகும் தனியழகுதான்.

வயல்களின் மத்தியில் சமஇடைவெளியில் பாரிய காற்றாடிகள் அசைந்த வண்ணமிருந்தன. அவை காற்றலைமூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு உருவாக்கப்பட்டவை ஆகும். அவற்றின் மத்தியில் புகைவண்டிப்பாதை ஒன்று சென்றது. கண்ணிமைக்கும் நேரத்தில் மின்சாரத்தில் இயங்கும் ரயில் ஒன்று விரைந்து சென்றது. அக்காட்சியை வீடியோப் படம் பிடித்தோம்.

இவற்றையெல்லாம் கண்ணுற்றவாறே ஏற்கனவே குறிப்பிட்டபடி நாம் தரிப்பிடம் ஒன்றில் காரை நிறுத்தினோம். எம்மைத் தொடர்ந்து வந்த எமது ஏனைய இரண்டு கார்களும் அவ்விடத்திற்கு வந்துசேர்ந்தன.

நாம் கார்களை நிறுத்திய இடத்திற்கு அருகில் ஒரு சிறிய உள்ளூர் விமான நிலையம் காணப்பட்டது. அழகிய சிறிய விமானங்கள் தரித்துநின்றன. ஒரு மஞ்சள் நிற விமானம் வட்டமிட்டு எமது தலைக்கு மேலாக இறங்கியது. எமக்குத் தரையில் வீழ்ந்து படுக்கும் எண்ணம்தான் தோன்றியது. என்ன இருந்தாலும் எமது நாட்டில்நடந்தவைகள் இலகுவில் மறந்து விடுமா என்ன?

தேநீரையும் கேக்கையும் சுவைபார்த்துவிட்டு மீண்டும் எமது பயணத்தைத் தொடர்ந்தோம். டெனிஸ் மொழியில் எழுதப்பட்டிருந்த பெயர்ப் பலகையையும் வீதி இலக்கங்களையும் அவதானித்தவாறே எமது பயணம் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தற்போது வீடுகள் மிகக்குறைவாக காணப்பட்ட ஓர் இடத்தினூடாக, பிரதான வீதியை விட்டு உள்நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். மேலும் தொடர்ந்து சென்றால் எங்காவது காட்டிற்குள் சென்று விடுவோமோ என்ற அச்சமும் மேலோங்கி இருக்க காரை மெதுவாகச் செலுத்தி ஓரமாக நிறுத்தினோம். எதிரே வந்த காரொன்றை மறித்து சுனபோ தொடர்பாக விசாரித்தோம். காரில் வந்தவர் அப்பகுதியைச் சேர்ந்த டெனிஸ்காரர் ஆவார். அவருக்கு இந்த இடங்கள் எல்லாம் பரிச்சயமானவை என்பது அவரது முகபாவனையில் விளங்கியது. அவர் குறிப்பிட்ட திசையில் காரைச் செலுத்தினோம். சற்றுத்தூரம் சென்ற பின்னர் வீடுகள் தென்பட ஆரம்பித்தன. ஓர் உயரமான பாலத்தின் வழியே கார் சென்று கொண்டிருந்தது. அங்கிருந்து பார்த்தபோது 'சுனபோ' நகரின் எழில் கண்ணைக் கவர்ந்தது.

ஒரு வளைவினூடாகத் திரும்பி இறக்கமான பகுதி ஒன்றில் காரைச் செலுத்தினோம். சற்றுத் தூரம் சென்றதுதான் தாமதம் நாம் பார்க்க வந்த இடம் தென்பட்டது. பெரும் எண்ணிக்கையான கார்கள் அடுக்கப்பட்டிருந்தன. அவற்றின் மத்தியில் எமது கார்களையும் ஒருவாறு நிறுத்திவிட்டு உள்ளே செல்ல ஆயத்தமானோம்.

நேரம் முற்பகல் 11 மணியைக் காட்டியது. முகப்பில் இருந்தவரிடம் நுழைவுசீட்டைப் பெற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தோம். 'சுனபோ' டென்மார்க்கின் உயரமான பகுதியில் இருப்பதாலோ என்னவோ சற்றுக் குளிராகவே இருந்தது.

முதலில் ஒன்றையடிப்பாதை ஒன்றின் வழியே உள்ளே சென்றோம். நீல நிறமான பிரமாண்டமான சதுரமுகி வடிவ கட்டடம் ஒன்று தென்பட்டது. அதன் நாலாபுறமும் நீர் வளிந்தோடிக் கொண்டிருந்தது.அதன் ஒருபுறம் வாசல் தென் பட்டது. அந்த வாசல் பகுதியிலும் நீர் வளிந்தோடிக்கொண்டிருந்தது. உயரமான பகுதியில் இருந்து நீர் வளிவதால் வேகமாக கீழ்நோக்கி வீழ்ந்துகொண்டிருந்தது. அதன்வழியே நாமும் வேகமாக நகர்ந்து உள்ளே சென்றோம்.

உள்ளே படிகள் காணப்பட்டன. படிகளின் வழியே தொடர்ந்து சென்றபோது கட்டடத்தின் உயரமான பகுதிவரை செல்லக்கூடியவாறு இருந்தது. படிகளின் முடிவில் ஒருவர் நின்று கீழே பார்க்கக் கூடியவசதி இருந்தது. கீழே பார்த்தபோது பூமி சுழல்வது போல பிரமாண்டமாகத் தெரிந்தது. கட்டடத்தின் அடிப்பகுதியில் ஒரு பாரிய தொட்டியை அமைத்து அதனுள் நீரைவிட்டு அசையாத வாறு வைத்து அந்த நீரினுள் பட எறி கருவி மூலம் (projector) பாரிய பூமியின் மாதிரியை உருவாக்கியிருந்தனர். பின்னர் அக்கட்டடத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள அறை ஒன்றில் எரிமலை உருவாகும் முறையைத் தெளிவாக விளக்கினர். இதனைப் பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் பார்த்துப் பயன்பெற்றனர்.

அந்த நீலநிறக் கட்டடத்தில் இருந்து வெளியே வந்தபோது வேறு ஓர் உலகத்தில் இருந்து வந்த பிரமை ஏற்பட்டது.

தொடர்ந்து நகர்ந்தோம். கல்லினால் ஆக்கப்பட்ட பாரிய வளையம் ஒன்று நீரின் மேல் சுழன்று கொண்டிருந்தது. அது எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது என்பதை ஊகிக்க முடியவில்லை. ஆனால் ஒன்றுடனும் பொருத்தப்படாமல் அந்தரத்தில் சுழல்வது போன்றே அது தென்பட்டது.

தொடர்ந்து நகர்ந்தோம். பௌதிகவியல் தத்துவங்களை அடிப்படையாக வைத்து சிறுவர்களுக்கு ஏற்ற விளையாட்டுக்கள் காணப்பட்டன. பெரியவர்களுக்கே தாங்களும் சிறுபிள்ளையாக மாறினால் என்ன என எண்ணவைக்கும் அளவிற்கு விளையாட்டுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

டெனிஸ் சிறுவர்கள் ஆர்வத்துடன் இந்த விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தனர்.

ஊசல், வட்ட இயக்கம், அமுக்கம், சமநிலை, நேர்கோட்டு, இயக்கம், புவியீர்ப்பு போன்ற பௌதிகவியல் விடயங்களை மையப்படுத்தப்பட்டு இந்த விளையாட்டுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

இந்த விளையாட்டுக்கள் அனைத்தையும் எம்மால் ரசித்துப்பார்க்கவே முடிந்தது. சில இடங்களில் சிறுவர்கள் போட்டியாகவும் இந்த விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். ஓர் இடத்தில் எமது பலத்தைப்


சமநிலையில் சுழன்று கொண்டிருக்கும் கல் வளையம்

பரீட்சித்துப் பார்க்கக் கூடிய பலப்பரீட்சைகளும் காணப்பட்டன.

மற்றோர் இடத்தில் காற்றடைக்கப்பட்ட நீளமான மெத்தைகள் காணப்பட்டன. அவற்றின் மேல் உறங்கினால் உடம்பிற்கு அலுப்பு இருக்காது என்று கூற பலர் அவற்றின் மீது உறங்கிப் பார்த்தனர். சிலர் அங்கேயே உறங்கிவிட்டனர்.

அதனைத் தாண்டி ஓர் அறையினுள் சென்றோம். அங்கே எமது விம்பங்கள் நாம் அசையும் போது திரை ஒன்றில் நடனம் ஆடுவது போல் அமைக்கப்பட்டிருந்தது. சூரியக் கலங்களால் இயங்கும் பொருள்களும் இங்கு காணப்பட்டன. இவ்வாறு பெருமளவில் பௌதிகவியல் சார்ந்த தத்துவங்கள்

டென்மார்க்கிலிருந்து
**பகீர்**

காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. உண்மையில் கணித, விஞ்ஞான மாணவர்களுக்கு இதுபெரும் வரப்பிரசாதமாகவே அமையும். அனைத்து தந்துவங்களையும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அமைக்கப்பட் டிருந்தது. இவற்றை எல்லாம் கண்ணுற்றவர்களாய் மாலை 6மணியவில் வீடு திரும்ப ஆயத்தமானோம்.

சரி, அடுத்த தொடரில் டென்மார்க் மக்கள் தமது இறுதிக்காலத்தை எப்படிக் களிக்கின்றனர் என சில முதியவர்களிடம் பேச்சுக் கொடுத்தும் பார்த்தோம். அவர்கள் இளமையாக எமக்கு பதலிளித்த விடயங்களைப் பார்ப்போம். *(வளரும்)*

# விடுகதைகள்

- அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் அது என்ன?
- அறைகள் ஐந்நூறு. அத்தனையும் ஒரே அளவு அது என்ன?
- மழைக்குப் பிடிக்காத குடை யாரும் செய்யாத குடை அது என்ன?
- சிகப்பு அரசிக்கு தண்ணீரே தாய் வீடு. தாய் வீட்டோடு ஒட்டாமல் பச்சைத் தம்பிகளின் மாநாடு அது என்ன?
- தாவிப்பாயும் குணமுண்டு. தலையில் இரு கிளையுண்டு. இரண்டெழுத்தில் பெயருண்டு. இலக்கியத்தில் இடமுண்டு. அது என்ன?
- உனக்குச் சொந்தமானது; ஆனால் உன்னை விட அதிகமாக மற்றவர்களே உபயோகிப்பார்கள். என்ன?
- மின்னல் வேகத்தில் மின்னியதைப் பிடித்து வைப்பான். அவன் யார்?
- ஒல்லி குச்சி உடம்பு கொண்ட வெள்ளிச் சட்டை போட்ட பொண்ணு நெருப்பை விழுங்கி சிரிப்பாளாம். அவள் யார்?
- மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையும்; வாசனை தந்து நெஞ்சிலே நிறையும். அது என்ன?
- விரிந்த தட்டில் நிறைந்த பலகாரம்: விருந்துக்குத்தான் ஆளில்லை. அது என்ன?

**வளையல், தேன்கூடு, காளன், தாமரை, மான், பெயர், புகைப்படக்கருவி, மத்தாப்பு, சாம்பிராணி, நட்சத்திரம்**

**ஜெ.ஜானகி**
தரம்- 6, யா/வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை.

# அறிந்ததும் அறியாததும்

- கேத்திர கணிதத்தின தந்தை எனப்படுபவர் யார்?
  பைதகரஸ்
- சாரணர் சிறுவர் இயக்கத்தை ஆரம்பித்தவர் யார்?
  பேடன்பவல்
- முள்ளம் தண்டில் உள்ள எலும்புகளின் தொகை?
  31
- நோபல் பரிசை ஆரம்பித்து வைத்தவர் யார்?
  அல்பேட் நோபல் பிரடி
- இலங்கையில் பாடுமீன் உள்ள இடம் எது?
  மட்டக்களப்பு வாவி
- அசோகச்சக்கரம் பொறிக்கப்பட்ட மூவர்ணக் கொடி எந்நாட்டினுடையது?
  இந்தியா
- அணுகுண்டைக்கண்டு பிடித்தவர் யார்?
  ஒக்ரோஹான்
- புகைப்படக் கருவியைக் கண்டு பிடித்தவர் யார்?
  எஸ்.ஜே.எம்.டாகுரே
- ஒட்சிசன் வாயுவைக் கண்டு பிடித்தவர் யார்?
  ஜோசப் பிறீஸ்லி
- நாக்கினால் வியர்வையை வெளியேற்றும் பிராணி எது?
  நாய்

**சிவசுப்பிரமணியம் வாமதீபனி**
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# பொன் மொழிகள்

- சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது இதயத்தின் இசை
- சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது சக்தியின் பிறப்பிடம்
- விளையாட நேரம் ஒதுக்குங்கள் அது இளமையின் இரகசியம்
- படிக்க நேரம் ஒதுக்குங்கள் அது அறிவின் ஊற்று.
- நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள் அது மகிழ்ச்சிக்கு வழி.
- உழைக்கநேரம் ஒதுக்குங்கள் அது வெற்றியின் விலை.

**ந.ஜீவனி**
தரம்:- 9சி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# உன்னால் முடிந்தால்

இல்லாதொருவன் பசி போக்க உன்னால் முடிந்தால் உணவுகொடு.

கல்லாச் சிறுவன் கடைத்தேற உன்னால் முடிந்தால் கற்றுக்கொடு.

பாதை தெரியா ஒருவருக்கு உன்னால் முடிந்தால் வழிகாட்டு.

பேதை மக்கள் முன்னேற உன்னால் முடிந்தால். உணர்வூட்டு.

தோல்வி கண்டு துவண்டவனை உன்னால் முடிந்தால் தேற்றிவிடு.

நால்வர் நடுவில் வீழ்ந்தவனை உன்னால் முடிந்தால் தூக்கிவிடு.

கண்ணீர் சிந்தும் வறியவனை உன்னால் முடிந்தால் ஆற்றிவிடு.

- க்ஜன்

# சாக்ரடீஸ் யார்?

'அன்பனே! உன்னை அறிய முற்படு. உள்ளத்தை பரிசுத்தமாக வைத்துக்கொள். உனது ஆன்மா மேம்பாடடையும் என்று தன்னைக் காணும் மக்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டினார். வாழ்வியலின் தத்துவங்களை எளிமையாக விளக்கினார். புத்தகம் எதுவும் எழுதாமலே அவரது கருத்துக்கள் இன்றும் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தத் தத்துவ ஞானி யார் தெரியுமா?



சாக்ரடீஸ்தான். இவர் உலகின் தலைசிறந்த தத்துவஞானிகளில் ஒருவர். இவர் கி.மு. 470 இல் கிரேக்க நாட்டில் ஏதென்ஸ் நகரில் பிறந்தார். சாக்ரடீஸின் தந்தை ஸோஃப்ரோனிஸ்கஸ் சிற்பக்கலை வல்லுநர். இவரது தாயார் ஃபினா ரெடெ செவிலித்தாயகப் பணியாற்றி வந்தார். பிள்ளைப் பிராயத்தைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. இவர் இளைஞராக இருக்கும் போதே இவரது புகழ் நாடெங்கும் பரவியது.

சாக்ரடீஸ் சப்பை முகமும் மேலெழும்பிய கண்களுமாக பார்வைக்குக் குரூபியாக காணப்படுவாராம். ஆனால் அறிவிலோ இவர் தன்னிகரற்ற மேதை. எவரும் எந்த விஷயத்தைப் பற்றியும் இவரிடம் வாதம் புரியலாம். யாரோ ஒரு முறை இவரது நண்பரிடம் சாக்ரடீஸ் போன்ற மேதை உண்டா என்று கேட்டதற்கு அறிவில் இவருக்கு நிகர் யாரும் இல்லையென்று பதில் வந்தது. கடைத் தெருவில் நின்றுகொண்டு போவோர், வருபவர்களிடம் வாழ்க்கை நெறிகளைப்பற்றி இவர் விவாதிப்பாராம் மக்கள் விதவிதமான பொருள்கள் வாங்குவதைக் கண்டு தன்னால் எத்தனையோ பொருள்களின்றி நிம்மதியாக வாழமுடிகிறது என்று நினைப்பாராம்.

மனிதன் அறியாமையால்தான் கெட்ட செயல்களில் ஈடுபடுகிறான். சரி எது, தவறு எது என்ற பகுத்தறிவு வந்துவிட்டால் மனிதன் தவறான செயல்களைச் செய்யமாட்டான் என்பது சாக்ரடீஸின் கொள்கை. நற்குணங்களைப் பெறுவதே அறிவாகும். கெடுதல் செய்வதைவிட, கெடுதலைப் பொறுத்துக் கொள்வது அறிவுடைமை ஆகும் என்பது அவரது வாதம். அன்பு, நீதிநெறி இவற்றுக்குச் சரியான விளக்கம் தந்த சாக்ரடீஸ் தம்மிடம் வருபவர்களிடம் சாக்ரடீஸ் தமது உபதேச மொழிகளால் மக்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டினார். அவரது சீடர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகியது. சாக்ரடீஸ் புத்தகம் ஏதும் எழுதவில்லை. அவரது போதனைகளைப் பற்றி அவரது சீடரான ப்ளேடோ நிறைய எழுதியுள்ளார்.

– கவிதா

# நல்லதைச் செய்வோம்!

ஒரு பாடசாலையில் சுகிர்தனும் சஞ்சீவனும் நண்பர்களாக இருந்தனர். அவர்களில் சஞ்சீவன் குறும்புக்காரன். அந்த விடயம் சுகிர்வனுக்கு தெரியாது. சில நாள்கள் சென்ற பின்னர் சுகிர்வனும் குறும்புக்காரன் ஆகிவிட்டான்.





ஒரு நாள் சுகிர்வன் கடைக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது அவ்வழியே முதியவர் ஒருவர் ஊன்றுகோலுடன் நடந்து சென்றார். அவரைக் கண்ட சுகிர்வன் அம்முதியவரைத் தள்ளி விழுத்த நினைத்து அவரைத் தள்ளச் சென்றான்.



இதைக் கண்ட சஞ்சீவன் ஓடி வந்து 'இவரைத் தள்ளாதே, இவர் என் பாட்டன். இதைப் போன்ற எந்தச் செயலையும் இனிமேல் செய்யாதே' என்று கூறினான்.

அதற்கு சுகிர்வன் 'நீதானே எனக்கு இத்தகைய செயல்களை பழக்கினாய். இது என்ன உனது பாட்டனுக்கு மட்டும் தீங்கு செய்யக் கூடாது எனக் கூறுகிறாய்? என்றான்.

உடனே தான் செய்த தவறுகளை உணர்ந்து கொண்ட சஞ்சீவன் தயவு செய்து என்னை மன்னித்து விடு; எமது பாட்டனுக்கு மட்டுமல்ல எவருக்குமே எந்தத் தீங்கையும் நாம் செய்யக் கூடாது என்று அறிவுரை கூறினான்.

இதனை நன்கு உணர்ந்துகொண்ட இருவரும் நல்ல பிள்ளைகளாக மாறித் தமது நட்பினைத் தொடர்ந்தனர்.

**இ.சங்கவி**
தரம்:- 8ஏ, புனித ஜோண். பொஸ்கோ வித்தியாலயம்.

# வர்ணந் தீட்டி மகிழுங்கள்....!

போட்டி இலக்கம் – 06



**தம்பி, தங்கைகளே.....!**
மேலே காணும் படத்திற்கு வர்ணம் தீட்டி கத்தரித்து அனுப்பி வையுங்கள். அழகுற வர்ணம் தீட்டி சிறந்த படங்களை அனுப்புவோரில் முதல் மூவருக்கு முறையே ரூ.100/=; ரூ.75=, ரூ.50/= பெறுமதியான வர்ணம் தீட்டுவதற்கான உபகரணங்கள் பரிசில்களாக வழங்கப்படும். 5ஆம் தரத்துக்கு உட்பட்ட சிறுவர்களே இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியும். எங்கே முயன்று பாருங்கள்! கைவண்ணத்தைக் காட்டுங்கள்!!

இந்தப் பரிசில்களை வழங்கும் நிறுவனம்: -

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 222 5542

அனுப்பவேண்டிய முகவரி:-
**'வர்ணம் தீட்டுவோம்' - 06, சூரியகாந்தி 'சிறுவர் பொழில்'**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

வர்ணம் தீட்டி மகிழுங்கள் போட்டியில் ஏராளமான சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு படங்களை அனுப்பியிருக்கின்றனர். அவர்களில் பலர் தங்கள் பெயர் விவரம், பாடசாலை விவரம் என்பவற்றைக் குறித்து அனுப்பத் தவறியதால் அவர்களது வண்ணங்கள் தெரிவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

நீங்கள் வர்ணம் தீட்டி அனுப்பும் படத்துடன் உங்கள் பெயர், பாடசாலையின் பெயர், வகுப்பு போன்ற விவரங்களை தவறாமல் சேர்த்து அனுப்புங்கள்.

வர்ணம் தீட்டுவோம் போட்டி இலக்கம் -06 இல் தெரிவுசெய்யப்பட்ட மூவரின் விவரங்கள் வருமாறு:-

- **முதலாம் இடம் :-**
  குமாரகுலசிங்கம் வரப்பிரியன், தரம் - 1ஏ
  சென். ஜோன்ஸ் கல்லூரி.
- **இரண்டாம் இடம் :-**
  ஆ.ஹரிஷங்கர், தரம் - 4பி,
  கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
- **மூன்றாம் இடம் :-**
  ம.மயூரவாணி,
  தரம் - 5பி,
  உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

# யாழ்ப்பாணம் – வேதாரண்யம்

ஒன்றல்ல, இரண்டல்ல...் சுமார் பதினொரு ஆண்டுகளாக நடைபெற்று வந்த வழக்கு அது... இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரண்டு நாடுகளைச் சேர்ந்த தமிழர்களும் இந்த வழக்கின் தீர்ப்பு யாருக்கு சாதகமாக முடியும் என படபடப்புடன் எதிர்நோக்கியிருந்தனர். தற்போது சென்னை உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள அத்தீர்ப்பு, இலங்கை யாழ்ப்பாணவாசிகளை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியிருக்கிறது. அதேசமயம் வேறு சிலரை விரக்திப் பெருமூச்சு விடவும் வைத்திருக்கிறது.



வேதாரண்யேஸ்வரர் கோயில்

திருநாவுக்கரசர் பதிகம் பாடி, கதவுதிறந்த பெருமைக்குரியது நாகை மாவட்டம், வேதாரண்யத்திலுள்ள வேதாரண்யேஸ்வரர் கோயில். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பாரம்பரிய தொடர்பு உண்டு என்று சொல்வதற்காக இருக்கும் வரலாற்றுச் சான்றுகளில் ஒன்றாக இருக்கும் கோயிலும்கூட!

இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வரணி ஆதீனத்தினர்தான் இந்தக் கோயிலுக்குப் பரம்பரை பரம்பரையாக அறங்காவலர்களாக இருந்து வருகின்றனர். இந்தப் பரம்பரையில் வந்த கதிர்காம பண்டார சந்நிதிகள் 1988ஆம் ஆண்டு மறைந்துவிட, அதைத் தொடர்ந்து அவருடைய மகனான செவ்வந்திநாத பண்டார சந்நிதிகள், இக்கோயிலின் அறங்காவல் பொறுப்பை ஏற்றார். ஆனால், வரணி ஆதீன பரம்பரையைச் சேர்ந்த மற்றொருவரும் அறங்காவல் பொறுப்பு தனக்குத்தான் வேண்டுமென்று கேட்க விவகாரம் இந்து அறநிலையத்துறையின் விசாரணைக்குப் போனது. அங்கே தீர்வு எட்டப்படாத நிலையில் பிரச்சினையைத் தீர்க்க திருத்துறைப்பூண்டி நீதிமன்றம் படியேறினார். செவ்வந்திநாத பண்டார சந்நிதிகள். விசாரணை நடைபெற்று அவரே பரம்பரை அறங்காவலர் என்று தீர்ப்புச் சொல்லப்பட்டது.
இதையடுத்து, அடுத்தடுத்த நீதிமன்றங்களிலும் அவருக்குச் சாதகமாகவே தீர்ப்பு வர, உயர் நீதிமன்றப் படியேறியது அறநிலையத்துறை. இந்த வழக்கில் தீர்ப்பு எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தமிழக அரசு திடீர் என்று ஒரு குண்டு போட்டது.

1994ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல்வராக இருந்த நேரம் அது. தமிழக சட்டமன்றில் கோயில் அறங்காவல்கள் குறித்து ஒரு சட்ட திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன்படி 'இந்தியக் குடியுரிமை இல்லாத ஒருவருக்கு தமிழகத்தில் உள்ள கோயிலுக்கு அறங்காவலராக இருக்கத் தகுதி கிடையாது' என்பது தான் அந்தத் திருத்தம்.

இதை எதிர்த்து செவ்வந்திநாத பண்டார சந்நிதிகள் உடனடியாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். சரியாக பதினொரு வருடங்கள் உருண்டோடிவிட்ட நிலையில், நீதிபதி கே.பி.சிவசுப்பிரமணியன் தமிழக அரசின் சட்டத் திருத்தம் செல்லாது என தற்போது தீர்ப்பு வழங்கியுள்ளார். இந்த நிலையில் செவ்வந்திநாத பண்டார சந்நிதிகளை நாம் சந்தித்துப் பேசினோம்.

''இலங்கையையும் தமிழகத்தையும் சோழ மன்னர்கள் ஒரு சேர ஆண்டபோது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தில்லைநாயக தம்பிரான் என்பவரிடம் வேதாரண்யம் கோயிலை நிர்வகிக்கும் உரிமையை சோழ மன்னர்கள் அளித்தனர். தில்லைநாயக தம்பிரானுக்கு எனது மூதாதையர்கள் குருமார்களாக இருந்து வந்துள்ளனர். தம்பிரான் தனது காலத்துக்குப் பிறகு கோயிலுக்கான அறங்காவலர் உரிமையை குருமார் பரம்பரைக்கு அதாவது எனது மூதாதையர்களுக்குக் கொடுத்துவிட்டார். இந்த அடிப்படையில்தான் எங்களுக்கு கோயிலின் மீது உரிமை வந்தது. நாங்கள் யாழ்ப்பாணத்தில் வசித்தாலும், எங்கள் பூர்வீகம் தமிழகமே.

தம்பிரான் பிறந்த ஊர் வரணி என்பதால் 'வரணி ஆதீனம்' என்ற பெயரில் தொடர்ந்து நாங்கள் இக் கோயிலின் அறங்காவல் பொறுப்பை வகித்து வந்தோம். அறங்காவலருக்கு ஆண் வாரிசு இல்லையெனில், மகள் வழிப் பேரன் அறங்காவலராகின்ற உரிமை உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட வாரிசுகள் இருந்தால், யாழ்ப்பாணம் கரணவாயில் உள்ள எங்கள் ஆதீன சபை கூடி வாக்கெடுப்பு நடத்தி, யாரேனும் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும். அவருக்கு நியமன உத்தரவு வழங்கும்படி தஞ்சாவூரில் உள்ள அறநிலையைத்துறை துணை ஆணையருக்கு கடிதம் அனுப்புவார்கள். இதைத் தொடர்ந்து நியமன உத்தரவு வழங்கப்படும்.



செவ்வந்திநாத பண்டார சந்நிதிகள்

## தினமும் இலங்கையிலிருந்து பால்!

**வேதாரண்யம் என்ற வார்த்தைக்கு, தூய தமிழில் 'திருமறைக்காடு' என்று பொருள். அக்காலத்தில் எங்கும் காட்டு வழிப்பாதைதான். தஞ்சையிலிருந்த சோழ வம்சத்தவர்கள் தரை மார்க்கமாகக் காட்டு வழியில் வேதாரண்யம் வந்து கோயிலை நிர்வாகம் செய்வதென்பது எளிதான காரியமல்ல என்று கருதித்தான் இலங்கையைச் சேர்ந்தவருக்கு அந்த உரிமையை வழங்கியதாகவும் ஒரு செவி வழிச்செய்தி உண்டு. ஒரு காலத்தில் இக்கோயிலுக்குத் தேவையான பால்கூட தினமும் இலங்கையிலிருந்து படகு மூலம் வந்ததுண்டு என்கிறார்கள். பல பெருமைகளுடைய வேதாரண்யேஸ்வரரை, முன்னர் '13ஆயிரம் ஏக்கருக்கு அதிபதி' என்று அழைப்பார்கள். காலப்போக்கில் இதில் பல ஏக்கர் நிலங்கள் பட்டாக்களாக மாற்றப்பட்டதோடு, வளத்துறையினரிடமும் குறிப்பிட்ட அளவு நிலங்கள் ஒப்படைக்கப்பட்டு விட்டன. அதனால் இன்று வேதாரண்யேஸ்வரர் 10,748 ஏக்கருக்கு மட்டுமே அதிபதியாக உள்ளார்.**

இப்படித்தான் எனக்கும் நியமன உத்தரவு வழங்கப்பட்டது. இந்த நிலையில்தான் எங்கள் பரம்பரையைச் சேர்ந்த குமாரசாமி என்பவர் அறங்காவல் உரிமை கேட்டு பிரச்சினை செய்தார். என்னிடம் எல்லா ஆதாரங்களும் தெளிவாக இருந்தன. ஆனால், அதற்குள்... என்று சொல்லி சட்டென்று நிறுத்திக் கொண்டவர் என்ன நினைத்தாரோ..

''வேறு எதைப் பற்றியும் நான் பேச விரும்பவில்லை. மொத்தத்தில் 'நியாயம் அழிந்து விடவில்லை. நல்லவர்களுக்கு வாழ்வு உண்டு' என்பதை இந்தத்தீர்ப்பு உணர்த்தியிருக்கிறது'' என்று முடித்துக் கொண்டார்.

இடையில் என்னதான் நடைபெற்றது என்பதை நாம் அறிய முற்பட்டபோது வேதாரண்யத்தைச் சேர்ந்த பொதுநலவாதி ஒருவர் நம்மிடம் பல விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

'தீவிர இறைபக்தி கொண்ட வரணி ஆதீனத்தினரில் பெரும்பாலானவர்கள் அறங்காவல் பொறுப்பை ஒரு கௌரவப் பணியாகத்தான் கருதுகின்றனர். வரவுசெலவு கணக்குகளைக் கச்சிதமாகக் கையாளும் இவர்கள், இதுவரை சிறு குற்றச்சாட்டுக்குக்கூட இடம் கொடுத்ததில்லை. இந்நிலையில் உள்ளூரில் உள்ள சில முக்கிய அரசியல் புள்ளிகள் வரணி ஆதீனத்தினரை அறங்காவல் பொறுப்பிலிருந்து தூக்கிவிட்டால் கோயில் பணத்தில் கைவைக்கலாம் என்று திட்டமிட்டனர். இதையடுத்தே வரணி ஆதீனத்தைச் சேர்ந்த வேறொருவரை வழக்குத் தொடுக்கத் தூண்டி விட்டனர்.

அத்துடன், 'காலாவதியான பாஸ்போர்ட் விசாவுடன் செவ்வந்திநாதர் இருக்கிறார். பெட்டகச் சாவியை அவரிடம் கொடுக்கக் கூடாது' என்றெல்லாம் வழக்குத் தொடுத்தனர். எல்லாவற்றையும் முறையாக வைத்திருப்பதைத் தக்க ஆதாரத்துடன் அவர் நிரூபித்துவிட்டார். இதையடுத்து பெட்டகச் சாவியை செவ்வந்திநாதரே வைத்திருக்கலாம் என்று கீழ் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது. அத்துடன், அறங்காவலராகும் உரிமையும் அவருக்குத்தான் என்பதும் உறுதியானது. ஆனால், அறநிலையத் துறையினர் மேன்முறையீடு செய்துவிட்டனர். அந்த அரசியல் புள்ளிகள் விவகாரத்தை வீரியமாக்கிவிட சட்டமன்றத்திலும் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு விட்டது. அறநிலையத் துறை மேன்முறையீடு செய்த வழக்கு மட்டும் நிலுவையில் இருக்கிறது. அதிலும் இவருக்கு சாதகமாகத்தான் தீர்ப்பு வரும்..

செவ்வந்திநாதருக்கு எந்த வருமானமும் இல்லை. கஷ்ட ஜீவனம் தான் நடத்துகிறார். இந்தப் பதினொரு ஆண்டுகளில் வழக்குக்காக ஏராளமாகச் செலவு செய்துவிட்டார். அவருடைய மாமனார் குடும்பமும் யாழ்ப்பாண ஆதீன சபையும்தான் வழக்குக்குத் தேவையான நிதி உதவிகளைச் செய்திருக்கிறது. எதிரணியினரால் இவரது உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து, அவசரகால உதவிக்கு ஒரு செல்போனையும் வாங்கிக் கொடுத்துள்ளனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிப் பெருமூச்சு விட்டவர் -

''சோழ மண்டலத்தில் மூன்று கோயில்களில் மரகதலிங்கம் இருந்தது. வேதாரண்யம் கோயிலைத் தவிர மற்ற இரண்டு கோயில்களிலும் இருந்தவற்றைப் பட்டப்பகலிலேயே கொள்ளை அடித்து விட்டனர் . விலை மதிப்பில் லாத மரகத லிங்கம் இங்கு மட்டும் பாதுகாப் பாக இருக்கக் காரணம் பண்டார சந்நிதிகள் அறங்காவலராக இருப்பதுதான். இல்லை யெனில், அதை என்றோ விற்றுப் பங்கு போட் டிருப்பார்கள்' என்று முடித்துக் கொண்டார்.

தற்போது சட்ட திருத்தம் உடைக்கப்பட்டு விட்ட நிலையில் செவ்வந்திநாத பண்டார சந்நிதிகளுக்கு பரம்பரை அறங்காவலர் நியமன உத்தரவை அறநிலையைத் துறையினர் வழங்கவேண்டும். இப்போதாவது வழங்குவார்களா அல்லது புதிதாக ஏதாவது இடைஞ்சல் முளைக்குமா என்பது போகப் போகத்தான் தெரியும்....

*நன்றி : ஜூனியர் விகடன்*

# என்னத்தைத்தான் .....

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

ஆட்சி குறுகிய காலத்திற்குள் முடிவுக்கு வந்தாலும் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உருவாவதற்கு அடித்தளமாக அமைந்தது.

ஒக்ரோபர் மாதத்தில் அரச தரப்பிலிருந்த ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸாநாயக்கா, பந்துல குணவர்த்தன ஆகியோர் எதிர்க்கட்சியுடன் இணைந்ததைத் தொடர்ந்து அரசு கவிழ்ந்தது.

2001 டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணி தோல்வியடைந்தது; ஐ.தே.கட்சி ஆட்சி அமைத்தது. ஜனாதிபதியும், பிரதமரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்ற கருத்தில் உருவாக்கப்பட்ட அரசமைப்பில் அதற்கு மாறுபட்ட விதத்தில் நிலைமைகள் உருவாகின. பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த சந்திரிகா ஜனாதிபதியாகவும் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்கா பிரதமராகவும் பணியாற்ற நேர்ந்தது.

**சந்திரிகா - ரணில் முறுகல் நிலை**

ரணிலும் அவரது தரப்பினரும் தங்களுக்குக் கிடைத்த மக்கள் ஆணையானது ஜனாதிபதிக்குக் கிடைத்த மக்கள் ஆணையை விஞ்சிவிட்டது எனக் கருதினர். ஆனால், தனக்கு கிடைத்த மக்கள் ஆணையை எவராலும் எதுவும் செய்யமுடியாது என ஜனாதிபதி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டது மற்றும் சமாதானப் பேச்சுகளுக்கான சூழ்நிலையை உருவாக்கியது ஆகியன ரணிலின் நிர்வாகத்தின்போது இடம்பெற்ற முக்கியமான சம்பவங்கள் எனக் கூறமுடியும். இருப்பினும், ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையே நிரந்தரமான முறுகல் நிலையே தொடர்ந்து நிலவிவந்தது. இந்த முறுகல்நிலை காரணமாக 2003 நவம்பர் 3ஆம் திகதி மூன்று முக்கிய அமைச்சுகளை ஜனாதிபதி ரணிலின் அரசிடமிருந்து பறித்தெடுத்துக் கொண்டார்.

இந்த நிலைமையை நேர்சீர் செய்வதற்கு ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையேயும் அவர்களது பிரதிநிதிகளுக்கிடையேயும் பல சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றன. மனோ தித்தவெல, மலிக் சமரவிக்கிரம ஆகியோருக்கிடையே நடைபெற்ற பேச்சுகள் மனோ - மலிக் பேச்சுகள் என அழைக்கப்பட்டன. இருப்பினும், இந்தப் பேச்சுகள் எவையும் நல்ல முடிவைத் தரவில்லை.

அதேசமயம், சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே தொடர்ந்து நடைபெற்று வந்த பேச்சுகளின் பிரதி பலனாக கூட்டணி அமைக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்திலேயே ஆகும். 2004 ஜனவரி பிற்பகுதியில் அவ்விரு கட்சிகளும் கூட்டணி உடன்பாட்டில் கைச்சாத்திட்டன. அதையடுத்து பெப்ரவரி மாதத்தில் ரணிலின் அரசு கலைக்கப்பட்டது. ஏப்பிரல் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. இருப்பினும், அரசுக்கு நாடாளுமன்றத்தில் தெளிவான பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஹெல உறுமயவைச் சேர்ந்த 9 தேரர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவானதைத் தொடர்ந்து எக்கட்சிக்கும் தெளிவான பெரும்பான்மை கிடைக்காத நிலை உருவானது. இதன் பிரதிபலனே எதிர்கட்சி வேட்பாளர் வி.ஜே.எம்.லொக்குபண்டாரா சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட சம்பவமாகும். தந்திரோபாய வழிகளில் மூலம் சந்திரிகா அரசிற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைத்த போதிலும் ஜே.வி.பி. அரசை விட்டு விலகியதைத் தொடர்ந்து அந்த அரசிற்கும் பிரச்சினைகள் உருவாகின.

**ஜே.வி.பி. விலகல்**

2005 ஜுலை 15ஆம் திகதி ஜே.வி.பி. சந்திரிகாவின் அரசை விட்டு வெளியேறியது. ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக் கட்டமைப்பு உடன்பாட்டில் அரசு கைச்சாதிட்டதை எதிர்த்து ஜே.வி.பி வெளியேறியது. அக்கட்சி வெளியேறிய போதிலும் ஜனாதிபதி தனது நிலையை மாற்றிக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக நாடாளுமன்றத்தில் சிறுபான்மை அரசுடன் காலத்தைப் கொண்டுபோவதே அவர் தேர்ந்தெடுத்த வழியாகும்.

எவ்வாறாயினும், பொதுக்கட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமையை சந்திரிகாவுக்கு ஏற்பட்ட தோல்வி என்றே கூறலாம்.

**ஜனாதிபதிப் பதவிக் காலம்**

ஜனாதிபதி சந்திரிகா ஓய்வுபெறும் விடயத்திலும் அரசியல் சிக்கல்கள் உருவாகின. 2006 ஆம் ஆண்டு இறுதிவரை அவர் பதவி வகிக்கலாம் என அரசு வாதிட்டது. ஆனால், 2005ஆம் ஆண்டுடன் அவரது பதவிக்காலம் முடிவடைகிறது என ஐ.தே.கட்சி வாதிட்டது. முடிவில் இப்பிரச்சினைக்கு தேர்தல் ஆணையாளரும் உயர் நீதி மன்றமும் நீதியரசர்களும் தீர்வு கண்டனர். இதன்படி இம்மாதம் 17ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று அதன் பின் இரு வாரங்களுக்குள் புதிய ஜனாதிபதி பதவியேற்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், சந்திரிகாவின் 11ஆண்டு கால ஜனாதிபதிப் பதவிக்காலம் முடிவடைகிறது.

சந்திரிகா ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவரது செயற்பாடுகள் அத்துடன் முடிந்துவிடும் எனக் கூறமுடியாது. அவர் வேறு விதத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும். அல்லது சமூகப் பணியில் ஈடுபடக்கூடும். எனவே, சந்திரிகாவின் செயற்பாடுகள் அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் முற்றுப் பெற்றுவிடும் எனத் தற்போது கூறமுடியாது.




காட்டரசனுக்கும் நாட்டரசனுக்குமிடையில் முரண்பாடு . நாட்டரசனின் ராணிக்கு காட்டரசன் மீது ஒரு வித பிரேமை. முரண்பாடு முற்றியதால் அரசர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுவிட்டது. அரசியை வாளைக் கொண்டு வரும்படி கூறினான் நாட்டரசன். வாளை எடுத்துவந்த அரசி வாளின் உறையை கணவனான அரசனிடம் கொடுத்துவிட்டு காதலன் காட்டரசனிடம் வாளைக் கொடுத்தாள். போர் நடந்தது. அரசனைக் கொன்று விட்டு காட்டரசன் புறப்பட்டான். அவன் பின்னாலேயே போகத்துணிந்த அரசியைப் பார்த்து அவன் "கணவனுக்கே துரோகம் செய்த நீ எனக்கு என்ன செய்யமாட்டாய்?" என்று கூறி அவளைக் கைவிட்டு தன்வழியே சென்றான். இதுதான் கதை. ஆனால், இந்த சித்திரத்தில் தோன்றும் அரசி வாளை யாரிடம் கொடுக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறாள். நாட்டின் அரசியலை விமர்சிக்கிறது இக்கேலிச் சித்திரம்.

# யுத்தத்தால் தீர்வு காண .....

*(IIபக்கத் தொடர்ச்சி)*

இணைப்பதாகும். இந்த இணைப்பாட்சித் திட்டத்தின் மூலம் வடக்கில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிர்வாக அமைப்பை நீக்குவதாகும். இருப்பினும், இரு தசாப்தங்களாக யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாத இந்த வடக்கு - தெற்கு யுத்தத்திற்கு ஒரேயொரு தீர்வுதான் உள்ளது. அதுவே சமஷ்டித் தீர்வை ஏற்றுக்கொள்வதாகும்.

ரணில் விக்கிரமசிங்காவினதும் சந்திரிகாவினதும் கருத்து இதுவேயாகும். நாட்டைப் பிரிக்காமல் பேச்சுகள் மூலம் தீர்வுகாண்பதற்கு நாட்டை ஐக்கியப்படுத்துவதாகும். நிர்வாக முறைகளை ஐக்கியப்படுத்துவதாகும். இதன்மூலம் ஒற்றையாட்சி முறையிலுள்ள தனி (மத்திய) ஆட்சிமுறை ஒழிக்கப்படும்.

**ஜே.வி.பியின் திட்டம்**

விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ள இந்தச் சமஷ்டி முறையை ஜே.வி.பி. எதிர்க்கிறது. அவர்கள் இந்த இனப்பிரச்சினைக்கு முன்வைத்துள்ள திட்டம் யுத்தமாகும்.

இருப்பினும், யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதை ஜே.வி.பி. கூட உள்மனதில் விரும்பவில்லை என்பது சந்திரிகா அர[illegible]ளிகளாக இருந்த காலத்தில் தெளிவானது. திருகோணமலையில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட முகாமை (மணி[illegible]) அகற்றவேண்டும் என பொ.ஐ.முன்னணிக்கு ஜே.வி.பி. அழுத்தம் கொடுக்காமைக்கான காரணம் அவ்வாறு அழுத்தம் கொடுத்தால் அது மீண்டும் யுத்தத்திற்கு வழி கோலும் என்பதாலேயாகும்.

அது அவ்வாறு இருப்பினும், ஜே.வி.பியின் ஒற்றையாட்சிக் கோட்பாட்டின்படி இது தீர்வு காணமுடியாத பிரச்சினையாக உருவாகியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் தென்பகுதி அரசுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட பேச்சுகளின் பிரதிபலனாக யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரிய அளவில் இடம்பெற்ற யுத்தத்திற்கு ஏற்பட்ட அந்த முடிவு (நிறுத்தம்) முழு நாட்டிற்குமே நன்மையாக அமைந்துள்ளது. இருப்பினும், சிற்சில காரணங்களால் அந்தப் பேச்சுகள் இடை நிறுத்தப்பட்டன. அரசு (ரணிலின்) கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பேச்சுக்களை மீண்டும் தொடர முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

சமாதானப் பேச்சுகள் இடைநடுவில் கைவிடப்பட்ட பின்னர் நாட்டின் பொருளாதாரத்தில் சரிவு காணப்பட்டது.

தமிழ்மக்கள் மீண்டும் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளானார்கள். இதனால், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடபகுதியை வெளிநாட்டு உதவிகளை விடுதலைப் புலிகள் பெற்று மீண்டும் கட்டியெழுப்பும் பணிகள் கடினமாயின. விடுதலைப் புலிகளின் உள உரம் பாதிக்கப்பட்டது. மீண்டும் யுத்த மேகம் சூழக்கூடும் என்ற நிலையில் 2003 ஆம் ஆண்டு 4.5 பில்லியன் வெளிநாட்டு உதவியுடன் நாட்டில் அபிவிருத்தியை மேற்கொள்ளவிருந்த வாய்ப்பு இல்லாமல் போயிற்று.

நாட்டின் எதிர்காலத் தலைவர்களுக்கு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய உண்மையான தேவையும் அவசியமும் இருக்க வேண்டும். தொடர்ந்தும் யுத்தத்தை அதிகாரத்தைப் பெறுவதற்கும் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கும் அரசியல் துரும்பாகப் பயன்படுத்தக் கூடாது.

இருப்பினும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாட்டின் எதிர்கால ஜனாதிபதியாக வரும் வாய்ப்புக் கிடைத்தால் அவரது தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் அவரது தேர்தல் மேடைகளில் குரலெழுப்பியோரின் கருத்துகள் மற்றும் உடன்பாடுகளின்படி மீண்டும் நாட்டில் யுத்த சூழ்நிலை உருவாவதைத் தடுக்க முடியாது.

மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதியாக வாய்ப்புக் கிடைத்தால் ஸ்ரீல.சு. கட்சியின் தலைமைத்துவம் சந்திரிகாவின் கைகளில் இருந்து பறியும் நிலையைக் காப்பாற்ற முடியும். தற்போது ஸ்ரீல.சு. கட்சியின் அதிகாரம் மஹிந்தவைச் சென்றடையும் நிலையில் உள்ளது. ரணில் ஜனாதிபதியானால் இந்த தலைமை மாற்றத்தை மாற்றும் பொறுப்பு ரணிலுக்கே உள்ளது.

தற்போதுள்ள நிலையில் ஒரு நல்ல காரியம் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, யுத்தத்திற்கு முடிவு காணக்கூடிய வாய்ப்புகள் உருவாகக்கூடும். ஏனெனில், களத்திலுள்ள இரண்டு பிரதான வேட்பாளர்களும் யுத்தத்திற்கு முடிவு காணவேண்டும் என்ற ஆவலோடு இருப்பதேயாகும்.

## விரியும் திசை நோக்கல்..

சேற்றினால் எழுதப்பட்ட
உடல்களுடன்
நடமாடும் உலக முகம் முன்
[illegible] கவிந்து கலுழ்கிறது மனசு.

நேற்றும் இன்றும் இன்னுமாய்
போற்றும் வாழ்வுப் புதையல்
ஆற்றுப்படுத்தலின்றி அலைகிறது!
பிடித்திருத்தி....
தேற்றி ஊக்கி
துயர் துடைத்தெறிந்து - ஒருக்கால்
மாற்றிவிட வேண்டாமோ?
மானுடத்துத் துயர் உலகை
சிற்றமடக்கி நீ
சிரிக்க வைக்கக் கூடாதோ?
மாற்றான் வேல்பட்டு
வீழ்ந்து குறுகுதல் போல்
தோற்றுப் பிதுங்கி - கண்ணீர்
ததும்பி வெதும்பி
மாற்றுடையின்றி மடங்குதலை
மண்ணில் காணுதல் தகுமோ?
நூற்றுக்கணக்காய்
நள்ளான் படையெடுப்பு - யாவற்றையும்
தூர்த்து விழுத்தி முடுதலை
துடுக்காய் நீ தடுக்கக் கூடாதோ?
சோற்றுக்காக வாழ்க்கை
சுதந்திரம் தான் எழுக!
ஈற்றில் 'எங்கும்' போகாது
இளைத்தொதுங்கி
ஊற்றெடுக்கும் கணங்களிலே
உறுதி குலைந்து கிடப்பாயோ?
வா தோழனே என் கைபற்று
அதோ பார்த்தாயா
விரிகிறது திசைகள்!

த.அஜந்தகுமார்

## பயணத்தின் தேடல்

ரணங்களின் வலியூடு
தொடரும் அவனின்
சின்னப் பயணமது
தன்னை,
தன் உறவுகளைத்
தொலைத்திட்ட
எத்துணை
தடுப்புச் சுவர்களை
உடைத்தெறிந்தான்?
முன்னேற எத்தனித்து
முயலும்
பயண மெதிலுமே
அவனது உணர்வுகள்
மழுங்கடிக்கப்பட்டன!
ஏதோ ஒன்று
அவனின் பாதத்தை
இழுப்பதுவாய்
பிரமை அவனுளே!
அதைத் தளர்த்தி
பிரமிப்பைச் சிருஷ்டிக்க
எதையெதையோ
நிகழ்த்தினான்!
அவனின்
கற்பனைகள்
மதிக்கப்படுமா?
அன்றி
மிதிக்கப்படுமா?
அவனறியான்
ஆனால்,
தெளிவாயிருந்தான்
தன் போக்கில் தானாகவே!

ச.நிரஞ்சனி

# தமிழ் மக்களே!

## நீங்கள் ரணிலுக்கு வாக்களிக்க வேண்டியது ஏன்?

- தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாட்டையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் கைச்சாத்திட்டு 20 வருடப்போருக்கு முடிவு கட்டியவர்.
- 10 வருடங்களாக மூடப்பட்டிருந்த ஏ-9 பாதையைத் திறக்க வழிவகுத்து பல சௌகரியங்களை ஏற்படுத்தியவர்.
- தமிழ் மக்கள் தமது பூமியில் சுதந்திரமாக நடமாடுவதற்கு கணிசமான அளவுக்கு உதவியவர்.
- தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்கியவர் இவரே.
- சமஷ்டி முறையில் அதிகாரங்களைப் பகிர்வதே இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு என்று பிரகடனப்படுத்தி உள்ளவரும் ரணிலே!
- இருள் சூழ்ந்திருந்த வடபகுதிக்கு ஒளியூட்டியவர்.
- நிரந்தர சமாதானம் எட்டப்படாத போதிலும் தமிழ் மக்களின் வாழ்வில் ஓரளவுக்கேனும் நிம்மதியை ஏற்படுத்தியவர்.
- வடக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் பொலீஸ் பதிவு, சோதனைகள் என்பவற்றை நீக்கியவர் ரணிலே!
- தலைநகரில் அமைக்கப்பட்டிருந்த பெரும் எண்ணிக்கையிலான சோதனைச் சாவடிகளை நீக்கி போக்குவரத்தைச் சீராக்கியவர். சோதனைகளுடன் வாழந்த தமிழ் மக்களின் துன்ப துயரங்களைத் துடைத்தவர்.



**நாட்டின் சமாதானம் சீர்பெறவும்**
**நிலைக்கவும் வழி செய்யக்கூடிய**
**ஒருவர் ரணில் மட்டுமே!**
**இம்முறை தெரிவு செய்யுங்கள்.**
**பெரும் நற்பயன்களை நிச்சயம்**
**பெறுவீர்கள்.**

ரணிலுக்கே
வாக்களியுங்கள்

# ரணில் விக்கிரமசிங்கா

ஐக்கிய தேசிய கட்சி

X

# இசை நாடக உலகில் மறக்க முடியாத பெயர் வி.என்.செல்வராஜா


**தமிழ் மக்களே!**

நீங்கள் ரணிலுக்கு வாக்களிக்க வேண்டியது ஏன்?



நாட்டின் சமாதானம் சிறப்புறவும் நிலைக்கவும் வழி செய்யக்கூடிய ஒருவர் ரணில் மட்டுமே!

இம்முறை தெரிவு செய்யுங்கள், பெரும் நற்பயன்களை நிச்சயம் பெறுவீர்கள்.

ரணிலுக்கே வாக்களியுங்கள்

ரணில் விக்கிரமசிங்க


**ஈழத்து இசை நாடக உலகில் முத்திரை பதித்தவர்களில் ஒருவர் சீரணியைச் சேர்ந்த முதுபெரும் கலை ஞர் கலாபூஷணம் வி.என். செல்வ ராஜா**

**அவர் அமரத்துவம் அடைந்ததன் முதலாவது ஆண்டு நிறைவு அண்மையில் நினைவு கூரப்பட்டது. அதனையொட்டி நடிகர் வி.என். செல்வராஜா குறித்த ஒரு நினைவுப் பார்வை இங்கு விரிகிறது.**

''கால்கள் நோகுதம்மா கொஞ்சம் கரு ணை செய்யம்மா
காவலால் உலகாளும் ராணியே கோப மாகுமா
அல்லியம்மா கால்கள் நோகுதம்மா கரு ணைசெய்யம்மா''

என்று அர்ச்சுனனாகி அல்லியிடம் சரசம் செய்யும் பாட்டைத் தன் மதுரக்குரலால் பாடி இதமாக நடித்து மக்கள் மனதைக் கொள்ளை கொண்டவர் கலாபூசணம் அமரர் வி.என் செல்வராசா.

இசைநாடக மேதை என்று எல்லோராலும் புகழப்படும் வி.என் செல்வராசா 29.10.1934இல் புவியரங்கில் பிரவேசித்தார்.

சீரணிப்பதியை தன் வசிப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஒன்பதாவது வயதிலே அரிச்சந்திரா நாடகத்தில் லோகிதாசனாக கலை அரங்கில் கால்பதித்தார். அன்றில் இருந்து தனது அந்திய காலம் வரை கலை உலகோடு பின்னிப்பிணைந்தே தனது வாழ்க்கையை நிறைவாக்கியவர் வி. என்.

இவரது மைத்துனரான நாடக யுவராஜ் அமரர் CT.செல்வராசாவுடன் பவளக் கொடி நாடகத்தில் கிருஷ்ணனாகவும் அருச்சுன னாகவும் தோன்றி நடிக்கும்போது காண்போர் ஆனந்த நிலையை எய்துவர்.

பாடலிலும் நடிப்பிலும் ஆளுக்காள் சளைக்காமல் இருவரும் அற்புதமாக த் தமது திறமைகளை வெளிப்படுத்தி சபையோரைச் சொக்கச் செய்து விடுவார்கள்.

வி.என்.செல்வராசா 'சின்னச் செல்வராசா' என்றும் 'பாட்டுக்காரச் செல்வராசா' என்றும் அன்பாக அழைக்கப்படுவார். தென்னிந்தியக் கலைஞர்கள். ஈழத்திற்கு வருகை தந்து நாடகங்களை நடத்திய காலங்களில் அவர்களோடு இணைந்து இருவரும் நிகராக நடித்துப் புகழீட்டியவர்.

நகமணி வைரமுத்து, நாடக திலகம் நற்குணம், இசை நாடகக்கலைஞர் கனகரத்தினம், திரு மதி சந்திரா சரவணமுத்து, நடிக கலா மணி செல்வரத்தினம், கலை வேந்தன் தைரியநாதன், திருமதி ராம லட்சுமி போன்ற கலைஞர்களோடு இவர் நடித்து நாடகமேடையை ஜனரஞ்சகமாகவும் கலகலப்பாகவும் வைத்திருந்தவர்.

### இந்தியாவில் முறைப்படி சங்கீதம் கற்றார்!

இந்தியாவுக்குச் சென்று வித்துவான் எஸ்.எஸ்.ரங்கப்பாவிடம் முறைப்படி சங் கீதத்தைக் கற்றவர். தனியாகக் கச்சேரி செய்யும் திறமையும் அவரிடம் இருந்தது. சத்தியவான் சாவித்திரியில் சத்திய வான்,வள்ளிதிருமணத்தில்வேடன், வேலன்,விருத்தன், பவளக்கொடியில் கிருஷ்ணன், அருச்சுனன், நல்ல தங்காளில் நல்லண்ணன் போன்றபாத்தி ரங்கள் இவருக்குப்பெரும் புகழ் ஈட்டித்தந் தவை.

கண்ணொளிமங்கிய காலகட்டத்திலும் தனது அற்புதமான நடிப்பினாலும் இனிய பாடல்களினாலும் அரங்கை நிறைவு கொள்ளவைத்தவர்.

### புதிய முயற்சிக்கு வித்திட்டவர்

நடிகமணி வைரமுத்துவின் மறைவு, இந்தியஇராணுவ வருகை என்பவற்றினால் சிலகாலம் இசைநாடக உலகு சற்று சோபையிழந்து காணப்பட்டது.

அதாவது 1990களில் அகில இலங்கை கம்பன் கழகம் ஒரு புதுமுயற் சியில் ஈடுபட்டு அதன்மூலம் குறுகிய கால நேரத்தில் மேடையேற்றத்தக்க தாக சத்தியவான் சாவித்திரி, மயான காண்டம் ஆகிய நாடகங்கள் சுருக்கமாக த் தயாரிக்கப்பட்டன.

இம் முயற்சிக்கு மிகவும் ஊக்க மளித்து நடிககலாமணி செல்வரத்தினத்தையும் கலைஞர் கனகரத்தினத்தையும் இணைத்து கம்பன்கோட்டம், யாழ். பல்கலைக் கழகம், யாழ்ப்பாணக் கல் லூரி, துர்க்கை அம்மன் கோயிலடி போன்ற இடங்களில் நாடகங்கள் மேடையேறுவதற்குப் பெரிதும் உதவி புரிந்தவர் அமரர் வி. என். செல்வராசா.

பல்வேறுபட்ட ரசிகர் மட்டங்களையும் கவர்ந்திழுக்கும் இவரது பாடல், நடிப்பு என்பன சொல்லில் வடிக்கமுடியாதளவுக்கு சுவையானவை. இன்று மேடையேற்றப்படும் நாடகமேடைப் பாடல் நிகழ்ச்சி அதாவது பல்வேறு நாடகப்பாடல்களை ஒரே மேடையில் ஒப்பனை இன்றி பக்க வாத்தியங்கள் சகிதம் பாடுதல் அமரர் வி.என். அறிமுகம் செய்துவைத்த நிகழ்ச் சியே ஆகும்.

### வி.என்.பாணி

அமரர் வி.என்.செல்வராசாவின் இசைப் புலமை நாடகப்பாடல்களைப் பாடும் இலாவகம் என்பன தனித்துவம் வாய்ந்தவை வி.என்.பாணி என்று அவரது ரசிகர்கள் மகிழ்ந்து பேசுவர். பாடல்களிடையே அவர் செய்யும் இராக ஆலாபனை அற்புதம் வாய்ந்தது.

சத்தியவான் சாவித்திரி நாடகத்திலே ''ஏனோ எனை எழுப்பலானால் மட மானே'' என்ற பாடலைப்பாடி அதனூடு அவர் அந்தப்பாடலின் இராகத்தை ஒவ்வொரு வரிக்கும் வேறு வேறான வகையிலே ஆலாபனை பண்ணி அந்தக் காட்சியை மிகவும் சுவையாகவும் ரசனையானதாகவும் ஆக்கி விடுவார்.

வள்ளிதிருமணத்திலே வி.என். வேலனாக கழுகாசலத்தில் வீற்றிருப்பார். நாரதர் வள்ளியைக் கண்ட விடயத்தை சொல்வதற்கு வருவார். இந்தக்காட்சியிலே அருமையாக எழுதப்பட்ட சங்கரதாஸ் சுவாமிகளின் பாடலின் ஒவ்வொரு வரியையும் ஒவ்வொரு இராகத்திலே இராகமாளிகையாக வி.என்.மிகவும் அலங்காரத்துடன் அற்புத பாவத்துடன் பாடுவார். இசைப் புலமை வாய்ந்தவர். நாரதராக வந்துசேர்ந்தால் இருவரும் சேர்ந்து அதியற்புதமான இராக மாளிகையைக் கட்டி ரசிகர்கள் அனைவரையும் அங்கே அமர்த்திவிடுவார்கள்.

### இளம் கலைஞர்களை ஊக்குவித்தார்

வி.என் நல்ல கலைஞர் மட்டுமல்ல நல்ல பண்புவாய்ந்த மனிதரும் கூட. நாட கப்பாடல்களை நாடக அனுபவங்களை பல இளம் கலைஞர்களுக்கு கற்றுத்தந் திருக்கின்றார்.

உடல் நிலை தளர்வுற்ற வேளையிலும் இல்லம் நாடிச் செல்பவர்களை அன்பாக வரவேற்று தட்டிக்கொடுத்து உற்சாக மாகச் சொல்லிக்கொடுக்கும் தன்மை கொண்டவர். நகைச்சுவையாகப் பேசும் திறமை கைவரப்பெற்ற வி.என்தனது சூழலை என்றும் சந்தோஷமாக வைத்திருப்பார்.

இசைநாடகம் நல்லமுறையில் பயிலப்படவேண்டும்;பேணப்பட வேண்டும் என்ற ஆதங்கம் அமரரிடையே என்றும் இருந்து வந்துள்ளது. அதனால் தான் இளங்கலைஞர்களுக்கு என்றும் உற்சாகம் கொடுத்து வந்துள்ளார். இசை நாடக உலகம் அவருக்கு நிறையவே கடன் பட்டிருக்கின்றது.

எனவே இன்றைய இளைய தலைமுறையினர் எல்லோரும் ஒன்று சேர்ந்து வளமான இக்கலையினை நல்ல முறையில் வளர்த்தெடுத்துச் செல்ல வேண்டும் இதுவே கலாபூசணம் வீ.என். செல்வராசா அவர்களுக்கு நாங்கள் செலுத் தும் நன்றிக் காணிக்கையாக அமையும்.

நா.விமலநாதன்
ஆசிரியர்


**மெல்லிய உடம்பிற்கு**

உங்கள் அல்லது உங்கள் குழந்தையின் உடல் மெலிவானதும் பலவீனதுமானதா?

சந்தேகமின்றி உபயோகியுங்கள்!

எப்பட்டன் வெயிட் கெயின் அதிபோஷாக்கு பாலுணவு



வளர்ந்தவர்க்கும் பிள்ளைகளுக்கும்

APPETON Weight Gain

யாழ் குடா நாட்டில் ஏக விற்பனையாளர்:
சிட்டி மெடிக்கல்ஸ்,
தொ.பேசி 2222198, தொ.நகல் - 2223880
மற்றும் எல்லா மருந்தகங்களிலும்

ஏக பிரதிநிதிகள்
Suri Trading Company (Pvt) Ltd
No.85/ 5, Sanjaya Mawatha, Rilaulla, Kandana.
Tel: 011 4-810251 Fax: 011 4-813110



**இதுவே எங்களுடைய சாதனை !!!**
**இது எங்கள் பொன்விழாவை**
**எட்டிப் பிடிப்பதற்கான ஒரு தொடர் பயணம்**

YAMAHA 50th Anniversary

1955 ஆம் ஆண்டு முதல் தடைகள் எல்லாவற்றையும் முறியடித்து முன்னேறி ஐம்பதாவது மைல் கல்லை கடப்பதற்கு அர்ப்பணிப்புடன் கூடிய எமது விஸ்வாசமான சேவை உதவியுள்ளது.
இன்று, நாளை மட்டுமல்ல, எதிர்காலத்திலும் தன்னிகரற்ற, முறியடிக்க முடியாத சேவையினை யமஹா மோட்டார் கம்பனியும் ஏ.எம்.டபிள்யூ நிறுவனமும் இணைந்து வழங்கும் என ஸ்ரீ லங்காவிலுள்ள எமது வாழக்கையாளர் அனைவருக்கும் உறுதியளிக்கிறோம்.



FAZER
DLX LIMITED EDITION

நாடு பூராகவும் உள்ள முகவர்களின் வலையமைப்பு

[illegible]

"Yamaha Corner" - 14/9, Sri Jinarathana Mawatha, Colombo 02. Telephone: 2304231, 2304232, 4718603. Fax: 94 11 2304266.

FOR YOUR CONVENIENCE - 24 HOURS SALES HOT LINE 077 3047251- 5

# எமது நாட்டினை பாதுகாப்பான கரங்களில் ஒப்படையுங்கள்

ரணில் சட்டத்தை தனது கையில் எடுத்து கொள்பவர் அல்ல. தனது தேவைகளுக்கு ஏற்ற வகையில் சட்டத்தை கையாளுபவரும் அல்ல. அதிகாரத்தை அடைவதற்காக தனது கௌரவத்தையும் மகத்துவத்தினையும் விட்டுக் கொடுப்பவரும் அல்ல. பல சவால்களை சந்திக்க நேரிட்ட போதெல்லாம் அவற்றுக்கு முகம்கொடுத்து அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடியவர்; என்பதை நடைமுறையில் சாதித்தும் காட்டியவர். சமத்துவத்தைப்பேண வேண்டும் என்ற நோக்கில் மக்களின் உரிமைகளை என்றென்றும் மதிப்பவர்.
ரணிலின் சிந்தனை இன்று துன்புற்று பிளவுபட்டுள்ள எமது தேசத்தை மீண்டும் ஒன்றிணைக்கும் வல்லமை கொண்டது. எம் அனைவருக்கும் நம்பிக்கைக்குரிய, தூர நோக்குமிக்க தலைமைத்துவம் தேவை.

**நமது நாடு இன்று அதனையே எதிர்பார்க்கின்றது.**



உங்கள் நிகழ்ச்சி நிரல் எனது நிகழ்ச்சி நிரலாகும்
உங்கள் பிரச்சினை எனது பிரச்சினையாகும்
உங்கள் வெற்றி எனது வெற்றியாகும்

ரணில் விக்கிரமசிங்க

## ரணில் விக்கிரமசிங்க

X

# நம்பிக்கைப் பயணம்

## புனர்வாழ்வு, புனரமைப்பு, மக்களிடையே நல்லிணக்கம் ஆகியவற்றிற்கான இடைவிடாத அர்ப்பணிப்பு




### நோக்கம்

யுத்தத்தினால் அழிவுற்ற வடக்குக் கிழக்கு மாகாணங்களை புனரமைத்து, மக்கள் மத்தியில் நல்லுறவை மேம்படுத்தல்.

### செயற்பாடு

சமூக அடிப்படையிலான அணுகுமுறை.
உட்கட்டமைப்புக்களை மறுசீரமைத்தல்.
நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவும் வகையில் தனிப்பட்டவர்களை வலுவூட்டுதல்.

### வீடமைப்பு

2004/2005இல் 365 வேலைத்திட்டங்கள்



மடுப் பிரதேசத்திலுள்ள சின்னப்பண்டிவிரிச்சான் மற்றும் பரசங்குளம் மீள்குடியேற்ற கிராமங்களில் 42 வீடுகள் அமைத்தல்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள 11 கிராமங்களில் 416 நிரந்தர வீடுகளும் 313 மலசலகூடங்களும் அமைத்தல்.

### கடற்றொழில்

2004/2005இல் 60 வேலைத்திட்டங்கள்



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் 2,400 மீனவர்களுக்கு ரூபா 30 மில்லியன் நிதி உதவி வழங்குதல்.

மட்டக்களப்பு, கருவாக்கேணி(?)யில் மீனவர்களுக்கான ஓய்வு மண்டபம்

### கல்வி

2004/2005இல் 378 வேலைத்திட்டங்கள்



முருங்கன் மகாவித்தியாலயத்தில் 3 மாடி பாடசாலைக் கட்டிடம்.

அடம்பன் மகாவித்தியாலயத்தில் 2 மாடி பாடசாலைக் கட்டிடம்.

### கண்ணிவெடி அகற்றல்

2005 ஆகஸ்ட் வரை 136,349 கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு, 18,907,511 சதுர மீற்றர் பிரதேசம் துப்புரவு செய்யப்பட்டது.



சுத்துரீழும் குரியாலையிலும் நிலக்கண்ணிகள் அகற்றப்படுகின்றன.

### நீர்ப்பாசனம்

2004/2005இல் 383 வேலைத்திட்டங்கள்



புனரமைப்புச் செய்யப்பட்ட பச்சைக்குளம்.

புனரமைப்புச் செய்யப்பட்ட கல்தாட்டுக் குளம்

### தொழிற் பயிற்சி



வடக்குக் கிழக்கில் 6,500க்கு மேற்பட்ட இளைஞர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்க ரூ.180 மில்லியன் முதலீடு.

### சுகாதாரம்

2004/2005இல் 159 வேலைத்திட்டங்கள்



மட்டக்களப்பு, மகிழவெட்டுவானில் மத்திய மருந்தகம்.

சிலாவத்துறை கிராமிய வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட நீர்த்தாங்கி, பிரேத அறை மற்றும் அம்பூலன்ஸ் தரிப்பிடம்.

### போக்குவரத்து

2004/2005இல் 40 பாலங்கள்



யாழ் மாவட்டத்திலுள்ள கைதடி பாலம்

திருகோணமலை, இறால்குழியில் படகுச் சேவை

### நீர் விநியோகம்

2004/2005இல் 818 வேலைத்திட்டங்கள்



முல்லைத்தீவு, கரைதுறைப்பற்றில் நிறுவப்பட்ட பொதுக் கிணறு

மன்னார் நகரில் புனரமைப்புச் செய்யப்பட்ட நீர் விநியோகத் திட்டம்

### நல்லிணக்கம்



பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் கொல்லப்பட்டோரின் பிள்ளைகளுக்கு நஷ்டஈடு வழங்குதல்.

மெய்யறியும் ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டவர்களில் ஒருவருக்கு இழப்பீட்டை வழங்குகிறார்

### நிவாரண உதவிகள்



வவுனியா, சிதம்பரபுரம் அகதிகள் முகாமிற்கு கிணறுகள் வழங்கப்படுகையில்

மட்டக்களப்பில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோருக்கு உதவிகள் வழங்கப்படுகையில்



மேன்மை தங்கிய சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியும் நிவாரணம், புனர்வாழ்வளிப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சரும்

"விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உட்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு 1995ஆம் ஆண்டு முதல் நான் அயராது முயன்று வந்துள்ளேன்...

எமது பிரஜைகள் இந்த நாட்டின் எப் பகுதியில் வாழ்ந்தாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், யாரின் கட்டுப்பாட்டிற்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் சுகாதார, கல்வி மற்றும் பொருளாதார வசதிகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். சமாதானத்திற்கு அபிவிருத்தி சிறந்த வழியென நாம் நம்புகிறோம்...

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் சேர்ந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை அது வழங்குகின்றது."

(ஆசிய சமூகம், செப்டெம்பர் 2005)

நிவாரணம், புனர்வாழ்வளிப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு